தென்னிந்திய
செங்குந்த மகாஜன
சங்கம்
பொன் விழா
மலர்
குமரகிரி
சேலம்
12-12-1981

சம்பந்தம் டெக்ஸ்டைல்ஸ்
பிரைவேட் லிமிடெட்

காமராஜ் நகர் காலனி, சேலம்-636 014

நிர்வாக சபை தலைவர் : திரு. S. P. சம்பந்தம்
நிர்வாக இயக்குனர் : திரு. S. P. ரத்னம்
இணை நிர்வாக இயக்குனர் : திரு. S. P. ராஜேந்திரன், B. Com.,

எங்கள் தயாரிப்புகள் :

தரமானதும் ஏற்றுமதிக்குகந்ததுமான 2 நெ. மற்றும் 4 நெ. நூல்கள் சிறந்த முறையில் தயார் செய்கிறோம்.

தொலைபேசி : எண். அலுவலகம் : 67235
வீடு : 3411 & 5878

எங்கள் தலைமை நிறுவனம் :

சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ் (பி) லிட்.,

காமராஜ் நகர் காலனி, சேலம்–636 014.

அனுமதி வழங்கப் பெற்றவை : 25000 கதிர்கள்
நிறுவப் பெற்றவை : 20000 கதிர்கள்
இரட்டை நூற்பு கதிர்கள் : 4000 கதிர்கள்

தயாரிப்புகள்

20 முதல் 80-ம் நெம்பர் வரையிலும்
2/20 முதல் 2/80-ம் நெம்பர் வரையிலும்
தரமான சிட்டம் மற்றும் கோன் நூல்களும்
சிறந்த முறையில் தயாரித்து அளிக்கிறோம்.

நிர்வாக சபை தலைவர் : திரு. S. P. ரத்னம்
நிர்வாக இயக்குனர் : திரு. S. P. சம்பந்தம்

தொலைபேசி : எண். அலுவலகம் : 5944 & 4169
வீடு : 5878 & 3411

தந்தி : 'SAMSPIN'

உ

தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம்

பொன் விழா மலர்

1981

வெளியீடு :

சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்

12-12-1981

S. P. மணவாளன், திருப்பத்தூர்.

பதிப்பு :

சேலம் மாவட்ட
செங்குந்தர் மகாஜன சங்கம்.

சேலம் மாவட்ட மாநாடு, சேலம்.

துன்மதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 28–ஆம் நாள்
13–12–1981 - ஞாயிறு

அச்சிட்டோர் :

ஜெனரல் பிரிண்டர்ஸ்,
70, ஆதி வெங்கடாஜலபதி அய்யர் தெரு,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2.
போன் : 8503

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
பொன் விழாக் குழு

கா. அ. ஷ. பத்மநாபன் * திருப்பத்தூர் *

தலைவர் :

திரு எம். பி. நாச்சிமுத்து முதலியார், பி. ஏ., பி. எல்.

துணைத் தலைவர்கள் :

திருவாளர்கள் : சி. நடராஜ முதலியார், பி.ஏ. பி.எல்., இரா. சம்பந்தமூர்த்தி முதலியார், கா. அ. ஷ. பத்மநாப முதலியார், ஏ. வி. ஆர். எம். வி. சங்கர நாராயண முதலியார், ஜே. சுத்தானந்தன், ஏ. சங்கர முதலியார், பி.ஏ., பி. எல்., பி. இராமசாமி முதலியார், பி.ஏ. பி.எல் , பி. எஸ். பாலசுப்பிரமணிய முதலியார், ஆர். என். சந்தான ராஜகோபாலன், பி. வி. இராமலிங்கம் பி.எஸ்.ஸி., பி. எல்., சி. காந்திதாஸ், எம்.ஏ. பி.எல்., எஸ். வி. ஆர். எம். நடராஜ முதலியார், கே. பி. பாலகிருஷ்ணன், ஈ. எஸ். தியாகராசன், ஆர். சோமசுந்தரம், எம்.ஏ. பி.எல்., ஐ. தனசீலன், பி.ஏ., டாக்டர் ஆனந்தவேல், எம்.பி.பி.எஸ்., பி. டி. கே. ராமசாமி முதலியார், எம். சென்னியப்பன்.

செயலாளர்கள்

திருவாளர்கள் : தி. இரா. செல்வராசன், டி. சேதுராமன், புலவர் சிலம்படியான், ஏ. துரைசாமி. பி.ஏ., பி.எல்., பொ. க. சாமிநாதன்.

உறுப்பினர்கள் :

சென்னை மாவட்டம்

திருவாளர்கள் : எம். சுப்பராய முதலியார், வி. ரெத்தின முதலியார், பி.ஏ.பி.எல்., எம். கே. பாலசுந்தர முதலியார், எம். எஸ். ரெங்கையா. பி.ஏ , எம். சிவப் பிரகாசம், பி.ஏ. (ஆனர்ஸ்), எஸ். தியாகராஜன், பி.இ., ஏ. பாலசுப்பிரமணியம்., தி. சே. பழநிவேலு, சரவண பழநிவேலு, எம். எம். தணிகைமலை, ஆர். பிச்சை, பி.ஏ. பி.எல்., தி. அ. கண்ணப்ப முதலியார், டி. எஸ். சுப்பிரமணி முதலியார், எஸ். டி. பொன்னுசாமி, எஸ். வி. இராஜாபாதர், பி. துரைபாண்டியன், பி.ஏ.,

மதுரை மாவட்டம்

திருவாளர்கள் : மா. கன்னையா, எம். மாணிக்கம், எஸ். ரத்தினசபாபதி, எஸ். சாலை, பி.ஏ., ஏ. சுப்பிரமணிய முதலியார், எஸ். எம். மூக்கையா.

தஞ்சை மாவட்டம்

திருமதி. முத்துலட்சுமி இராமலிங்கம், திருவாளர்கள் : ச. கு. பா. பழநிவேலு, க. திருஞானசம்பந்தம், தெ. சம்பந்த முதலியார், என். விநாயகமூர்த்தி, பி.ஏ. பி.டி.,

திருச்சி மாவட்டம்

திருவாளர்கள்: டாக்டர் மு. கருணாநிதி, எம் பி., பி.எஸ்., து. பழனியாண்டி, ப. செல்வராசன், பி.ஏ., சிவ. தியாகராஜன், எஸ். என். சோமசுந்தரம், ஏ. மாரியப்ப முதலியார்.

உ
சிவமயம்

செங்குந்தர்

கொடி வணக்கம்

ஆனந்தக் களிப்பு

பல்லவி

வீரர்மணிக் கொடிபாரீர்-அதை-வேண்டிப்பணிந்து
புகழ்ந்திட வாரீர் (வீரர்)

சரணம்

வண்மையுயர் திருக்கம்பம்–அதன்
மாமுடிமேலே யெழுதித்திகழும்
உண்மைச் செங்குந்தர் தம்நாமம்-இந்த
உலகெங்கும் வீசிப்பரந்தது காணீர் (வீரர்)

வேங்கைவரிப்புலியோர்பால்—மிக்க
வீரங்கொள் சேவற்றிருவுருவோர்பால்
ஓங்குபுகழ்க் குந்தம் நடுவே—நின்று
ஒளிரு நன்மாண்பையு ரைத்திடப்போமோ (வீரர்)

வானுறு கம்பத்தின் கீழே—வீரர்
வரிசைவரிசையாய் நிற்றலைக்காணீர்;
நானிலத்தே வளமிஞ்சுஞ்—சோழ
நாட்டுச்செங்குந்தர்களோர் புறமாக (வீரர்)

நல்லவர் சேர்பாண்டி நாட்டில்—வாழும்
நவ வீரர்வழிவந்ததீரரோர் பக்கம்;
புல்லியர் தங்களை வீழ்த்துஞ்—சேரர்
பொருந்திய நாட்டுச் செங்குந்த ரோர்பக்கம் (வீரர்)

எழுபத்திரண்டெனு நாட்டில்—தங்கும்
எண்ணருஞ்செங்குந்த சூரரோர்பக்கம்
குழுமித்திரண்டதைப்போற்றும்—வன்மை
கூறிடப்போகுமோ பாரிடைத்தானே (வீரர்)

சுபம்! சுபம்!! சுபம்!!!

நெல்லை மாவட்டம்

திருவாளர்கள் : சி. அருணாசலம், பி.ஏ., எல்.டி., ஈ. வடிவேலு முதலியார், என். எஸ். கே. தர்மலிங்கம்.

கோவை மாவட்டம்

திருவாளர்கள் : வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி முதலியார், பி. எஸ்ஸி, எம். நடராஜ முதலியார், கே பி. ஜெகநாதன், எம். எஸ்சி., எஸ். ரத்தினவேலு பி. இ., டி. வி. பரமசிவ முதலியார்.

தென்னாற்காடு மாவட்டம்

திருவாளர்கள் : கே. பழநிவேலு முதலியார், வி. கணபதி, ராஜவேலு, பி.ஏ., வி. செல்வராஜ், பி. இ. எம். பி ஏ., எம். பச்சைமுத்து, எம்.ஏ., பி. எல்., ஏ. கிருஷ்ண சாமி, எம்.ஏ. பி.எட்., கே. பக்கிரிசாமி முதலியார், கே. குருசாமி முதலியார்.

தருமபுரி மாவட்டம்

திருவாளர்கள் : பி. கே. முனுசாமி முதலியார், கே. எம். கந்தசாமி, பி. முனுசாமி டி. குட்டியப்பன்.

செங்கற்பட்டு மாவட்டம்

திருவாளர்கள் : மு. சண்முகம், எம் ஏ., எல்.டி., டி. எஸ். வேதாசலம், வி. கே. சீனிவாசன்

பெரியார் மாவட்டம்

திருவாளர்கள் : கே. ஏ. பழனியப்பன், ஆர். ஏ. என். முத்துசாமி முதலியார், க ப. இராமசாமி, சு. வையாபுரி முதலியார்.

நீலகிரி மாவட்டம்

திருவாளர்கள் : கே. சீனிவாசன், பி. சுப்பிரமணியம்.

சேலம் மாவட்டம்

திருவாளர்கள் : எஸ். பி. சம்பந்த முதலியார், கே. ஆர். மாணிக்க முதலியார், எல். மாணிக்க முதலியார், ஏ. எம். ராமலிங்க முதலியார், எம். ஆறுமுக முதலியார் எஸ். பி. மாரிமுத்து முதலியார், அப்சரா. ஏ. சுப்பிரமணிய முதலியார் ஆர். எம் சண்முகவடிவேலு, எம். விசுவநாதன் ஐ. ஏ. எஸ். (ஓய்வு), பி. திருஞான சம்பந்த முதலியார், டி. கே. சுப்பிரமணிய முதலியார், எஸ். கந்தசாமி முதலியார்.

வடஆற்காடு மாவட்டம்

திருவாளர்கள் : கே. ஜி. ராமசாமி, டி சிதம்பரம், எம். எம் சிவஞானம், வி. ஏ. வில்வநாதன், கே. வி. திருநாவுக்கரசு, கந்தசாமி முதலியார், பிரசாரகர் புலவர் கோ. இளையபெருமாள்.

பொன் விழா மலர்க் குழு

தலைவர்:

திரு எம். பி. நாச்சிமுத்து முதலியார், பி. ஏ. பி. எல்,

துணைத் தலைவர்கள்:

திருவாளர்கள் : சி. நடராஜ முதலியார். பி.ஏ., பி.எல்., டாக்டர் சி. பாலசுப்பிர மணியம். எம் ஏ. பி. எச். டி , ஜே. சுத்தானந்தன், ஏ. சங்கர முதலியார், பி ஏ ,பிஎல்., பி. இராமசாமி முதலியார், பி. ஏ., பி எல்.,

செயலாளர்கள்:

திருவாளர்கள் : தி. இரா. செல்வராசன், டி. சேதுராமன், புலவர் சிலம்படி யான், எ. துரைசாமி, பி. ஏ., பி எல்., ச. கு. பா. பழநிவேலு

உறுப்பினர்கள்:

திருவாளர்கள் : கே. டி. சம்பந்தம், எம். எம். தணிகைமலை, சி. காந்திதாஸ், எம்.ஏ.பி.எல்., ஆர். சோமசுந்தரம், எம்.ஏ. பி.எல் , து. பழனியாண்டி, டி. ஜெகதீசன், கே. ஏ. ப ழ னி ய ப் ப ன், ஆர். எம். கந்தசாமி, பி. எஸ். ஸி., ப. ம க ா லி ங் க ம், எம். ஏ. எம். பி. எல்., கே. ஆர். மாணிக்க முதலியார், எஸ். பி. சம்பந்தம், புலவர் வை. சுப்பிரமணி, புலவர் நா. ப. வையாபுரி, கு. அங்கமுத்து, வே சு. சுப்பிரமணி, பொ. பழனிச்சாமி, சரவண பழநிவேலு.

With best compliments from :

K. N. Subramanian
P. Ramaswamy

Manufacturers & Exporters
of
Handloom Fabrics
P. B. No. 15 **KARUR-639001**

பொன்விழாவுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள் !

வாழ்க கைத்தறி ! வளர்க கூட்டுறவு !

கூட்டுறவே நாட்டுயர்வு !

குறைந்த விலை ! நீடித்த உழைப்பு !! கெட்டிச்சாயம் !!!

உழைப்போம் !! உயர்வோம் !!

கவுந்தப்பாடி

சொசைட்டி

★ ஜவுளிகளையே வாங்குங்கள் ★

★ கவர்ச்சியான ரகம் !

★ கண்ணைக்கவரும் நிறம் !

★ புதுமையான டிசைன் !

★ நம்பிக்கையான தயாரிப்பு !

★ நாணயமான விலை !

எங்களின் தயாரிப்புகள் :–

20, 30, 40 வேஷ்டிகள், துண்டு, 217 டவல் ரகங்கள், 20, 26 கலர் காடா ரகங்கள், பெட்ஷீட்டுகள் மற்றும் சேலை ரகங்கள் கிடைக்கும்.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

தங்கள் ஆதரவுக்கு மிக்க வந்தனம் !

ஸ்தாபிதம் : 1935

கவுந்தப்பாடி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. K. 706 கவுந்தப்பாடி P. O. (Via) ஈரோடு.

எங்கள் ஜவுளிகள் எல்லா ''கோ–ஆப்டெக்ஸ்'' எம்போரியங்களிலும், சிந்தாமணி சிறப்பங்காடிகளிலும் கிடைக்கும்.

இங்ஙனம்,

உப-தலைவர் மற்றும் நிர்வாகஸ்தர்களும்.

உ
முருகா

வாழ்த்து

நேரிசை வெண்பா

வாழி திருமுருகன் வண்மைத் திருவருளால்
வாழிசெங் குந்தர் மரபுமிக—வாழியவே
ஏழிசைபோல் ஓங்கியே எங்கும் வளமுடனே
ஊழிபல வாழி உவந்து.

செங்குந்தர் ஓங்கியே செய்தொழிலும் நெய்தொழிலும்
எங்குந் தவருதுமிக ஏற்றமுடன்—பொங்குந் தண்
மாக்கடல்போல் எந்நாளும் வற்ரு வளமுடனே
நீக்கமற வாழ்க நிறைந்து.

செங்குந்தர் சிறப்பு

திருமுருக கிருபானந்த வாரியார்

செம்மையான குந்த என்றபடையை ஏந்தி நாட்டுக்கு நலம் செய்கின்றவர்கள், செங்குந்தர்.

இவர்கள் முருகவேளின் தம்பியர்களாகிய வீ ர வா கு முதலிய நவவீரர்களின் வழித்தோன்றல்கள். சீரும் சிறப்பும் பெற்று, பேரும் பெருமையும் உற்றி, எட்டுத்திக்கும் மதிக்கும் புகழ் பெற்ற மரபு. அநேக தேவாலயங்களில் இன்றும் கொடி யேற்றும் நல்விழாவை இம்மரபினர்கள் செய்கின்ருர்கள்.

செங்குந்தமரபில் உ தி த் த வ ர் ஒட்டக்கூத்தர். இவர் கவிச்சக்கரவர்த்தி, கவிராக்ஷசர், க வி த ா சார்வ பௌமர் என்று மூன்று விருதுகளைப் பெற்று, மூன்று சோழர்கள் காலத்தில் வாழ்ந்த பரமபக்த சிகாமணி. இவருடைய கவித் திறனை தக்கயாகப் பரணியால் அறிக.

இவர் பாடிய ஈட்டி எ ழு ப து என்ற நூல் செங்குந்தரின் பெருமையை—அருமையை தேனினும் இனிய பாடல்களால் பகர்கின்றது.

ஆதிநாள் உமையவள் அணிந்த குந்தமே
சாதிநாள் உவப்புடன் தலைக்கொள் குந்தமே
சாதிமே வலரையும் கல்லும் குந்தமே
கோதினும் பாடவே கொள்ளும் குந்தமே

பூட்டிய தேரொடும் பொலிந்த பானுவை
ஈட்டிய தொட்டிலின் கிறுக்கு மைந்தனை
மூட்டிய சமரிடை முடித்து மாசறத்
தீட்டிய வீரர்கைச் சிறந்த குந்தமே

செங்குந்தர்கள் தமது குலக்கவியாம் கூத்தப்புலவருக்கு ஆயிரம் தலைகளையரிந்து அடுக்கி சிரச்சிம்மாதனந்தந்து தங்கள் வீரத்தையும் அன்பையும் காட்டினார்கள்.

கூத்தர் அச்சிரச்சிம்மாதனத்திலமர்ந்து கலைமகளைப்பாட ஆயிரந்தலைகளும் உடம்புடன் ஒட்டி ஆயிரவரும் உயிர் பெற்று எழுந்தார்கள். அதனால் கூ த் த ர் ஒட்டக்கூத்தர் ஆயினார். அத்தருணத்தில் பாடிய பாடல் இது.

கலைவாணி நீயுலகில் இருப்பதுவும், கல்வியுணர்
கவிவல் லோரை
நிலையாகப் புரப்பதுவும், அவர்நாவில் வாழ்வதுவும்,
நிசமேயன்றோ?
சிலைவாண னவிருந்தா யிரம்புயங்கள் துணிந்துமுயிர்
சீவனுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ் செங்குந்தருயிர் பெற்றி நீ
செய்வாயம்மா

நிலைதந்தார் புவியினுக்கே யாவருக்கும் அபிமானம்
நிலைக்கத்தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்திட வென்றே
கையில் தந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்தர் என்கவிக்கு
விலையாகத்தன்
தலைதந்தார் எனக்கொட்டக் கூத்தனெனும் பெயரினையும்
தாந்தந் தாரே

செங்குந்தர்கள் உள்ளத்தில் ஈரமும், செயலில் வீரமும் படைத்தவர்கள். தானதருமங்கள் செய்து எங்கும் பரந்து சிறந்து வாழ்பவர்கள்.

சிவகுமாரர்களாகிய நவவீரர்களின் வழியில் வந்ததனல் செங்குந்தர்கள் எங்கும் சிவகோத்திரம் என்றே குறிப்பிடும் பெருமை மிகுந்தவர்கள். நுண்ணிய மதி நலனும், திண்ணிய திறனும் பெற்றவர்கள். இமயம் போல் உயர்ந்த சிவபக்த சிகாமணிகள்.

கந்தர் சஷ்டிப் பெருவிழாவில் நவவீரர்களாக நடித்து அவ்விழாவைச் சிறப்பிக்கும் செம்மனச் செம்மல்கள்.

இவர்கள் செய்த அறங்கள் பலப்பல. சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு எதிரேயுள்ள மிகப்பெரிய சத்திரம் சலவை ராமசாமி முதலியார் செய்த அறச் செயலாகும்.

இத்தகைய செங்குந்தரின் சிறப்பு அளவிடற்கரியது.

வாழ்க—குந்தம்

வளர்க—செங்குந்தர்கள்

உ

M/s. N. P. சுப்ரமண்ய முதலியார் அன் கோ

நாட்டு மருந்துகள், வர்ணங்கள் & மளிகை சாமான்கள் வியாபாரம்

156, 157 பெரிய கடைத் தெரு, மன்னார்குடி-614 001

ஸ்தாபிதம் : 1945

எங்களிடம் பல கம்பெனிகளில் தயாரான சித்த, ஆயுர்வேத, யூனானிகளில் தயார் செய்த பஸ்பம்கள், லேகியங்கள், தைலங்கள் கிடைக்கும்

பொன்விழா காணும் தென்னிந்திய செங்குந்த
மகாஜன சங்கத்திற்கு எங்கள்
நல் வாழ்த்துக்கள்.

வினாயகா செங்குந்தர் சங்கம்.

பிள்ளையார் கோவில் வீதி. காந்திப்பேட்டை

திருப்பத்தூர்-635 601. (வ ஆ.)

A. ஷண்முகம்
தலைவர்

ஆ. வையாபுரி
துணைத்தலைவர்

A. தேவன்
செயலாளர்

தி. கு. பொன்னம்பலம்
துணைச்செயலாளர்

P. சாம்பசிவம்
பொருளாளர்

M. நடராஜன்
துணைப்பொருளாளர்

செயர் குழு :

P. ஈஸ்வரன்
T. ஜெகதீசன்
ச. கோபால்
A. கணேசன்
ஆ. ப. பழனிசாமி
A. பாலன்
A. பத்மநாபன்
N. கணேசன்
T. ஷண்முகம்
D. கண்ணன்.

மத்திச குழு மெம்பர்கள் :

S. M. சுப்பிரமணி
K. V. S. ஆறுமுகம்
L. முனிசாமி
V. K. கணேசன்
K. குமாரசாமி.

நம்குல கவிச்சக்ரவர்த்தி

ஒட்டக்கூத்தர்



காஞ்சி நாகலிங்க முனிவர்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை நிறுவியவரும், தஞ்சை ஜில்லா செங்குந்தர் கல்வி நிதியின் பரம்பரை உறுப்பினரும் முன்னாள் தலைவருமாகிய

வள்ளல் திரு T. N. சபாபதி முதலியார்

மடப்புரம் — திருவாரூர்

திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் செங்குந்தர் குல திலகம்

சிவத்திரு சிவசண்முக தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

சேலம் கோடைவள்ளல்

அமரர் K. P. AR. ராமசாமி முதலியார்



அமரர் M. M பெருமாள் முதலியார்
வைட் ஹவுஸ்
சேலம்–1

தியாகச்செம்மல்
அமரர் T. N. தீர்த்தகிரி முதலியார்
தர்மபுரி



அமரர் P. நடராஜ முதலியார்
மண்டி
லீ பஜார், சேலம்–9



அமரர் க. அ. ஷண்முக முதலியார்
முன்னாள் மேனேஜிங் டைரக்டர்
திருமகள் மில்ஸ் லிமிடெட், குடியாத்தம்



அமரர் S. மீனாக்ஷிசுந்தர முதலியார்
கலைமகள் கல்வி நிலையம்
ஈரோடு



அமரர் ஆக்கூர் ராமலிங்க முதலியார்

சேலத்துச் செம்மல், கைத்தறிக் காவலர்

அமரர் A. மாரியப்பன், Ex. M. L. A.



அமரர் காசிவிஸ்வநாத முதலியார்
திருச்செங்கோடு

அமரர் V. ராமலிங்க முதலியார்
முன்னாள் சேர்மன்
சேலம்

கொடி காத்த மாவீரன்



செங்குந்தர் குல வீர திலகம்

திருப்பூர் குமரன்

நாடுகடந்தும் தாய் நாட்டுக்காக
உயிர் நீத்த

செங்குந்தர் குல திலகம், தியாகி வீராங்கனை
தில்லையாடி வள்ளியம்மை

செங்குந்தர் குல திலகம்

அமரர் டாக்டர் பேரறிஞர்

C. N. அண்ணுதுரை அவர்கள்

செங்குந்தர் குல திலகம்
அருள், பக்தி, கருணைக்கடல்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

கைத்தறி காவலர், செங்குந்தர் குலப்பெரியார்

தலைவர் : திரு M. P. நாச்சிமுத்து முதலியார், B. A. B. L.,
சென்னிமலை



திரு D. A. S. பிரகாசம், I. A. S.
தமிழக அரசு நீதித்துறை
கூட்டுச் செயலாளர், சென்னை



ஜஸ்டிஸ் திரு T. N. சிங்காரவேலு, B. A., B. L.,
உயர்நீதி மன்ற நீதிபதி
சென்னை



திரு C. K. குமாரசாமி
பதிவாளர், சென்னை பல்கலைக்கழகம்

சேலத்துச் செம்மல், பண்பாளர்



திரு S. P. சம்பந்த முதலியார்

சேலம் பெருந்தகை



திரு A. சங்கர முதலியார் B. A., B. L.,
புரவலர், சேலம் மாவட்ட செங்குந்த
மகாஜன சங்கம்



திரு K. R. மாணிக்க முதலியார்

மேனேஜிங் டைரக்டர் : கந்தகிரி ஸ்பின்னிங் மில்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

தலைவர் : நூல் வியாபாரிகள் சங்கம்

உபத்தலைவர் : சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்

தலைவர் : அம்மாப்பேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபம்

சேலத்துச் செயல் வீரர்



உயர்திரு P. ராமசாமி முதலியார், B. A., B. L.,
தலைவர் : சேலம் செங்குந்த மகாஜன சங்கம்
மேனேஜிங் டைரக்டர் : அருள்மிகு குமரகிரி ஸ்பின்னிங் மில்ஸ்



திரு C. காந்திதாஸ், M. A., B. L.,
தலைவர் : மதுரை மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்



திரு C. நடராஜ முதலியார்
துணைத்தலைவர் : தென்னிந்திய செங்குந்த
மகாஜன சங்கம், சென்னை



திரு D. சேதுராமன்
செயலாளர் : தென்னிந்திய செங்குந்த
மகாஜன சங்கம், சென்னை



திரு தி. ரா. செல்வராசன். M. A., M. Litt.,
செயலாளர் : தென்னிந்திய செங்குந்த
மகாஜன சங்கம், சென்னை



திரு A. துரைசாமி, B. A., B. L.,
செயலாளர்
செங்குந்தர் மகாஜன சங்கம், சேலம்

புலவர் சிலம்படியான்
செயலாளர்
செங்குந்தர் மகாஜன சங்கம், சேலம்



திரு S. முருகையன், M. P.
திருப்பத்தூர் தொகுதி
திருவண்ணமலை

திரு D. பட்டுசாமி, M. P.
வந்தவாசித் தொகுதி
திருவண்ணமலை



திரு A. V. முத்தைய முதலியார்
முன்னாள் அமைச்சர்
பாண்டிச்சேரி

திரு T. V. ராஜேஸ்வர் முதலியார்,
M. A., I. P. S.
புதுடில்லி

திரு K. T. சம்பந்தம்
உப செயலாளர் : சேலம் மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்

திரு பொ. சி. பாலசுப்ரமணிய முதலியார்
தலைவர் : சென்னை செங்கை
செங்குந்த மகாஜன சங்கம்



திரு T. C. அண்ணாமலை
President : Rotary Club
திருச்செங்கோடு



Dr. A. பொன்னுசாமி, M. B. B. S.,
Retd D. M. O.
சித்ரா க்ளினிக், சேலம்–1

திரு கா. அ. ஷ. பத்மநாப முதலியார்
துணைத்தலைவர் : தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம்
திருப்பத்தூர்

திரு J. சுத்தானந்த முதலியார்
துணைத்தலைவர் : தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம்
ஈரோடு

செங்குந்தர் மகாஜன கிளைக்கழகம்
குருசாமிபாளையம்

கூனவேலம்பட்டி புதூர் செங்குந்தர்
மகாஜன சங்கம்

Dr. சி. பாலசுப்ரமணியம்
தலைவர், தமிழ்த்துறை,
சென்னை பல்கலைக்கழகம்



திரு L. மாணிக்க முதலியார்
ஜவுளி வியாபாரம்
சேலம்–1

திரு K. P. பாலகிருஷ்ண
முதலியார்
தலைவர், செ. ம. ச. சங்கம்
கோவை

திரு V. சம்பந்தன்
செயலர்,
தஞ்சை மா. செ. ம. ச.
கல்விச் சங்கம், குத்தாலம்



திரு E. S. தியாகராஜ முதலியார் Ex. M. L. A
திருத்தணி



திரு A. சீதாராமன் M.Com.,
M.B.A., F.C.A., D.M.A,
ஜெனரல் மேனேஜர்,
கோ–ஆப்டெக்ஸ், சென்னை

திரு P. V. ராமலிங்கம்
B.Sc., B.L.,
தலைவர்,
திருச்சி மா. செ. ம. ச. சங்கம்

தென்னிந்திய
செங்குந்த மகாஜன சங்கம்
தோற்றமும் வளர்ச்சியும்

சி. நடராஜ முதலியார், பி. ஏ., பி. எல்.,
வழக்கறிஞர்
துணைத்தலைவர் செங்குந்த மகாஜன சங்கம்

இந்தியாவில் பல ஆயிரக்கணக்கான சாதிகள் இருக்கின்றன. அவ்வாறு இருப்பினும் சில சிலசாதியினர் மட்டும் பெரும்பாலாக ஒருமிக்கப் பல இடங்கவில் வசிக்கின்றனர். அவ்வாறு ஒருமித்துத் தமிழ் நாட்டில் பல்வேறு நகரங்களிலும், கிராமங்களிலும் செங்குந்தர்கள் பெரும்பாலாக வசிக்கின்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த அண்டை நாடுகளான ஆந்திரப் பிரதேசம், கேரளம், மகாராஷ்டிரம் முதலிய நாடுகளிலும் செங்குந்தர்கள் வசித்து வருகின்றனர். கடல்கடந்து சென்றும் தென் ஆப்பிரிக்காவிலும், மலேயாவிலும் சிறுபான்மையினராக வசிக்கின்றனர். சுமார் 350 ஆண்டுகளுக்கு முன், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இலங்கைக்குச் சென்று யாழ்ப்பாணத்தில் குடியேறி, அங்குப் பெரும்பகுதியாக நம்மவர்கள் வசிக்கின்றனர்.

செங்குந்தர் சமூகம் தோன்றியதற்குப் புராணவரலாறும் இருக்கின்றது. சூரபத்மனை அழிப்பதற்கு முருகப் பெருமான் அவதரித்தபோது அவருடன் தோன்றிய நவவீரர்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் செங்குந்தர்கள். இக்காரணம் பற்றியே இன்றும் ஆண்டுதோறும் நடக்கும் கந்தர் சஷ்டி விழாவில் சூரசம்ஹாரத்திற்காகச் செங்குந்த குலத்தைச் சேர்ந்தவர்களே நவவீரர்களாகப் பங்கேற்கின்றனர்.

நூற்றுக்கணக்கான வருஷங்களாக, செங்குந்தர் சமூகம் ஒரு அமைப்பின் கீழ் இருந்துகொண்டு இருக்கின்றது. தமிழ்நாடு நான்கு திசை நாடுகளாகவும், அவற்றின்கீழ் எழுபத்திரண்டு கிளை நாடுகளாகவும் பிரிக்கப்பட்டு, ஆங்காங்குள்ள பெரிய தனக்காரர்கள், நாட்டாண்மைக் காரர்கள் இவர்கள் மேற்பார்வையில் செங்குந்தர் சமூக சம்

மா. சண்முகசுந்தர முதலியார் ஆகிய இருவரும் அமைச்சர்களாகவும், திருவாரூர் திருவாளர் எஸ். முருகைய முதலியார் அவர்கள் பொருட்காப்பாளராகவும், மற்றும் திருவாளர் மா. அ. கனகசபை முதலியார் உள்பட பதினறு பேர்கள் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மித்திரனும், சங்கமும் ஆரம்பிக்கப்பட்டதும் மதராஸ் பளேயகாட் கம்பெனி லிமிடெட்டின் அலுவலகமான அரண்மனேக்காரன் தெருவு 31ம் (புதிய நெம்பர் 88) நெம்பர் கட்டிடத்தில் மேற்படி கம்பெனியார், மித்திரன், சங்கம் இவைகளின் காரியாலயமாக ஒரு அறையைக் கொடுத்து உதவினர். மித்திரன் விலாசங்கள் எழுதுவது, தபால் முத்திரைகள் ஒட்டுவது, தபால்களைக் கவனித்துக் கொள்வது முதலிய வேலைகளுக்கும் கம்பெனியின் சிப்பந்திகளும் மேற்பார்வையாளர்களும் பெரிதும் உதவினர்.

தலைச் சங்கத்தின் நோக்கங்கள்: சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஆங்கிலப் பட்டதாரிகள் 20, 25 பேர்கள் கூட இல்லாத நிலையில் பிரச்சாரகர்களை நியமித்துச் செங்குந்தர்கள் வசிக்கும் ஊர்கள் தோறும் சென்று ஆங்காங்கு கிளைச்சங்கங்கள் ஆரம்பித்து, கல்வி கற்கச் செய்தல், கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக நடவடிக்கை எடுத்தல், சமூக வளர்ச்சிக்காகவும், தற்காலத்திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களையும் ஒழித்தல், குறிப்பிட்ட கிராமங்கள், பகுதிக்குள்ளாகவே பெண் கொடுக்கல் வாங்கல் இருத்தலை நீக்கிச் செங்குந்தர்கள் எங்கிருப்பினும் அவர்களிடையே பெண் கொடுக்கல் வாங்கல் செய்தல், நம்மவர்களுக்கிடையே உள்ள கட்சிகளை ஒழித்து ஒற்றுமையை உண்டாக்குதல், அரசினரிடமிருந்து மேன்மேலும் கல்விச் சலுகைகளைப் பெறுதல், வியாபாரிகளிடையே மகிமை ஏற்படுத்தி அப்பணத்தைச் செங்குந்த மாணவர்கள் கல்விக்கு உதவச் செய்தல் செங்குந்தர்கள் பெரும்பாலாக வசிக்கும் இடங்களில் பஞ்சாயத்துகள், நகராட்சி மன்றங்கள், மாவட்ட ஆட்சி மன்றங்கள் முதலியவற்றிற்கு உறுப்பினராக நின்று வெற்றி பெற்று சமூக நலனுக்காகப்பொது வாழ்க்கையில் ஈடுபடுதல் மித்திரனுக்குச் சந்தா சேர்த்தல் உபகாரச் சம்பள நிதி சேர்த்தல், மாணவர் விடுதி ஏற்படுத்துதல், ஆங்காங்கு மாநாடு வைத்தல், வசதியுள்ள செங்குந்தர்கள் ஒன்று சேர்ந்து கல்விக் கூடங்கள், நூற்புமில், பெருந்தொழில் நிறுவனங்கள் முதலியனவற்றை அமைத்தல், தலைச் சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்த்தல், மித்திரனுக்கு ஆயுள் சந்தா சேர்த்தல், பரம்பரைச் சந்தா சேர்த்தல், பெண் கல்வியை வளர்த்தல், வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி கற்றல் முதலியன ஆகும்.

சங்க ஆரம்பகாலத்தில் ஆங்காங்கு பிரசாரகர்கள் நியமிக்கப் பட்டனர். பிரசாரகர்கள் மித்திரன் சந்தா சேர்க்கவும், சந்தா வசூலிக்கவும், பொதுக் கூட்டங்கள் கூடியும், கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தியும், பிரசாரம் செய்தனர். பிரசாரகர்களில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் சென்னை தி. அ. சண்முக முதலியார், காஞ்சி மணிமொழியார், கல்யாணம் பூண்டி குமரகுரு முதலியார், தேவகோட்டை வால சுப்ரமணிய முதலியார், மாயவரம் திரு சா.கு. பா. பழனிவேலு முதலியார், முதலியவர்கள் மற்றும்

அரசாங்க அலுவலில் இருந்து கொண்டே மா. அ. கனகசபை முதலியாரும், மற்றும் காஞ்சி மணி மொழியார் முதலியவர்கள் கிராமங்கள் தோறும் சென்று பிரச்சாரம் செய்தனர்.

தலைவர்கள் செய்த முயற்சிகளின் பலனாகவும், ஈரோடு வி. எம். மொட்டையப்ப முதலியார் அவர்கள் தீவிரத்தினலும், ஈரோட்டில் கோவை வி. எஸ். செங்கோட்டையா முதலியார் வரவேற்புக்குழுத் தலைமையில் புதுவை அ. வே. முத்தைய முதலியார் அவர்களின் தலைமையில் 1929ம் ஆண்டு ஜனவரி 19, 20 தேதிகளில் ஈரோட்டில் செங்குந்தர் முதல் மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காஞ்சீபுரம் முனிசிபல் சேர்மன் ம. சாமிநாத முதலியார் செங்குந்தர்க் கொடியையேற்றி வைத்தார். 1929ல் ஈரோட்டில் ஆரம்பித்துப் பின்னர் மாவட்டங்கள் தோறும் 11 மகாநாடுகள் நடந்து மீண்டும் 1976ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25, 26ம் தேதிகளில் ஈரோட்டில் பதின்மூன்ருவது மகாநாடு, மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு எம். பி. நாச்சிமுத்து முதலியார் முயற்சியினல் மிக்க ஆர்வத்துடன் சீரும் சிறப்புமாக நடைபெற்ற, அம்மகாநாட்டில் அடியேன் சமூக மகா நாட்டிற்குத் தலைமை வகித்தேன். மகாநாடுகள் குறித்த விவரம் பிரிதோரிடத்தில் வெளியானதால் ஈண்டு மற்ற மகாநாடுகளைப் பற்றி விவரிக்கவில்லை. அடுத்த மகாநாடு சென்னை-செங்கல்பட்டு மாவட்டங்கள் கலந்த மகாநாடாக நடைபெற இருக்கின்றது. ஒவ்வொரு சமூக மகாநாட்டின் போதும் கைத்தறி அல்லது வர்த்தக மகாநாடு, வாலிபர் மகாநாடு, கைத்தறித் தொழில் மகாநாடு முதலியனவும் சில ஆண்டுகளாக மாதர் மகாநாடுகளும் நடைபெற்று வருகின்றன.

செங்குந்த குல நலனுக்காகச் சங்கம் ஏற்பட்டதாயினும் மற்ற சமூகங்களிடையே எவ்வித மனத்தாங்கலும் இல்லாமல் அவசியமானபோது கைத்தறி மகாநாடு போன்றவற்றில் மற்ற சமூகத்தினரைச் சேர்த்துக் கொண்டும் மகாநாடுகள் நடத்தி வருகின்ருேம். 1937-38 முதல் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 15 வருடங்கள் பிற்பட்ட சமூகத்தினர் நலனுக்காக உழைத்த பிற்பட்ட வகுப்பினர் சங்கத்திலும் காஞ்சிமணி மொழியார் செயலாளராகவும், நான் துணைத் தலைவராகவும், கோவையில் 1946ல் நடந்த பிற்பட்ட வகுப்பினர் மகாநாட்டில் தலைவனுகவும் இருந்து இருக்கின்றேன். சம்பந்தப் பட்ட விசாரணைக் கமிஷன், பிற்பட்ட வகுப்பினர் நலக் கமிஷன் முதலியவற்றில் தலைச் சங்கத்தினர் சாட்சியங்கள் சொல்லியும் மகஜர்கள் கொடுத்தும் சமூக நலனுக்காகப் பாடுபட்டிருக்கின்றனர். 1938-1939ம் ஆண்டில் நம் சமூகத்தினரைப் பிற்பட்டவர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட போது சென்னையில் சிறப்பு மகாநாடு கூடி அரசினரைப் பேட்டி கண்டு மீண்டும் பட்டியலில் சேர்த்தோம்.

சமூக மகாநாடுகள் மட்டும் அன்றி அவசியம் ஏற்பட்ட போதெல்லாம் தலைச் சங்கத்தினர் சிறப்பு மகாநாடுகளும் நடத்தியிருக்கின்றனர். காஞ்சீபுரத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கைத்தறி மகாநாடும், 1942ல் ஸெயிண்ட்மேரிஸ் ஹாலில் கைத்தறி சிறப்பு மகாநாடும், 1980ம் ஆண்டு ஆரம்பத்தில் பிற்பட்ட சமூகத்தினரின் வருஷாந்திர வருவாயை ஒட்டி

சலுகைகள் காண்பிக்க வேண்டும் என்று அரசினர் உத்தரவிட்ட போது சங்கத் தின் சார்பில் பிற்பட்டவர் மகாநாடு கூட்டி அரசினர் உத்திரவை ரத்து செய்யும்படி செய்தோம்.

தலைச் சங்கத்தின் குறிக்கோள் களான கல்வி, தொழில் வளர்ச்சி, எங்கும் உள்ள செங்குந்தர்கள் எவ்வித வித்தியாசமும் இன்றி பெண் கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டும், நம்மவர்கள் பெருந்தொழில்கள் ஆரம் பிக்க வேண்டும், கலாசாலைகளும் கல்லூரிகளும் அமைக்கப்பட வேண்டும் மூடப் பழக்கவழக்கங்களையும் தற்காலத் திற்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களையும் ஒழித்தல் வேண்டும் முதலியன குறித்து நமது பிரச்சாரகர்கள் கிராமங்கள், நகரங்கள் தோறும் சென்றும், மகா நாடுகள் கூட்டியும், பிரச்சாரம் செய்த தின் பயனாகவும், மித்திரன் மூலம் பிரச்சாரம் செய்ததின் பயனாகவும் நம் மவர்கள் இன்று நூற்றுக் கணக்கில் படித்துத் தக்க வேலையில் அமர்ந்திருக் கின்றனர். பலர் டாக்டர்களாகவும், என்ஜீனியர்களாகவும், பேராசியர்களா கவும், வழக்கறிஞர்களாகவும் ,ஒருசிலர் ஐ. ஏ. எஸ்., ஆகவும் இருக்கின்றனர். மேல் நாடுகளுக்குச் சென்று படித்துப் பட்டம் பெற்று மேல் நாடுகளிலும், கீழ் நாடுகளிலும் உத்தியோகங்களில் அமர்ந்திருக்கின்றனர். பெண்களும் உயர்படிப்புப் படித்து வேலையில் இருக் கின்றனர். நம்மவர்களுக்கு அரசியலில் செல்வாக்கு இல்லை. பெரும் எண்ணிக் கையில் சட்டசபை உறுப்பினர்களா கவும், பார்லிமெண்டு உறுப்பினர்களா கவும் இருந்தால் நம்மவர்கள் மேன் மேலும் உயர் பதவிகளுக்கு வர இயலும், தலைச் சங்கப் பிரச்சாரத்தின் பயனாக முதலில் தாரமங்கலத்திலும், பின்னர் குறிஞ்சிப் பாடியிலும் சென்னிமலையிலும், ஈரோட்டிலும் செங்குந்தர் கலாசாலைகள் (ஹைஸ் ஸ்கூல்கள்) ஏற்பட்டன. ஈரோட்டில் நம்மவர்களால் கல்லூரியும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது. குடியேற்றத்தில் காலஞ்சென்ற நம் தலைவர் கா. ஆ. சண்முக முதலியார் சேமித்தத் திருமகள் தலைச் செல்வத்திலிருந்து ஒரு கல்லூரி யும் ஆரம்பிக்கப்பட்டது. பல மத்திய தரப் பள்ளிகளும் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் என்ஜீனியரிங், மருத்துவக் கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும் ஆரம்பிக்கப் பட வேண்டும்.

நம்மவர்களால் கோவையில் பங்கஜா மில்லும், சாரதா மில்லும், திருச்செங்கோட்டில் புள்ளிக்காரர் மில்லும் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை கள் தற்போது நம் வசம் இல்லை. இப்போது குடியேற்றத்தில் திருமகள் மில், ராஜேஸ்வரி மில், திருநெல்வேலி மாவட்டத்தில் கோமதி மில்லும், சேலத்தில் சம்பந்தம் ஸ்பின்னிங் மில், கந்தகிரி ஸ்பின்னிங் மில், அருள்மிகு குமரகிரி ஸ்பின்னிங் மில்லும் நம் மவர்கள் ஆதிக்கத்தில் இருந்து வரு கின்றன. சேலம், தர்மபுரி, திருச்செங் கோடு ஆகிய ஊர்களில் மேலும் மில் கள் நம்மவர்களால் ஆரம்பிக்க இருக் கின்றன. நம்மவர்களுக்குத் தொழில் மனப்பான்மை வளர்ந்து பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இன்று நம்மவர்கள் பெரும் பாலோர் கைத்தறியிலிருந்து விசைத் தறிக்கு மாறிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் சேலம், வெண்ணந்தூர் கிராம மக்கள் அவர்களின் விடாமுயற்சியின் பலனாகவும் சலியா உழைப்பின் காரணமாகவும் அக்கிராமத்தையே விசைத்தறிக் கிராமமாக மாற்றி

கொண்டிருக்கிருர்கள். ஸ்டேட் பாங்கும் பூரண ஒத்துழைப்புக் கொடுக்கிறது. மேலும் சேலம் மாவட்டத்தைச் சார்ந்த திருச்செங் கோட்டில் இன்று நம்மவர்களால் சுமார் 35—40 வார்பிங் & சைஸிங் மில்லும், ஈரோட்டில் சுமார் 15 வார்பிங் & சைஸிங் மில்லும் நடத்தப் படுகின்றன. இவைகளில் உற்பத்தி செய்யப்படும் பாவுகள் தமிழ்நாடு பூரா வும் உள்ள விசைத்தறிகளுக்கும் கைத் தறிகளுக்கும் சப்ளை செய்து வர்த்தகம் செய்து வருகிருர்கள். திருச்செங்கோடு இன்று ஒரு தொழில் பேட்டையாக இயங்கி வருகிறது. சேலத்திலும் திருச்செங்கோட்டிலும் இவ்வாறு எல்லாம் வளர்ச்சியடைந்திருப்பது சங்கத்தின் வளர்ச்சி என்றே சொல்ல வேண்டும்.

நம்மவர்களுக்குள்ளே எவ்வித வித்தியாசமும் இல்லாமல் பெண் கொடுக்கல் வாங்கல் இருக்கின்றன. நம்மவர்களின் பழக்க வழக்கங்களும் தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் அடைந்து வருகின்றன.

இதுவரை 13 மகாநாடுகள் பல்லா யிரக்கணக்கில் செலவு செய்து கூட்டப் பட்டு சமூக வளர்ச்சிக்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. அவைகளை அமுல் படுத்துவதற்குப் போதுமான முயற்சி இல்லை. பல மாவட்டங் களும், கிளைச் சங்கங்கங்களும் தோன்றி மறைந்தன. ஆயினும் மூன்று நான்கு வருடங்களாக நம்மவர்களிடையே மறு மலர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அதன் பயனுகச் சென்ற ஆண்டில் விளந்தை யில் (ஆண்டிமடத்தில்) திருச்சிமாவட்ட செங்குந்தர் மகாநாடு சீரும் சிறப் புடனும் நடைபெற்று மேன்மேலும் திருச்சி மாவட்டத்தில் செங்குந்தர் இயக்கம் பயனுடையதாக வளர்ந்து கொண்டிருக்கின்றது.

1947ல் ஆரூர் அண்ணல் தலைமை யில் மாயூரம் கூறைநாட்டில் அடி யேனல் துவக்கி வைக்கப்பட்ட தஞ்சை மாவட்டச் செங்குந்தர் சங்கம் அன்று முதல் இன்றுவரை அதனுடைய பொதுச் செயலாளர் திரு. ச. கு. பா. பழனிவேலு முதலியார் அவர்களின் விடாமுயற்சியினுலும் அவருக்குப் பெரிதும் உதவிய அண்மையில் காலஞ் சென்ற அதன் தலைவர் ஆக்கூர் அண்ணல் திரு. சு. ராமலிங்க முதலி யார் சேவையினுலும், ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட கல்வி நிதி யுடனும் பல கிளைச் சங்கங்களுடனும் தமிழ் நாட்டிலேயே சிறந்த மாவட்டச் சங்கமாக வளர்ந்திருக்கின்றது. இதே போன்று மற்ற சில மாவட்டங்களில் உள்ள சங்கங்களும் கிளைச் சங்கங்களும் தொண்டு செய்ய வேண்டும். மாவட்டங்கள் தோறும் மாவட்டச் சங்கங்கள் தோன்றி அதன் சார்பாகக் கிளைச் சங்கங்களும் தோன்றல் வேண் டும். நம்மவர்களிடையே ஒற்றுமை மிகக்குறைவாக இருப்பதாகத் தெரிய வருகிறது. இனிமேலாகிலும் மிக ஒற்றுமையுடனிருந்து ஆங்காங்கே சாதிக்க வேண்டிய காரியங்களை நம் மவர்களைக் கொண்டு சாதித்து தொழில் துறையிலும், விசைத்தறி துறையிலும் மற்றும் இயந்திர சாதனத் துறையிலும் கல்வித் துறையிலும், இதர துறை களிலும் வெகு வேகமான முறையிலும் முன்னேறப் பாடுபட வேண்டும்.

தலைச்சங்கம் ஆரம்பித்த காலத்தில் மதராஸ் பளையகாட் கம்பெனியில் நிறுவப்பட்ட சங்கம், மித்திரன் காரியாலயத்தின் வேலைகள் அதிகரித்த

தனால், பவழக்காரத் தெருவில் 1939ம் ஆண்டு வரையில் காரியாலயமும், மித்திரன் அச்சகமும் வாடகை இடங்களில் இருந்தன. பின்னர் மதராஸ் பீளயகாட் கம்பெனியார் தங்கள் கம்பெனிக்கு அடுத்த இரண்டு கட்டிடங்களை வாங்கி அதில் ஒன்றை நமக்குக் கிரய தொகையைப் பெற்றுக் கொண்டு கொடுத்து விட்டனர். அஃதே இப்போதிருக்கும் செங்குந்தர் மாளிகை ஆகும்.

மித்திரன் அச்சிடுவதற்காக 1936ம் ஆண்டில் அச்சகம் நிறுவப்பெற்று வளர்ச்சியடைந்து வந்தது. ஆனால் சரியான மேற்பார்வை இல்லாததினால் சுமார் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னால் விற்கப்பட்டுவிட்டது.

பல இன்னல்களுக்கு இடையேயும் மித்திரன் 1927ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நிறுத்தப்படாமல் இன்று வரை வெளியாகிக் கொண்டிருக்கிறது. தற்போது மித்திரனுக்கு நல்லகாலம் பிறந்திருக்கின்றது. நம் சமூகப் பிரமுகர்கள் தலைச் சங்கத்தையும், மித்திரனையும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று தலைச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர்களாகவும், மித்திரனின் ஆயுள் சந்தாதாரர்களாகவும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் சேர்த்து வருகின்றனர். இப்போது இருக்கும் ஆர்வம் என்றென்றும் நீடித்தால் தலைச் சங்கமும் மித்திரனும் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து சமூக சேவை பெரிதளவில் செய்ய இயலும். மித்திரன் அச்சுச் செலவு அதிகரித்து இருப்பதினால் மாதந்தோறும் வெளியிட முடியவில்லை.

நமது சங்கத்தை நிறுவிய வள்ளல் திருவாளர் தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் நினைவாக மாணவரில்லம் அமைக்க வேண்டும் என்று சேத்துப்பட்டில் இருபதுமனைப் பரப்பு உள்ள காலியிடம் வாங்கி நன்கொடை வசூலித்துப் பெரும் அளவில் கட்டிடம் கட்ட முயற்சித்துக் கட்டிடம் முடிவு பெறாமல் ஐந்து அறைகள் மட்டும் கட்டப்பட்டு அவைகளில் மாணவர்கள் இருந்து வருகின்றனர். அக்கட்டிடம் விரைவில் பூர்த்தி செய்யப் படுதல் வேண்டும். அன்பர்கள் பெரும் அளவில் பண உதவி செய்தால் கட்டிடம் முடிவு பெறும். நன்கொடையாக இன்னும் குறைந்த பட்சம் மூன்று நான்கு லட்சம் ரூபாய்களாவது வேண்டும்.

செங்குந்தப் பெரு மக்கள் அனைவரும் மேன்மேலும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினிடமும் செங்குந்த மித்திரனிடமும் அன்பு ஆர்வம் கொண்டு அவைகள் வளர்ச்சியடையப் பெரிதும் உதவ வேண்டும். நம்மக்களுக்கு இனப் பற்றும் மேன்மேலும் வளர வேண்டும்.

பணத்தாலும் படிப்பினாலும் குலத்தாலும் பதவியினாலும் அழகினாலும் உயரத்தினாலும் கனத்தாலும் ஒருவன் பெருமையடைய முடியாது. தியாகம் ஒன்றாலேயே பெருமையடைய முடியும். தனக்கென்று வாழ்கின்றவன். சிறியவன் பிறர்க்கென்று வாழ்கின்றவன் பெரியவன்.

— திருமுருக கிருபானந்த வாரியார்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், செங்குந்தர் மாளிகை

89. அரண்மனைக்காரத் தெரு, சென்னை–600 001.

வளர்க கூட்டுறவு ! | வாழ்க கைத்தறி !!

S. 849. ஒலைப்பட்டி

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்.,

ஒ. சௌதாபுரம்-அஞ்சல், வழி-வெண்ணந்தூர்,
இராசிபுரம் வட்டம், சேலம் மாவட்டம்.

-: எங்கள் சங்கத்தில் :-

துண்டு, டவல், காடா, பேட்டு, பெரியபாவஞ்சு, சின்னபாவஞ்சு குண்டஞ்சு, பெரிய & மில் பார்டர் வேஷ்டிகளும்

குண்டஞ்சு 10 x 6 மற்றும் 9 x 5 ரகங்களும், 2 x 7, 2 x 8, 2 x 9, 2 x 10 கொத்து ரகங்களும் (எல்லா நெம்பர் நூல்களிலும்) பல டிசைன்களில் கிடைக்கும்.

தங்கள் தேவைக்கு எங்கள் சங்க ஜவுளிகளை வாங்கி ஆதரியுங்கள்

C. சீனிவாசன்	A. P. பெரியசாமி	P. ஆறுமுகம்
செயலாளர்	உப–தலைவர்	தலைவர்

நிர்வாகஸ்தர்கள்

P. ஆறுமுகம் | S. சிவலிங்கம் | C. சிவசங்கரன்
R. முத்துசாமி | R. துரைசாமி

Woven into the warp'n weft of
Handloom Fabrics
the craft of two million weavers

Every metre of cloth reflects the supreme craftmanship that India has been renowned for, over centuries. Handlooms weave fabrics to suit
INDIVIDUAL TASTES.

ALL INDIA HANDLOOM FABRICS MARKETING
CO-OPERATIVE SOCIETY LTD., EXPORTS
THE FINEST OF SILK & COTTON
FABRICS, READY-MADES
AND MADE-UPS

ORDERS FOR EXCLUSIVE DESIGNS
AND COLOURS ARE ALSO UNDERTAKEN.

Direct your enquiries to :-

ALL INDIA HANDLOOM FABRICS
MARKETING CO-OP., SOCIETY LTD.,

No. 6, Sunkurama Chetty Street, MADRAS-600 001.

PHONES : 23912, 23913, 23914
CABLE : "HANFABS" Telex : 41 438 HFAB IN

National Award winners for
OUTSTANDING EXPORT PERFORMANCE

உ
ஸ்ரீ ராமஜெயம்.

நெசவாளர் நாட்டின் உழைப்பாளர்!

உயர்வு விரும்பிடும் நெறியாளர்!

அவர் தரும் படைப்பு !

நீடித்த உழைப்பு ! அழுத்தமான நெசவு ! குறைந்த விலை

கூட்டுறவுக்கோர் எடுத்துக்காட்டு ! நாட்டுயர்வுக்கோர் வழிகாட்டி !

ஆட்டையாம்பட்டி

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், S. 691

நிறுவனம் : 1941 "அர்த்தனாரி நிலையம்" தொலைபேசி : 22

ஆட்டையாம்பட்டி அஞ்சல், சேலம் தாலூக்கா.

தங்கள் தேவைக்கு ஒருமுறை வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்

கண்கவர் வனப்பு மிகுந்த எங்கள் கைத்தறி சேலை

ரகங்கள் மிகவும் புகழ் பெற்றவை.

தமிழகந்தனில் புகழ் பெற்ற எங்கள் சங்கத்தில் கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு 20, 40, 60, 80, 100, நெம்பரில் பாவஞ்சு, பெரிய பாவஞ்சு, பேட்டு, காடாபீஸ், துண்டு, சேலை, லுங்கி மற்றும் பாலியஸ்டர் வேஷ்டிகளும் சிறந்த முறையில் திடமாக தயார் செய்கிறோம்.

பவர்லூம் வேஷ்டிரகங்களும், காடா பீஸ் ரகங்களும் திடமாக சிறந்த முறையில் தயார் செய்கிறோம்.

வெள்ளை, வண்ண வேஷ்டிகளுக்கு ஏற்ற இடம் :

ஆட்டையாம்பட்டி ஜவுளிகளே !

க. உத்தண்டி கண்டர்,
உப-தலைவர்.

K. V. A. அர்த்தனாரி முதலியார்,
தலைவர்.

இயக்குனர்கள் :

K. A. ரங்கசாமி **K. அங்கமுத்து** **V. பழனியப்பன்**

படிப்பும் பயனும்

மு. ரா. பெருமாள் முதலியார் B. A. (Hons.) L. T.

சென்னை

தங்கள் பிள்ளைகள் கல்வி கற்றவர்களாய் இருக்கவேண்டுமென்று இன்று எல்லாப் பெற்றோர்களும் விரும்புகிறார்கள். இந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அரசாங்கமும் கல்வி வசதிகளை மிகவும் பெருக்கியுள்ளது. இன்று தொடக்கப் பள்ளிகள் மட்டுமின்றித் திரும்பிய பக்கமெல்லாம் உயர்நிலைப்பள்ளிகளும் இருக்கின்றன. அவற்றுள் பலவற்றை அரசாங்கம் சென்ற மூன்றாண்டுக் காலத்தில் மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றியுள்ளது. அதுபோலவே, கல்லூரிகளும் இன்று ஏராளமாய் இருக்கின்றன, ஆகவே, தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரையிலும் படிப்பதற்கு எல்லாருக்குமே வாய்ப்பிருக்கிறது.

மேல்நிலைக்கல்வியை முடிப்பதற்கும் பன்னிரண்டாண்டு பிடிக்கும். அந்தப் பன்னிரண்டாண்டும் இலவசமாகவே கற்கும் வாய்ப்பை அரசு இன்று எல்லாருக்கும் அளித்துள்ளது. அன்றியும், தாழ்த்தப்பட்ட வகுப்புகள், பிற்பட்ட வகுப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தேவையைப் பொறுத்து, உயர்கல்வித் துறையிலும் சம்பளத்திற்கும் சாப்பாட்டிற்கும் தேவையான பொருளை அரசு வழங்குகிறது. எனவே, நுண்ணறிவும் ஆர்வமும் உடைய மாணவர்கள் கல்வி கற்க நமக்கு வசதியில்லையே என்று முன் காலத்தில் வருந்தியது போல இன்று வருந்த வேண்டியதில்லை.

மேலே சொன்னவை போன்ற பல வேறு சலுகைகளையும் பயன்படுத்திக் கொண்டு இன்று எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் பட்டதாரிகளாகி விட்டார்கள். ஆனால் அவர்களுள் எத்தனையோ பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். 1980 டிசம்பர் மாதக் கணக்குப்படி 85,000 பட்டதாரிகள் தமிழ் நாட்டில் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். அதனால் பட்டதாரி இளைஞர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் எவ்வளவு துன்பம் உறுவார்கள் என்பதை நாம் எடுத்துரைக்க வேண்டியதில்லை.

படித்தவர்களுள் யாருக்கு வேலை கிடைக்கிறது என்பதை இப்போது பார்ப்போம். மருத்துவக்கல்வி, பொறியியற் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி, வேளாண்மையியற் கல்வி போன்ற துறைகளில் பயின்றவர்கள் யாரும் வேலையில்லாமல் சும்மா இருக்கின்றனர் என்று சொல்ல முடியாது. அதுபோலவே பள்ளி இறுதித் தேர்வெழுதி வெற்றி பெற்ற பின் பலதொழிற் கல்வி நிலையங்களில் (Polytechnics) மூவாண்டு பயின்று

பெறுவார்கள், பிறர்க்கு அந்த வாய்ப்பு இல்லாமற்போய்விடும் என்று சிலர் அஞ்சக்கூடும். அதனுல் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுள் 60 சதவீத மதிப்பெண் வாங்கியோருக்கும், பிற் பட்ட வகுப்பு மாணவர்களுள் 65 சத வீத மதிப்பெண் வாங்கியோருக்கும் முற்பட்டவகுப்பு மாணவர்களுள் 70 சதவீத மதிப்பெண் வாங்கியோருக்கும் மட்டுமே கல்லூரிகளில் இடந்தரலாம் என்று ஒருவிதியை வகுத்துக் கொள்ளலாம்.

நல்ல மதிப்பெண்களைப் பெருத வர்களும் உயர்கல்வி கற்கவேண்டு மென்று விரும்பினுல், அவர்களுக்கும் இன்று வாய்ப்பிருக்கிறது. சிறந்த பல்கலைக்கழகங்கள், மாலைக் கல்லூரி கள், அஞ்சல் வழிக் கல்வி நிலையங்கள் என்று பல நிறுவனங்கள் இன்று செயல்படுகின்றன. யாதேனும் தொழில் செய்துகொண்டே இந்தக் கல்வி நிறுவனங்களில் யார் வேண்டு மாஞலும் சேர்ந்து படித்துப் பட்டம் பெறலாம். வளர்ந்த நாடுகள் பல இந்த முறையைக் கடைப் பிடிக் கின்றன. வளர்கிற நாடாகிய நமது நாட்டில் தகுதியில்லாதோர்க்கும் உயர் கல்வி அளித்துவிட்டு, பின்னர் அவர்களை என்ன செய்வதென்றே தெரியாமல் வருந்தலாமா? பட்டம் பெற்றேர் பலர்க்கு வேலை கிடைக்காது என்று தெரிந்தும் இவர்கட்காகப் பொருட் செலவு செய்வது இன்றைய நிலையில் நமது நாட்டுக்கு நாம் செய்யும் தீமையே

மு. ரா. பெருமாள் முதலியார்
பி. ஏ. (ஆனர்ஸ்) எல். டி.,
சைதை ஆசிரியர் கல்லூரி
முன்னுள் முதல்வர்
ஓய்வுபெற்ற தமிழ் வளர்ச்சி இயக்குநர்

அவன் ஒரு மனிதன்; ஏழை, நாம் அவனுக்கு உபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் செய்கின்ற உதவியைக்காட்டிலும் அந்த ஏழை உள்ளத்தில் கடவுளைக் கண்டு, அவன் கடவுளுடைய ஆலயம்; அவனுக்குச் செய்யும் உதவி கடவுளுக்குத் தந்த காணிக்கையாகும் என்று செய்வது எத்துணைப் புனிதமானது என்று சிந்தியுங்கள்,

— திருமுருக கிருபானந்தவாரியார்

செங்குந்தர் குல
வரலாறு

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தமிழ் மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை–600 005

கடவுளர் பலர் இருப்பினும் 'நுதல்விழி நாட்டத்து இமையோனும்' முக்கட் பரம்பொருளையே தமிழர் தெய்வம் எனக்கொண்டு வழிபட்டனர். இந்திர விழாவூரெடுத்த காதையில் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோ வடிகள் பல தெய்வங்களைக் குறிப்பிட வருபவர் முதன்முதலாகப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிவ பெருமானையே குறிப்பிடுவர். சிவன் முதற்கடவுள், முதலாவது கடவுள் என்பதனால் 'முதலி' எனவும் வழங்கப் பெற்றார். வீதி விடங்கப் பெருமான் என்றும் தியாகராசப் பெருமான் எழுந் தருளிய திருவாரூர் முதலாக, திருக் காரோணம், திருநள்ளாறு, திருக் காருயில், திருக்கோளரியூர், திருவான் மியூர், திருமறைக்காடு ஈருகிய ஏழு சிவத் தலங்களுக்கும், திருவெங்காடும், பழமையான சிதம்பரமும் திருவை யாறும், திருச்சாய்க்காடும், இட மகன்ற மாகாளம் என்னும் பெயர் பெற்ற சப்த சிவதலங்களும், திருவிடை மருதூரும் திருச்செங்காடும் ஆகிய இத்தலங்களுக்கு ஆதிமுதல் தர்ம கர்த்தாக்களாக இருந்து நன்கு பரி பாலனஞ் செய்து வருகின்றவர்கள் செங்குந்தர் குலத்தவர்கள் என்றும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெருமான் ஈட்டியெழுபது என்னும் நூலிற் குறிப்பிடுகின்ருர். தேவதேவர்க் கும் யாவர்க்கும் முதல்வதனை விளங்குகின்ற காரணத்தால் சிவன் முதலிகள் என்று கொள்ளப்பட்டது போல, அப்பெருமானை வழிவழியாக வழங்கி வந்தவர்களும் 'முதலிகள்' எனப்பட்டனர். இவர்கள் 'முதலிகள்' எனப்பட்டமைக்கு மற்றுமோர் காரணமுமுண்டு. ஒருகால் உமா தேவியாரின் பாதச்சிலம்பில் உதிர்ந்த நவமணிகளில் அவ்வுமாதேவியாரின் திருவுருவத்தைக் கண்ணுற்றுச் சிவ

பெருமான் கொண்டருளிய இச்சையால் கருவுற்ற ஒளியுடைய நவத்திரனப் பெயர் கொண்ட மகளிர்களிடத்தில் மேதகைமையும் வீ ர த் த ன் மையும் கொண்டு மிருதுவான மீசையுடனும் உ தி த் த பெரிய தவத்தையுடைய வீரவாகு தேவர் முதலிய நவவீரர் களில் மரபினர் இச்செங்குந்தர்கள் ஆவார்கள் என்பதாம்.

கந்தபுராணம் தி ரு வ வ தா ர ப் படலத்தில் இவ்வரலாறு மிகவிரிவாகப் பேசப்பட்டுள்ளது. இவண் சுருங்கக் கூறுவம்.

ஒருகாலேயில் திருமால், பிரமன், உருத்திரன் உள்ளிட்ட தேவர்கள் எல்லோரும் சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் முதலிய அவுணர்களால் துன்புற்று, திருக்கயிலாய மலேயில் எழுந் தருளிய சிவபெருமானே வணங்கித் தங்கள் துன்பத்தைத் து டை க் க வேண்டுமென்று இரந்து நின்றனர். 'சூரனே வதஞ்செய்து, தம் துயர் போக்க ஒரு திருக்குமாரரை உமக் கொ ா ப் பா க உம்மிடத்திலின்றும் தோ ற் று வி த் த ரு ள் க' என்றும் குறையிரந்தனர்.

தடங்கருணேப் பெருந்திருவினராம் சிவ பெருமானும் அவர்தம் வேண்டுகோளே ஏற்று, ''நீங்கள் எல்லோரும் சிறிதும் வருந்தாதொழிக; யாம் ஒரு புதல் வனேத் தருவோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அதன்படியே தமது பழைய திருமுகங்களேக் கொண்டு, அத்திருமுகங்களிலுள்ள நெற்றிக்கண் தோறும் ஒவ்வோர் அ க் கி னி ப் பொறியைத் தோற்றுவித்தருளினர். அத்தீப்பொறியில் வெம்மை எவரையும் அண்டவிடாமற் செய்தது. அண்ட ரண்ட பகிரண்டங்களெல்லாம் நடு நடுங்கின முத்தேவர் எவரும் அணுக ஆற்ற பெற்றவராய் நின்றனர். அத்தீப் பொறிகளின் வெம்மையைக் கண்டு, சிவபெருமான் பக்கத்தே எழுந்தருளி யிருந்த உமாதேவியார் வே ர் த் து த் திருவுளம் கலங்கி எழுந்து, தமது திருவடிகளில் அணிந்திருந்த நவத் தினச் சில ம் பு க ள் ஒன்ருேடொன்று புலம்பித் தாக்கத் தம் திருக்கோயிலி னுள்ளே ஓடினர். தேவர்கள் மீண்டும் சிவபெருமான் திருவடிகளே வணங்கி, உலக உயிர்கள் அனேத்தையும் கருகச் செய்துவிடும் அத்தீப்பொறியின் வெம் மையினே ஆற்றுவித்து நிற்க வேண்டும் என வேண்டினர். அப்பொழுது சிவ பெருமான் புதியவனைத் தோன்றிய தம் ஐந்து திருமுகங்களேயும் மறைத்து, தம் ஒரு முகத்தோடு முன்போல எழுந் தருளியிருந்து, தம்முடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய அக்கினிப் பொறிகள் தமது திருமுன் வரும் வண்ணம் உளங்கொண்டருளினர். எங்கும் பரவியிருந்த வெம்மைத் தீ ஆறு பொ ா றி க ள ா ய் அமைந்து சந் நிதியை அடைந்தது. சிவபெருமான் வாயு தேவனேயும் அக்கினி தேவனே யும் அழைத்து, ''நீங்கள் இருவரும் இப்பொறிகளேத் தா ங் கி க் கொ ண் டு சென்று கங்கையில் விடுவீர்களாக அக்கங்கை இப்பொறிகளேச் சரவணப் பொய்கையில் சென்று சேர்க்கும்'' என்ருர். இ வ் வா று சேர்க்கப்பட்ட அனற்பொறியே, அருவமும் உருவமு மாய், அ நா தி ய ா ய் ஒன்ருய்ப் பல வாய்ப் பரப்பிரம்மமாய்நின்ற சோதிப் பிழம்பே தி ரு மே னி ய ா க, கருணே வெள்ளம் சுரக்கும் ஆறு திருமுகங் களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு, முருகப்பெருமான் உலகம்

உய்யும் வண்ணம் திருவவதாரஞ் செய்து, சரவணப் பொய்கையில் செந்தாமரை மலரின் மீது வீற்றிருந் தருளினுர். கார்த்திகை மாதர்கள் அறுவர் தம் முலைப்பால் கொடுத்து வளர்த்து வந்தனர். எனவே முருகன் 'கார்த்திகேயன்' எனப்பட்டான். முருகன் அளவிளாத குழந்தைப் பருவ ஆடல்களை நிகழ்த்தி வருங்காலையில் அவனைக் குழந்தையெனக் கொள்ளு தலையொழித்து, சிறிதும் பிரியாது அஞ்சி, வழிபடு கடவுளராகவே கொண்டு அனைவரும் அவனை மெய் யன்போடு துதித்து வருவாராயினர்.

இனிக் கந்தபுராணம் துணைவர் வரு படலத்தை நோக்குவோம் :

உமாதேவியார் சிவன் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறிகள் பிறந்த அளவில் அதன் வெம்மைக் காற்ருது ஓடியபொழுது, அவருடைய திருவடிச் சிலம்பினின்றும் சிதறிய இரத்தினங் களெல்லாம் சிவபெருமான் திருமுன் விளங்கின. சிவபெருமானுடைய ஆணையினுலே, அந்நவரத்தினங்களி னும் உமாதேவியாருடைய திருவுருவந் தோன்றியது. அத்திருவுருவங்களை நோக்கி, திருவருளினுல் 'வாருங்கள்' என்று திருவாய் மலர்ந்தருள, ஒவ் வோர் இரத்தினத்துக்கு ஒவ்வோர் சக்தியாக நவசத்திகள் தோன்றினுர் கள். அவர்கள் சிவனுடைய திருவடி களை வணங்கித் தொழுது நின்று அவரிடத்தே விருப்பம் வைத்தமை யால், ரிஷி பத்தினிகளைப் போல விரைவிலே கருவுற்ருர்கள். இவை யனைத்தையும் உமாதேவியார் கண்டு அந்நவசத்திகள் மீது சினங்கொண்டு, ''நீங்கள் இங்கு நமக்கு மாறுபட்ட மையால், பல காலம் இக்கருவோ டேயே இருக்கக் கடவீர்கள்'' என்ருர். அப்பொழுது நவசத்திகள் அஞ்சி நடு நடுங்கிச் சரீரம் வியர்த்தார்கள். அவ் வியர்வையினின்றும் சிவபெருமான் திருவருளினுலே ஓரிலக்க வீரர்கள் உதித்தார்கள். அவ்வீரர்கள் இடியேறு போன்ற சொல்லையுடையவர்களாயும், பொன்னுடையை உடுத்தவர்களாயும், வாளையும் கேடயத்தையும் கையிலேந் தியவர்களுமாய் சிவபெருமான் திரு வடிகளை வணங்கி நின்றனர். சிவபெரு மான் அவர்களை நோக்கி ''நம் மைந் தர்களே! கேட்பீராக! தேவர்களுக்குப் பகைவராகிய அசுரர்களைக் கொல்லும் பொருட்டு நம் மைந்தனுகை முருகக் கடவுளுக்கு நீங்கள் யாவரும் படை களாகக்கடவீர்கள்'' என்ருர். அவ்வீரர் கள் இலக்கரும் நாடோறும் சிவபூஜை சிவசந்நிதியை அகலாது, சிவமாகிய திருத்தொண்டின் வழி நின்ருர்கள்.

இஃது இவ்வாறிருக்க, முன் உமா தேவியாரால் சினவப் பெற்ற நவசக்தி மாதர்கள் அம்பிகை வழிபாடாற்றிப் பல காலம் கருப்பத்தோடிருந்தார்கள். அந்நவசத்தியினுடைய கருவினுள்ளே நந்திகரைத் தலைவர்கள் குழந்தை களாய்ப் புகுந்து காளையர்களாகிச் சிவன் திருக்கழல்களைச் சிந்தித்துத் தொழுது கொண்டிருந்தார்கள். அவர் கள் இவ்வாறு யோகம் செய்து கொண்டிருத்தலால் கருப்பம் மிக முதிர்ந்து பாரமாதலும், நவசத்திகள் சிவனையும் அவன் தன் சிந்தைக்கினிய உமாதேவியாரையும் வணங்கிநின்று, ''அடியேங்கள் இதுகாறும் இக்கருப் பத்தால் வருந்தினேம். இனிப் பொறுக் கலாற்ருேம்; திருவுளமிரங்கியருளுங் கள்'' என்று வேண்டினர். அவர்தம் வேண்டுகோளுக்குத் திருவுளமிரங்கிய தேவ தேவர் தம் தேவியார் திருமுக

நோக்கி, ''உமையம்மையே! உன் காற்சிலம்பினின்றும் உதித்த இந்நவ சத்திகள் உன் சாபங் கா ர ண ம ா க நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து மிக வருந்தினர். இனி மைந்தர்களைப் பெறும் பொருட்டு அருள் செய்க'' எனப் பணித்தார். உமாதேவியாரும் அ ரு ட் க ண் காட்டி, 'நன்று' என நவின்று, நவசத்திகளை நோக்கி, ''இனி நீங்கள் மைந்தர்களைப் பெறுவீர்களாக'' என்று கூறலும், அவர்கள் வயிற்றினுள் யோகம் செய்து கொண்டிருக்கும் வீரர்கள் அதனையறிந்து அவ் யோகத்தை விடுத்து, மனமகிழ்ந்து, சிவன்தன் கணக்கிலாத் திருவருளை நினைத்து தொ ழு து பிறக்கும் பொருட்டுத் தங்களுக்குள்ளே நினைத்தார்கள். இவ்வாறு நினைத்தபோது மாணிக்கவல்லியிடத்து வீரவாகுவும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீ ர ம கே ந் திரரும், கோமேதக வல்லியிடத்து வீரமகேச்சுரரும், வைடூரிய வல்லியிடத்து வீரபுரந்தரரும், வைர வல்லியிடத்து வீரராக்கதரும், மரகதவல்லியி ட த் து வீரமார்த்தான்டரும், பவள வல்லியிடத்து வீராந்தகரும், இந்திர நீலவல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள். இவ்வீரர்கள் ஒ ன் ப தி ன் மரும் சிவபெருமானுடைய திருவருளினாலே தங்கள் தங்கள் அன்னையர்களுடைய நிறத்தைக் கொண்டவர்களாய், பொன்னுடை உ டு த் த வ ர் களாய் பலகாலம் வளர்ந்த உறுப்புகளோடு, நவசத்திகளின் உந்தியின் வழியே பி ர ம தே வ ரை ப் போலத் தோன்றினார்கள். இ வ் வ ண் ண ம் தோன்றிய நவவீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் உள்ளார்ந்த உவகையுடன் வணங்கி எழுந்தனர். சிவபெருமான் தம்மருங்கே இருந்த உமாதேவியாரை நோக்கி, ''நம் மைந்தர்களாகிய இவர்கள் அறிவுடையவர்கள்; ஆற்றலுடையவர்கள்; மானமுடையவர்கள்; ஒழுக்கமுடையவர்கள்; இவர்கள் புதியவர்கள் அல்லர்; நந்திகணத் தலைவர்கள்'' என்று சொன்னார். உமாதேவியாரும் அதுகேட்டு மனம் உவந்து அம்மைந்தர்களுக்குத் திருவருள் பாலித்து, தனித்தனி ஈட்டி கொ டு த் த ன ர். சிவபெருமானும் தம் பங்கிற்கு அவர்கள் எல்லோருக்கும் தனித்தனி வாளும் கொடுத்து, ''ஓ ரி ல க் க மைந்தர்களோடு நீங்களுங் கூடி உங்களுக்குரிய நாயகனாகிய அறுமுகக் கடவுளை விட்டு அகலாது, அவன் இட்ட கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டொழுகக் கடவீர்கள்'' என்று அருளிச் செய்தார். அ வ் வ ண் ண மே இவ்வொன்பது வீரரும், இலக்கரும் நாள் தோறும் பேரன்புடையவர்களாய், சிவ ச ந் நி தி யை அகலாது, சிவத் தொ ண் டி ன் நெ றி யி ற் ற லை ப் பட்டார்கள்.

இ வ் வா று உமாதேவியாரால் உளம் மகிழ்ந்து தரப்பட்ட ஈட்டியின் குந்தத்தின் சிறப்பினைக் கவிராட்சதர், கௌடப் புலவர் ஒட்டக்கூத்தர் பின் வருமாறு 'ஈட்டியெழுபது' என்னும் நூலிற் குறிப்பிடுகிறார்.

> பிறந்தவொன் பதின்மர்குந்தரப்
> பெருமையாம் பேசமாட்டோம்
> பறந்தன கழுகும் பாறும் பயிரவி
> காவிய ளிஞ்ச
> மறந்தகு மவுணர ராட்ட மடங்கின
> மகிழ்ச்சி யால்வாய்
> திறந்தன வலகை யீட்டஞ் செய்யவாய்ச்
> சிறுவரோடே
>
> — ஈட்டியெழுபது : 5

எனவே சூரபன்மாவை அழித்த சுப்பிரமணியக் கடவுளுக்கு உறுதுணை யாய் அமைந்த நவசத்தி மாதர்தம் மைந்தர்களாய் விளங்கும் வீரவாகு தேவர் உள்ளிட்ட நவவீரர்களின் வழித்தோன்றல்களாய்த் தொன்று தொட்டு வாழ்ந்துவரும் குலத்தவரே செங்குந்தர் ஆவர் என்பது தேற்றம்.

இனி, இவ்வினப் பழமையும் சிறப்பும் ஒருவாறு விளக்கமாகக் காண் போம்.

அம்பல் சேந்தனுற் பாடப்பெற்ற திவாகர நிகண்டிற் பின்வரும் நூற்பா வருகின்றது.

செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்
தந்துவாயர் காருகர் கைக்கோளர்

என்று சேந்தன் திவாகரரால் கூறப் பட்டுள்ள செங்குந்தப் படையர், சேனைத் தலைவர், தந்துவாயர், காருகர், கைக்கோளர் என்னும் ஐந்து பெயர்களும் கைக்கோளரையே குறிக் கின்றன என்பது புலப்படுகின்றது. மேலும் சோழ மன்னர்கள் காலத்தில் முன்னணி வீரர்களாய்ப் படைப் பிரிவில் முதலிடம் வகித்தவர்கள் செங்குந்தர்களே ஆவர்.

''விசயாலயன், பராந்தகன், கோப் பரகேசரி, இராசேந்திரன், இராச ராசன், சுந்தரசோழன், திரிபுவன தேவன், வீரராசேந்திரன், குலோத் துங்கன், விக்கிரம சோழன், இராச நாராயணன், வீரசம்பன், அநபாயன், அபயகுலசேகரன், கோப்பெருஞ் சிங்கன், சுந்தர பாண்டியன், வல்லாள தேவன், வாணுதராயன் முதலிய அரசர்கள் காலத்து எழுதப்பட்டுள்ள அரும்பெற்றச் செய்திகளுள் இப்பெரும் பிரிவினர்களைப் புகழாத இடங்களே கிடையாது. இவர்களது ஒழுக்கங் களுள் பல உயர்ந்தவையுள்ளவை யென்று முற்காலத்திலுமெண்ணுதற்கு இடமுண்டு. பல சாதனங்களுள் இச் செங்குந்தர்களைப் பேரரசர்க்கும் சிற்றரசர்க்கும் உரிமை தரும் சேனை யாளர்களாகக் கூறப்படும் அரிய பெரிய உரிமைப் பட்டங்கள் எய்தி னரும் பலர். திருவண்ணமலையில் இறைவன் கோயிலாகிய அண்ணமலை யுடைய நாயனுர் கோயிலுள் வல்லாள தேவரால் எடுப்பித்த கோபுரத்தில் தென்பாகத்தில் எழுதப்பட்டுள்ள ஒரு அரிய கல்வெட்டினில் கைக்கோளர்க்கு வலங்கை வரிசைகள் ஏற்படுத்தியுள்ள சிறப்புகளை ஆராயும்தோறும் அவர்கள் பெருமையைச் சொல்லத்திறம் அன்று. பழைய ஒழுக்கத்தை இன்றும் கைவிடா தொழுகி வரும் தமிழ்நாட்டுச் சாதியர் என்னும் பகுப்பினுள் இவர்களும் ஒரு பான்மையரென்றும் குறிக்கப்படும்... இச்சாதியார் எத்தனையோ கோயில் களை எடுப்பித்தனர். கச்சியுள் ஆண்ட பல தொண்டைமான்கட்குத் துணை யாகப் போந்து பல போர்களில் வெற்றி கொண்டனர். இவர்களின் வீரச் செயல்களின் வீரர்கள் பலரிருந்து மேம்பட்டனர்களென்பதும் அவர்களது பெயர்களைக் கொண்டே உணரலாம். அவர்களுள் ஊன் புசிக்காது தூய்மை யாக இருந்தவர் பல்லோர்கள். அவர் கள் இடையில் மேற்கொண்ட தொழில் களுள் நூல் நூற்றல், ஆடையாக்கல் முதலிய செய்திகளினுலேயே அவர் களது பாவச் செயல் இன்மையாகிய விருத்தியைப் புலப்படுத்தும். அவர்கள் பழந்தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்த வர்களென்றெண்ணுவதற்குச் சான்ருக இன்றும் தங்கள் தமிழாசிரியர்களிடத் திலேயே பல சடங்குகளையும் நடத்திக்

கொள்ளுகின்றனர். பிற்காலத்தும் கூட இவர்களது ஆட்சியில் அரும் பெரும் கோயில்கள் அகப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றுள் கச்சி வேளுக்கைத் தண்காக்கோயிலும், கச்சி காச்சாலையுடைய நாயனுர் கோயிலும், கச்சி மேற்றளியும், கச்சிப் பஃறளியும் இன்னும்பலவாம். உலகத்து மக்கட்கு மானத்தைக் காப்பதற்கு உறுதியாவன ஆடை முதலிய உடுக்கைகளே. அவற்றை முற்காலங்களில் நூல் நூற்கும் பொறி முதலியன இல்லாத போழ்தத்துவப் பெண்டிரும் ஆடவரு மாய்க் கையாளும் சிறு கருவிகளினுலும் பஞ்சுகளைக் கொண்டு நூல் நூற்று ஆடை முதலியவமைத்து மக்களுக்கு மானத்தை நீக்கி வைத்தவர்கள் தமிழ் நாட்டுக் கைக்கோளர் அல்லது கைக் கோலர் என்கின்ற செங்குந்தர் என்னும் பெரும் பிரிவினரே.

இவ்வாறு கூறுவர் தமிழ் மருத் துவன் காஞ்சிபுரம் ஸ்ரீமத் திரு. சுப்பிர மணிய தேசிகனுர் அவர்கள். செங்குந் தர், கைக்கோளர், கைக்கோலர் ஆகிய சொற்கள் ஒரு பொருள் கொண்டன வேயாம் என்பர்.

எய்தவர்க்குச் சிறைச்சோறு மீகுவர்
கைக்கோள ராகிய செங்குந்தரே

என்னும் செய்யுளடி கைக்கோளரும் செங்குந்தரும் ஒன்றெனவே காட்டும்,

நிதம் அந்திசந்தி சிவசிந்தனை மறவாதவ
ராவரிச் செங்குந்தரே

என்னும் அடி செங்குந்தர் சிறந்த சீல முடையவர் எனக் காட்டும்.

குருபூசை சிவபூசை மறவாத தயவாளர்
கொட்டியருள் சாப்பாணியே

என்றும்,

தேவே விலகினும் நாவிலிங் காதவர்
செங்குந்தரே

என்றும் வருதல் காண்க.

செங்குந்தர் வீரவாகு தேவர் ஆகிய
ஒன்பதின்மர் மரபில்வந்த வீரர்

என்பது,

தேவியுமை பாதச் சிலம்பில்வரு
வீரியர்கள் சிறுதே குருட்டி யருளே

என்பதனுலும்,

சிவகயிலாய பரம்பரையா ரென்னும்
செங்குந்தரே

என்பதனுலும்,

குமரச் செட்டிக் கிளையநற் செட்டிகளாகும்
இச்செங்குந்தர்

என்பதனுலும் விளங்கும்.

செங்குந்தர் சிறந்த வீரர்கள் என்பது,

சண்முகன்தற் சேனுபிதிகளும் சேனையும்
ஆனவர் செங்குந்தரே

என்பதனுலும்.

சிங்கள மாதிய பல்தேயம் வென்றவர்
செங்குந்தரே

என்பதனுலும் விளங்கும்,

செங்குந்தர் சிறந்த ஒழுக்கமுடை யவர் என்பது,

தேவார முற்றும் படிப்பாரும் அங்கையிற்
செங்குந்தரே

என்பதனுலும்,

திருவாசகஞ் சொல் ஒருவா சகத்தரும்
செங்குந்தரே

என்பதனுலும் விளக்கமுறும்.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகிய மூன்று சோழப் பேரரசர் காலத்திலும் சிறக்க வாழ்ந்தவர். சோழ மன்னரின் குல குருவாயும், ஆசிரியராயும், அவைக் களப் புலவராயும் ஒருங்கே அமைத் தவர். அவர்களாற் பல சிறப்பும் பரிசுகளும் பெற்றவர். தம் குலத்தவர் மேன்மை விளங்கும்பொருட்டு ஈட்டி யெழுபது என்னும் நூலினைப்பாடியவர் இவ்வாறு எழுந்த ஈட்டியெழுபது என்னும் நூலினை ஒவ்வொரு செங்குந் தரும் படித்துத் தம் குலப் பழமையினை யும் பெருமையினையும் தெரிந்து கொள்வார்களாக. சுருங்கச்சொன்னால் பண்டு தொட்டு வீரமும், சிவ வழி பாடும், ஒழுக்க சீலமும், தமிழ்ப் பற்றும், புலமையும், 'செய்யுந் தொழிலுள் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை நேர்' என்று சொல்லப்பட்ட நெசவுத் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வருவது செங்குந்தர் குலம் என்று குறிப்பிட்டு விடலாம். இவர்கள் முதலியர் என முன்னர் அழைக்கப் பெற்றப் பின்னர் முதலியார் என அழைக்கப் பெற்றனர். முதலியர் பட்டச் சிறப்பு,

இந்திர னயன்மா றேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபான் மையினாற் சூல மழுப்படை யத்தனார்க்கு
முந்திய நாமத் தானு முதலிய ராகை யாற்செங்
குந்தர் சந்ததிக்கு மப்பேர் முதலிய ரென்று கூறும்

— ஈட்டியெழுபது : 29

என்னும் ஈட்டியெழுபதுச் செய்யுளால் தெரியவரும். குந்தத்தின் சிறப்பினை யும் ஈட்டியெழுபது பின்வருமாறு குறிப்பிடும்,

பூமாலை கடப்பத் தாமம் பூங்மணித் தெரியல் செய்ய
பாமாலை தன்னைக் கைக்கொள் முதலியர் பங்க தாக்கி
மாமாலை யொல்போர் காலில் வழிதுழிக் குடரின் மாலை
தேமாலை யாகச் சூடுஞ் செங்குந்தம் போலு முண்டோ

— ஈட்டியெழுபது : 43

மேலும் ஒட்டக்கூத்தர் செங்குந்தர் மீது ஒரு பரணியையும் பாடினார் என்பது பின்வரும் வெண்பாவான் விளங்கும்.

கூத்தன் பரணியுலா கொண்டுமகிழ் பூத்தகுந்தம்
வேத்தரசைச் சோனாட்டில் வேர்களைந்து பார்த்திபனும்
செய்ய குலோத்துங்கன் செங்கோல் வழி நடப்பச்
செய்தகுந்தம் செங்குந்தந் தேர்

இவ்வாறாகத் திருக்கயிலாய பரம் பரையில், சிவநெறி மறவாத திறத்தில், அறுமுகக் கடவுளின், அரும் பெறற் றுணைவராய வீரவாகு தேவர் வழிவந்த சீலமிக்க, தமிழாற்றல் மிக்க செங்குந்த மரபினர் வான மீனினும் பன்னாள் வகையுற, காவிரி யாற்று மணலினும் பன்னாள் பயனுற, வையத்து வாழ் வாங்கு ஒற்றுமையுணர்வுடனும் உறு திப்பாட்டுத் திறத்துடனும் வாழ வேண் டுமென்று உண்ணாமுலை உமையா ளொடு உடனாகிய ஒருவன் தாளினை வணங்குவன்.

பொன் விழா நன்னாளில், செங்குந்தர்
குலத்தலைவர்கட்கும் தொண்டர்களுக்கும்
எனது வணக்கமும் நன்றியும் !

S. A. முனிரத்தினம்

லுங்கி வியாபாரம்,

நெ. 15. பெரியப்பு முதலி தெரு,

நாணம் பேட்டை,

குடியாத்தம், - வ. ஆ. (மா.)

பொன்விழா காணும்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினர்
அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துகள்

எங்கள் தனி தயாரிப்பான கைலிகளிலும், கைக்குட்டைகளிலும் பல புதுமைகள். கண்ணைக்கவரும் பல வண்ண வண்ண கலர்களில், பலரகங்களில் உற்பத்தியாகும் புகழ்மிக்க எங்கள் கைலிகள், கைக்குட்டைகளையும் வாங்கி உபயோகியுங்கள்.

ஈஸ்ட் இந்தியா
டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன்

போன் : **2837**

தயாரிப்பாளர்கள், மொத்த, சில்லரை வியாபாரம்
111-A, ஏகாம்பரநாதர் சன்னதி தெரு,
தபால் பெட்டி எண் 12
காஞ்சீபுரம்-631 502

கைத்தறி துணியை வாங்குங்கள்!

நாங்கள் 20^s, 26^s, 40^s 60^s, 80^s, 100^s, நூல் ரகங்களில் தயார்செய்த வேட்டி, பீஸ் துவர்த்து, ஸ்பேஷல் புளியிலைக்கரை வேட்டி, கலர் பீஸ், நேரியல், பிரிண்டட் சாரி, ஷர்ட்டிங் முதலியவைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் சர்க்கார் சலுகையுடன் விற்பனை செய்கிறோம்.

எங்கள் உற்பத்தி ஜவுளி ரகங்கள் தமிழ்நாடு கைத்தறி எம்போரியங்களிலும் டிப்போக்களிலும் விற்பனை செய்யப்படுகிறது.

ஆத்திவிளை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிட். நிர். H-52,

பூட்டேற்றி, தெருவுக்கடை P. O. Pin : 629157,
கன்னியாகுமரி மாவட்டம்.

USE AND BUY ALWAYS
HAND-LOOM FABRICS
GOODS OF QUALITY & VARIETY

Authivilai W. C. S. Ltd., No. H-52,
POOTTETTY, THERUVUKKADAI, P. O.
Pin : 629157. Kanyakumari District.

R. DHASAN, (Secaetary)
C. VELAYUDHAN (President)

80

வாழ்க கைத்தறி ! வளர்க கூட்டுறவு !!

☎ 6

சிவடெக்ஸ்

சிவகிரி தெற்குப்பாளையம் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம், லிமிடெட்.,

No. K. 1133

சிவகிரி – 638 109 : : பெரியார் மாவட்டம்

எங்கள் சங்கத்தில் தயாராகும் ::

40 செ. & 60 செ. 7 மீட்டர்
பவாஞ்சு, ஜரிகை கட்டம் பேட்
முதலிய சேலை ரகங்களும், 54 x 90
கருப்பு பிளாங்கட், டவல்ஸ், வேஷ்டி ரகங்களும்
உத்திரவாதமுள்ள சாயங்களில் கிடைக்கும்.

அடர்த்தியான நெசவு
நாகரீகமான டிசைன்கள்
நம்பிகைக்கு உகந்தது.

எங்கள் சங்க ஜவுளிகள் எல்லா

"கோ ஆப்டெக்ஸ்"

எம்போரியங்களிலும் கிடைக்கும்

இங்ஙனம்
K. லட்சுமணன், தலைவர்
V. ஷண்முகம், உப–தலைவர்

இயக்குனர் :
S. R. சின்னுசாமி, R. பாலசுப்பிரமணியம்
K. குருசாமி

நன்றி!

''செய்யுந் தொழிலே சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை''

கண்ணைக் கவர்ந்திடும் வண்ணக் கலர்களில் உங்கள்
எண்ணம் இனித்திடும் வகையில் ஒவ்வொருவர்
இல்லங்களையும் அழகுசெய்வது எங்கள்

சென்குமார் டெக்ஸ்

கைத்தறித் துணிகளே !

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள்,
டர்க்கித் துண்டுகள், அலங்காரத் திரைத்துணிகள்
மற்றும் பாலியஸ்டர், சூட்டிங் ரகங்கள்.

சில்லரை & மொத்த விற்பனை நிலையங்கள் :

1. அபிநய் தியேட்டர் காம்ப்ளெக்ஸ்,
   நெ. 3, பி. வி. கே. அய்யங்கார் ரோடு, பெங்களூர்-560 009
2. நடராஜ் ஹோட்டல் எதிரில்
   காளீஸ்வரராவ் ரோடு, கவர்னர்பெட் விஜயவாடா-520002
3. கடை எண். 81, எம். ஜி. கிளாத் மார்க்கட், சிராளா-523155
4. 209–A, மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர்-641 002
5. பால நரசிம்மா சில்க் ஹவுஸ், தர்கா பஜார்,
   பொரதத்தூர்–516360

C. S. T. No. 4406 R. C. No. 325531

சென்குமார் நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

நெ. C. H. 4

சென்னிமலை - 638 051

தபால் பெட்டி எண். **11** போன் : **22**

என். பழனிவேலு, B. Com.
துணி, நூல் கட்டுப்பாடு அலுவலர் /
செயலாளர்.

M. S. K. நடராஜ், B.A., B.L.,
தலைவர்

With the Best Compliments from:-

TIP TOP
Plastic Industries
Private Limited

26, Kasi Chetty Street, MADRAS-600 001

With best compliments from:-

Tel : "DHAVAMTEX"

Phone : 2463-5641

Post Box No. 230

Sri Dhavamani Textiles,

" ANNAI MARIAMMA ILLAM "

Manufacturers of EXPORT QUALITY FABRICS,

54, JINNAH STREET, **ERODE-638 001.**

AVAILABLE ALL KINDS OF EXPORT QUALITY FABRICS

பொன் விழாகாணும் தென் இந்திய

செங்குந்த மகாஜன சங்கத்திற்கு

எங்களது நல் வாழ்த்துக்கள்

★ ★

A. மாணிக்க முதலியார் & சன்ஸ்,

நெ. 10, ஜின்னு வீதி, ஈரோடு.

சரவணன் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்.,
நெ. K. H. 113

அம்மையார்குப்பம் – 631 301

திருத்தணி வட்டம் : : செங்கை மாவட்டம்

திரு	S. R. இராமலிங்கம்	தலைவர்
,,	ச. கெ. நடராசன்	துணைத்தலைவர்
,,	அ. மு. சம்பந்தன்	இயக்குநர்
,,	ச. க. குப்புசாமி	,,
,,	ப. அ. அண்ணாமலை	,,
,,	சொ. ஓ. நரசிம்மன்	,,
திருமதி	ச. மு. சுந்தரம்மாள்	,,

40^s X 40 X 45 X 7, 30 பாஸ்டு கலர் சேலைகள்

40^s X 40 X 45 X 5. 50 பாஸ்டு கலர் ,,

40^s X 40 X 36 X 8 பாஸ்டு கலர் பிரீடவுன் ஏற்றுமதி ரகம்

போன் : 63

அம்மையார் குப்பம் அறிஞர் அண்ணா கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

No. K. H. 88

அம்மையார்குப்பம் 631 301

திருத்தணி வட்டம். : : செங்கை மாவட்டம்.

திரு. S. சண்முகம் தலைவர்

,, S. M. தருமன் துணைத்தலைவர்

,, V. S. வீராசாமி இயக்குநர்

,, P. நரசிம்மன் ,,

,, ராணி மேகவர்ணம் ,,

,, E. K. திருவேங்கடம் ,,

,, K. E. கிருஷ்ணன் ,,

- $2/60^{s}$ & $2\ 80^{s}$ பாலியஸ்டர் சர்டிங்
- 40^{s} X 40 X 45 X 8 கெஜம் சேலை கெட்டியம்
- 40^{s} X 40 X 45 X 7 ,, ,,
- 40^{s} X 40 X 45 X 6 ,, ,,
- 40^{s} X 40 X 45 X 4 வேட்டி
- 40^{s} X 40 X 50 X 2 ,,
- 40^{s} X 40 X 50 X 4 லுங்கி
- 40^{s} X 40 X 36 X 4 துண்டு மடிகள்
- 40^{s}X40X36X8 பிரீடவுன் A கலர் ஏற்றுமதி ரகம்
- 40^{s}X 40 X 48 X 20 எக்ஸ்போர்ட் ரகம்

With the best compliments from :-

உ

PHONE { CHITTODE : 82
ERODE 4231 }

RC. No. 320038

CHANDRA TEXTILES,

MANUFACTURERS OF HIGH CLASS HAND-LOOM TOWELS & ETC.,

CHITTODE-638 102. (Via) Erode. (S. INDIA)

Sales Depot : 23, JINNAH STREET, ERODE.

சந்திரா டெக்ஸ்டைல்ஸ், சித்தோடு, P. O.

With best compliments from :-

உ

PHONE : No. 4914

R. C. No. 316145

S. K. Chinnaiya Mudaliar & Co.,

CLOTH MERCHANTS.

37, Jinnah Street, ERODE-638 001.

S. K. சின்னைய முதலியார் & Co.,

ஜவுளி வியாபாரம், 37, ஜின்னு வீதி, ஈரோடு-638 001.

பொன் விழா காணும் தென்னிந்திய மகாசன சங்கத்திற்கு

எங்களது மனமார்ந்த

நல் வாழ்த்துக்கள்!

நிறுவியது : 1925 | தொலை பேசி : 34775

எங்களிடம் தறிச் சாமான்கள் செய்வதற்கான

அந்தமான் வெந்தேக்கு மரங்களும்,

மற்றும் மாம்பலகைகள்,

பிளைவுட், ஹார்ட்போர்ட், லைட் ரூபிங் ஷீட்டுகள்.

ஏ. கே. ஆர். ஓடுகள் கிடைக்கும்.

ந. நல்லதம்பி முதலியார் & கோ.

94, பேசின் பிரிட்ஜ் ரோடு,

சென்னை-21.

தென்னிந்திய செங்குந்தர் மகாசன சங்கத்தின் பொன்விழாவிற்கு
எங்களது நல்வாழ்த்துகள்
நகரத்தில் வசதியுடன் தங்குவதற்கு சிறந்த இடம்
"அலங்கார் லாட்ஜ்"
105, காங்கிரஸ் ஹவுஸ் ரோட், குடியாத்தம்
போன் : 154

M. V. ரத்தின முதலியார்
மேனேஜிங் டிரஸ்டி
ஸ்ரீ பார்வதியம்மாள் ரத்தின முதலியார் சேரிடீஸ்
குடியாத்தம்

லட்சுமி டாக்கீஸ்
குடியாத்தம் (வ. ஆ. மா.)

பொன்விழா நன்நாளில் தென் இந்திய செங்குந்தர் மகாசன சங்கம்
நீடுழி வாழ்க என வாழ்த்துகிறோம்

ஒரே விலை] போன் : 657 [குறைந்த விலை

சிதம்பரத்திலே தில்லை 'நடராஜா'
திருவருணையிலே ஜவுளி 'நடராஜா'

நடராஜா டெக்ஸ்டைல்ஸ்,
18-A, திருவூடல் தெரு, திருவண்ணாமலை.

அறுசுவை சிற்றுண்டி & சாப்பாடு வகைகளுக்கு மிகச் சிறந்த இடம்

சேலம் கபே, 20, திருவூடல் தெரு,
திருவண்ணாமலை, N. A.

அரை நூற்றுண்டு அயராது உழைத்து
சீரிய சமூகப் பணியாற்றிய தென்னிந்திய
செங்குந்தர் மகாஜன சங்கத்திற்கு எங்களது
உளங் கனிந்த நல்வாழ்த்துக்கள் !

R. C. No. 119579

குவாகம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் லிட்., No. R. 983

குவாகம் அஞ்சல்,
உடையார்பாளையம் வட்டம், திருச்சி மாவட்டம், தமிழ் நாடு.

KUVAGAM

Hand-Loom Weaver's Co-operative Production & Sale Society Ltd.,
No. R. 1006.

KUVAGAM P. O.
Udayarpalayam, Tk.

Thiruchy Dist.
Tamil Nadu.

With best compliments from:-

M/s. VASAN PRINTERS,

No. 34, PILLAYAR KOIL STREET,

TRIPLICANE, :-: **MADRAS-600 005**

Phone : 842431

With the best compliments from :-

To The South Indian Senguntha Mahajana Sangam, Madras
on the occasion of its Golden Jubilee Celebrations

From

D. SHANMUGAM

Proprietor : SHANMUGA METAL INDUSTRIES

Manufacturers of : Aluminium Sheets, Circles, Vessels and Alloys

Office : 102, Choolai High Road, Madras-600 007

Phones : Office : 35811
Factory : 29958
Residence : 23259

சென்னை மாவட்ட சங்கத் தோற்றம், வளர்ச்சி, ஆற்றும் நற் பணிகள்.

இச்சங்கம் 26–3–1972ல் சென்னை, திருமயிலாப்பூர் நம் மரபைச் சார்ந்தவர்களால் தோற்றுவிக்கப் பட்ட அருள்மிகு வெள்ளீஸ்வரர் திருக் கோயிலிலுள்ள திருமண மண்டபத்தில் அப்போதைய நம் தலைமைச் சங்கப் பிரசாரகர் காலஞ் சென்ற பெரியவர் திரு. தி.அ. சண்முக முதலியார் அவர்கள் தலைமையில், காலஞ்சென்ற திரு. காஞ்சி மணிமொழியார் (திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார்) அவர்கள் முன்னிலையில், மாவட்டக் கிளைச் சங்கங்கள் அமைத்து, நம் குல மக்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்ப்பதற்காக 'சென்னை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப் பெற்றது.

அப்போது, திரு பொ. சி. பால சுப்பிரமணிய முதலியார் அவர்களைத் தலைவராகவும், திரு வி. என். ஆறுமுக முதலியார், பி. காம்., எப். சி. ஏ., திரு எஸ். வி. இராஜாபாதர் முதலியார் ஆகியோர்களை உப-தலைவர்களாகவும், திரு சரவண பழநிவேலு முதலியார், திரு டி.வி. கந்தசாமி முதலியார் ஆகியோர்களைச் செயலாளராகவும், திரு. ஏ. வி. இராமநாத முதலியார், எம். ஏ., அவர்களைப் பொருளாளராகவும் தேர்ந்தெடுத்து, சங்கம் பணியாற்றத் தொடங்கியது. இச்சங்கத்தில் சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள செங்குந்த பெருமக்கள் விரும்பினால், சென்னை தபால் எண்களுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களையும் உறுப்பினர்களாக இந்த மாவட்டக் கிளையில் சேர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. சங்கத்திற்கு தனி இடம் ஏற்படுகிற வரையில், மயிலையிலுள்ள சங்கத் தலைவர் இல்லத்திலேயே இயங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்ப்பது என்ற வகையிலும், சென்னையைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ளவர்களைச் சேர்த்துக் கொள்வதென்ற முடிவின்படியும் திருநாகேஸ்வரத்தில் (குன்றத்தூர்) 1-9-74 அன்றும், அனகாபுத்தூரில் 3-11-74 அன்றும், சோமங்கலத்தில் 24–11–74 அன்றும்,

சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். பின்னர், திருமழிசை கிராமத்திற்குச் சென்றபோது சென்னை - செங்கை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, பெயர் மாற்றம் செய்யப்பட்டு, சென்னையோடு, செங்கையும் இணைக்கப்பட்டது.

13-6–76 அன்று சைதை, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெருவிலுள்ள திரு. எஸ். டீ. பொன்னுசாமி முதலியார் அவர்கள் இல்லத்தில் சங்கத்தின் அலுவலகத் திறப்பு விழாவும், கல்வி நிதி துவக்க விழாவும் நடத்தப்பட்டது. அலுவலகப் பெயர்ப் பலகையை திரு. எம். டி. குப்புசாமி முதலியார் அவர்களும், கல்வி நிதியை காலஞ்சென்ற திரு. எம். பி. புனிதவேலு முதலியார் அவர்களும் துவக்கி வைத்தனர். அன்றே, கல்வி நிதிக்காக ரூ. 250/-ஐ 13 பேர்கள் கொடுத்துதவினர்கள்.

1976 டிசம்பர் 25, 26 தேதிகளில் ஈரோட்டில் நடைபெறவிருந்த மாநில செங்குந்தர் மாநாட்டிற்கு சங்கத்தின் சார்பில் பலர் போவதென்றும், அதற்கு முன் சங்கத்தின் சார்பில் ஒரு கருத்தரங்கை எல்லா மாவட்டச் சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகளை வரவழைத்து நடத்துவதென்றும் முடிவெடுத்து, 12–12–76 அன்று சைதையில் அக் கருத்தரங்கு சிறப்புடன் நடைபெற்றது ஈரோடு மாநாட்டில் காலஞ்சென்ற பெரியவர் திரு. தி. அ. சண்முக முதலியார் (தலைமைச் சங்க பிரசாரகர்) அவர்களின் புகைப் படத்தை இச் சங்கத்தின் சார்பாக இச்சங்கத் தலைவர் திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

திருமணங்களின் போது கல்வி நிதி வசூலிப்பதென்றும், அதுசமயம் மணமகன், மணமகள் ஆகிய இருவருக்கும் சங்கச் சார்பில் வாழ்த்துப் பா படம் போட்டுக் கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டு, அதன் பின்னணியில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் படம் வரையப்பட்டு, இந்த வாழ்த்து மடலை மணமக்கள் இருவருக்கும் அந்தந்த கிராமத்து செயற் குழு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டு, இரு சாராரிடமிருந்தும் கல்வி நிதி, அவரவர்கள் சக்திக்குத் தகுந்தாற்போல் ரூ. 10 லிருந்து ரூ. 250 – வரை வசூலிக்கப்பட்டு வருகிறது.

30–10–77 அன்று சைதை, அஷ்ட இலட்சுமி திருமண மண்டபத்தில் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் கூடி, சங்கத்தின் சட்டதிட்டக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப் பட்டு, சங்கம் 21–1-78ல் பதிவு செய்யப்பட்டது.

10-6-78 அன்று நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தின் எஸ். எஸ். எல். சி. மெட்ரிக், ஹையர் செகன்டரி தேர்வுகளில் சராசரி 60 மதிப்பெண்கள், அல்லது அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றுள்ள மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசும், பாராட்டிதழும் வழங்குவதென்று முடிவெடுக்கப்பட்டு, அதன்படி ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றது. அதேபோல், கல்வி நிதிக்காக ரூ. 250/ வழங்கியுள்ளவர்களின் சார்பாக அவர்களால் சிபார்சு செய்யப்படும் ஒரு மாணவ அல்லது மாணவிக்கு ரூ. 15 -

உதவித் தொகை வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டு, கொடுக்கப்பட்டு வருகிறது. இதுதவிர, எஸ்.எஸ். எல்.சி ஹையர் செகன்டரி ஆகிய தேர்வு களில் 1, 2, 3, 4 - வதாக வரும் மாணவ, மாணவியர்களுக்கு முறையே ரூ. 100, 75, 50, 25 என்று ரொக்க மான பரிசும் கொடுக்கப்படுகின்றது.

25-10-1980 அன்றைய செயற் குழுக் கூட்டத்தில் மாதர் பிரிவு ஏற்படுத்துவதென்று முடிவெடுக்கப் பட்டு, அதனை வளர்ப்பதற்காக முன் வந்த திருமதி சொக்கம்மாள், திருமதி சரோஜினி அம்மாள் ஆகிய இருவரும் செயற் குழு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சங்கத்திற்கு ஆயுட்கால உறுப் பினர்கள் சுமார் 350க்கும் மேற்பட்ட வர்கள் உள்ளார்கள். அதேபோல், ரூ. 250/- கல்வி நிதியாக 60க்கும் மேற்பட்டவர்கள் கொடுத்துள்ளனர், இதுதவிர, அவ்வப்போது திருமணங் களின் போது வசூலிக்கப்படும் கல்வி நிதியும் சேர்ந்து சுமார் ரூ. 40,000/– க்கும் மேலாக நிரந்தர வைப்பு நிதியில் வைக்கப்பட்டுள்ளது. இதில் வரக் கூடிய வட்டித் தொகையை எடுத்து சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு செல வழிக்கலாமே தவிர, முதலில் கை வைக்கக் கூடாது என்பதைக் குறிக் கோளாகக் கொண்டு இச்சங்கம் இது வரை செயலாற்றிக் கொண்டு வருகிறது.

செங்குந்தர் குலம் செழிக்க, நம் மிடையே ஒற்றுமை உணர்வு ஓங்க நாம் அனைவரும் பாடுபடுவோம்.

With the best compliments from :-

A. R. C. ராமசாமி அரிசி மண்டி,

அரிசி, வியாபாரம் & கமிஷன் ஏஜண்ட்,

21/401-B, R. G. தெரு. கோயமுத்தூர்–641 001.

போன் : 34327

எங்களிடம் ஆற்காடு கிச்சடி பொன்னி, IR20, வெ. கார், ரகங்கள், மற்றும் சம்பா ரகங்களும், ஆரணி ரகங்களும், குறைந்த விலையில் வாங்குவதற்குச் சிறந்த இடம்.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் சிறந்த இடம்

நல்ல ரகங்கள் வாங்குவதற்குக் கைராசியான இடம்.



ஸ்தாபகர்

சைவப்பெருவள்ளல்

V.V.C.R. முருகேச முதலியார்

வி. வி. ஸி. ஆர்.

முருகேச முதலியார் & சன்ஸ்

கோவை, நீலகிரி, சேலம், தருமபுரி, பெரியார்
மாவட்டங்களுக்கு

மதுரை பேப்ரிக்ஸ் துணிகளுக்கு

அங்கீகரிக்கப்பட்ட வினியோகஸ்தர்கள்

மதுரை பேப்ரிக்ஸ் ரீடெயில் ஷோரூம்கள்

139, ஒப்பணக்கார வீதி, கோவை-1
போன் : 30296

சிவஷண்முகம் வீதி, ஈரோடு
போன் : 72839

83, கிராஸ்கட் ரோடு, கோவை–1
போன் : 34876

முதல் அக்ரஹாரம் சேலம்-1
போன் : 2640

782, ஜவஹர் பஜார், கரூர்
போன் : 304

202

பொன் விழாவில் கலந்து கொள்ளும்
பெருமக்களுக்கு எங்கள் வணக்கம். நன்றி.

செங்குந்தர் சமுதாய கமிட்டி

தலைவர் : P. K. துரைசாமி முதலியார்.

சத்துவாச்சாரி

வேலூர். (N. A.) 632 009.

நிர்வாகம் :

அருள்மிகு விநாயகர் கோயில்
,, சுப்பிரமணியர் கோயில்
,, செங்கையம்மன் கோயில்
,, தண்டு மாரியம்மன் கோயில்
,, பாப்பாத்தியம்மன் கோயில்
,, அங்காள பரமேஸ்வரி கோயில்

ஸ்ரீ தேவி பரிபூர்ண கடாக்ஷம்.

சுவாமி சித்த வைத்திய சாலை.

டாக்டர். R. M. சொக்கலிங்க முதலியார், R. I. M. P.

95. அம்மாப்பேட்டை மெயின் ரோடு.
சேலம் — 1.

வீட்டு விலாசம்: 75 குமரன் தெரு. சேலம்-1.

குழந்தை முதல் வயோகிதர் வரை, கேட்காமலே, நாடிபார்த்து வியாதி இன்னதென்று கண்டு பிடித்து தக்க சிகிச்சை அளிக்கப்படும்.

இரத்தக் கொதிப்பு, மற்றும் பித்தக் கிறுகிறுப்பு, இளம் பிள்ளை வாதம், சரவாங்கி, மண்டையிடி, ஒருதலைவலி, கக்குவான், இருமல், சளி, சூதக வயிற்று வலி, சிறு நீர் கல்லடைப்பு, கண் சதை வளர்ச்சி, சாலேஸ்வரம், நரம்புத் தளர்ச்சி நோய், சர்க்கரை வியாதி, கணுசூலை வியாதி, முதலிய சகல வியாதிகளுக்கும் மிகச் சிறந்த மூலிகைகளைக் கொண்டு கைதேர்ந்த நிபுணர்களைக் கொண்டும் சுயமாகவும் தயாரித்த மருந்துகளைக் கொண்டு சிகிச்சை செய்யப்படும்.

டாக்டர் R. M. சொக்கலிங்க முதலியார், R. I. M. P.

12-1-1968ல் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் இவரின் மருந்தும், வைத்தியமும் அங்கீகரிக்கப்பட்டு அக்கால அமைச்சர் மேதகு சாதிக் பாட்சா அவர்களால் நற்சாட்சிப்பத்திரம் பெற்றவர்.

1980-81ல் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தமது இந்திய மூலிகை மருந்தின் சிறப்பைப் பரப்பியவர்.

10-2-1981ல் சிங்கப்பூர் வானொலி நிலையத்தில் இந்திய மூலிகை மருத்துவத்தின் சிறப்புப்பற்றி உரையாற்றி சிங்கப்பூர் மக்களின் பாராட்டைப் பெற்றவர்.

ஆடவர் உலகம் கண்டிராத
சூட்டிங் & சர்ட்டிங் ரகங்கள்

பெண்மைக்கு மென்மையூட்டும்
சேலை & சோளி ரகங்கள்!

குறைந்த விலை! நிறைந்த ரகங்கள்! நீடித்த உழைப்பு!

அப்ஸரா சில்க் ஹவுஸ்

5, கடைவீதி, சேலம் - 1.

போன் : 2365

காஞ்சிபுரம் முகூர்த்த பட்டுசேலைகள்
வாங்க சிறந்த இடம்

அப்ஸரா டெக்ஸ்டைல்ஸ் Regd.

முதல் மாடி

5, கடைவீதி, சேலம் - 1.

WHILE IN BANGALORE STAY AT

Hotel Swagath

Prop : T. K. DURAISAMY
No. 75, Hospital Road,
Balepet Cross,
(Near Majestic Theatre)
BANGALORE-560 053.

Phone : 78268 Grams : SWAGATH INN

The Most Modern Boarding
Lodging & Restaurant
In the Garden City

Most Comfortable Rooms
With Attached Bath, Telephone,
Channel Music & Elevator.

Centrally Situated,
Close to Bus stand, Rly. Station
& Business Centre
Car Parking Facilities
Available.

தென்னாற்காடு மாவட்டம

கே. பழநிவேலு முதலியார், வி. கணபதி, ராஜே
.எம். பி ஏ., எம். பச்சைமுத்து, எம்.ஏ., பி. எல்., ஏ
கே. பக்கிரிசாமி முதலியார், கே. குருசாமி முதலி

தருமபுரி மாவட்டம்

பி. கே. முனுசாமி முதலியார், கே. எம். கந்தசாமி,

செங்கற்பட்டு மாவட்டம்

மு. சண்முகம், எம் ஏ., எல்.டி., டி. எஸ்.

பெரியார் மாவட்டம்

கே. ஏ. பழனியப்பன், ஆர். ஏ. என். முத்துசாமி
. வையாபுரி முதலியார்.

நீலகிரி மாவட்டம்

கே. சீனிவாசன், பி. சுப்பிரமணியம்.

சேலம் மாவட்டம்

எஸ். பி. சம்பந்த முதலியார், கே. ஆர். மாணிக்க
ார், ஏ. எம். ராமலிங்க முதலியார், எம். ஆறுமு
முதலியார், அப்சரா. ஏ. சுப்பிரமணிய மு
வேலு, எம். விசுவநாதன் ஐ. ஏ. எஸ். (ஓய்வு), பி
. கே. சுப்பிரமணிய முதலியார், எஸ். கந்தசாமி

வடஆற்காடு மாவட்டம்

கே. ஜி. ராமசாமி, டி சிதம்பரம், எம். எம்
கே. வி. திருநாவுக்கரசு, கந்தசாமி முதலியார்,
பருமாள்.

மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம்

மதுரை

தோற்றமும், வளர்ச்சியும்

''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு
முன் தோன்றியது மூத்த தமிழ்''

மூன்று சங்கங்கள் அமைத்து தமிழ் வளர்த்த மதுரையம்பதியிலும் அதன் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள செங்குந்தர் உறவின்முறை சங்கங்கள் அனுப்பித் தந்த பிரதிநிதிகளைக் கொண்டு ''மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜனசங்கம்'' 13–10–74ல் துவக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட சங்கத்திற்குச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டு, 19-12-75ல் முறைப்படி சங்கம் பதிவு செய்யப்பட்டது.

மாவட்டத்திலுள்ள செங்குந்தர்கள் வாழும் எல்லாப் பகுதிகளிலும் மாவட்ட சங்கத்திற்கு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, எல்லாப் பகுதியிலிருந்தும் பொதுக்குழு உறுப்பினர்கள் சுமார் 100 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொதுக் குழுவிலிருந்து எல்லாப் பகுதிக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் 27 - 6 - 76ல் செயற்குழு உறுப்பினர்கள் 25 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்ட சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

உறுப்பினர் ஆண்டுக்கட்டணம் ரூ 1/ ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ.100/- 3000 ஆண்டு உறுப்பினர்களும், 20 ஆயுள் உறுப்பினர்களும் தற்சமயம் உள்ளனர்.

மாவட்ட சங்கம் ஆரம்பித்த நேரத்தில் சமூகப் பெரியவர்கள் பலர் மனமுவந்து தாராளமாக பொருளுதவி செய்து, மாவட்ட சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து, தொடர்ந்து பல வழிகளிலும் ஆதரவும், ஒத்துழைப்பும் தந்து வருகிறார்கள்.

மதுரை டவுனில் செல்லூர் திருவாப்புடையார் கோவில், கோரிப்பாளையம், மதிச்சியம், குயவர்பாளையம் திருப்பரங்குன்றம், ஹார்விபட்டி, மதுரையைச் சுற்றிலும் உள்ள அனுப்பானடி, சாமநத்தம், ஐராவதநல்லூர், விரகனூர், கொடிமங்கலம் No. 1, முள்ளிபள்ளம், திண்டுக்கல் தாலுகாவில் நீலமலைக்கோட்டை, கள்ளிப்பட்டி தாடிக்கொம்பு, மாத்தினிப்பட்டி, கொடைக்கானல் டவுன், கொடைக்கானல் தாலுகாவில் பூம்பாறை, மன்னவனூர், பள்ளங்கி, கவுஞ்சி, கிளாவரை போலூர், கூக்கால் ஆகிய ஊர்களில் கிளைகள் செயல்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்புவனம், ராஜபாளையம், மண்டல மாணிக்கம், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய ஊர்களிலுள்ள நம் சமூகத்தினர், மதுரை மாவட்ட சங்கத்திற்கு உதவி புரிந்து வருகிறார்கள்.

நம்மவர்கள் வாழும் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று, நம்மவர்களுடன் கலந்து உரையாடியும், கூட்டங்கள் நடத்தியும் 'இன உணர்வு' ஏற்படச் செய்திருக்கிறோம். முதன் முதலாக மாவட்ட அளவில் மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன மாநாட்டை 15-6-80 இல் சிறப்பாக நடத்தி, மதுரை மாவட்ட செங்குந்தர்களிடையே எழுச்சியும் உணர்ச்சியும் ஏற்படச் செய்திருக்கிறோம். மாநாட்டில் மலர் ஒன்றும் வெளியிட்டுள்ளோம்.

செங்குந்த மாணவர்கள் கல்விச் சலுகைகள் பெறவும், கல்வியில் சிறந்து விளங்க ஊக்கப்பரிசுகள் தந்தும் உதவி வருகிறோம். ஒற்றுமை திருமணங்களுக்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கிறோம்.

செங்குந்த மித்திரனுக்கு சந்தாதாரர்களும், தலைமைச் சங்கத்திற்கு ஆண்டு உறுப்பினர்களும், ஆயுள் உறுப்பினர்களும் சேர்த்துக் கொடுத்திருக்கிறோம்.

மாவட்ட சங்கத்தின் கிளைகள், அவைகளின் வளர்ச்சிக்கு நடத்திய நிகழ்ச்சிகளுக்கு மாவட்ட சங்கம் மிகுந்த ஒத்துழைப்பு தந்திருக்கிறது.

கைத்தறி துணிகளுக்கு ஆதரவு தரக்கோரி விளம்பரம் செய்திருக்கிறோம்.

கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

கலைக் கல்லூரி, தொழில் கல்லூரி ஏற்படுத்த முயற்சிகள் எடுத்துள்ளோம்.

செங்குந்தர்கள் கல்வி, பொருளாதாரம், சமுதாயம் ஆகிய துறைகளில் முன்னேற முடிந்த அளவு செயல்பட்டு வருகிறோம்.

மாவட்ட சங்க வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு தரும் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பயன் கருதாமல் செய்கின்ற செயலே அன்பாகும். பலர் கோயிலுக்குப் போய்க் கடவுளைத் தொழுவதும் அன்பினாலன்று; கடவுள் நமக்கு வியாபார வளர்ச்சியும் புத்திரப்பேறும் உத்தியோக உயர்வும் தருவார் என்ற நோக்கத்தோடு கோயிலில் கடவுளை வழிபடுகின்றார்கள். ஆகவே அது அன்பு வழிபாடன்று; ஆசை வழிபாடேயாகும்

— திருமுருக கிருபானந்த வாரியார்

வேற்றுமையில் ஒற்றுமை

புலவர் கோ. இளைய பெருமாள்
ஆரணி வ. ஆ.

(எண் சீர் விருத்தம்)

பிறப்பினிலே எவ்வுயிர்க்கும் பேத மில்லை
　　பிறந்ததன்பின் இறப்பதிலும் பேத மில்லை
சிறப்புடைய ரெனவுலகம் தெரிந்து போற்றும்
　　செய்கையினுல் வேற்றுமைகள் சேரக் காண்போம்
நிறப்பிரிவும் தொழிற்பிரிவும் நேர்ந்த போதும்
　　நெஞ்சகத்தில் வேற்றுமைகள் நேர லாமோ?
புறப்பகையை வென்றின்பம் பொலியச் செய்ய
　　புதியதொரு சமுதாயப் புரட்சி வேண்டும்.

சாற்றுகின்ற பல்வேறு சாதிச் சண்டை
　　சமுதாய முன்னேற்றம் சரிந்து வீழும்
கூற்றுவனுய் இருக்கின்ற கொடுமை நீங்கிக்
　　குதூகலமாய் வாழ்கின்ற கொள்கை வேண்டும்
தூற்றுகின்ற சாதிவெறி தொலைந்து நம்முள்
　　தோழமையால் வாழ்ந்தன்பு சுரக்கு மென்றுல்
வேற்றுமையில் ஒற்றுமையை விளையச் செய்தால்
　　வீறுடைய சமுதாயம் விளங்கும் தானே.

வேலேந்தும் முருகனருள் வேண்டி அன்னுன்
　　விழுத்துணைவ ராய்நின்று வெற்றி பெற்ருேர்
கோலேந்தும் முடிமன்னர் குலவ வாழ்ந்து
　　குலவியசீர் செங்குந்தர் குலத்தில் வந்தோர்

நூலேந்தி ஆடைகளின் நுட்பங் கண்டு
நுண்ணியநூல் பலகற்ற நோன்பின் மிக்கார்
காலேந்து கைத்தறியே கதியாய் நம்பிக்
காலமெல்லாம் உழைத்துவரக் காண்கின்ருேமே

குன்றின்மேல் விளக்காக வாழ்ந்த குந்தர்
குலப்பெருமை பேசுதற்குக் கூசும் நாவே
இன்றிருக்கும் அவலநிலே எண்ணிப் பார்க்கின்
இடைநடுவே எத்தனேயோ ஏற்றத் தாழ்வு
சென்றிடுவோம் திசையனேத்தும் சிதறி வாழும்
செங்குந்தர் எல்லோரும் சேர்ந்து வாழ்வோம்
நன்றியொடு சங்கத்தை நாடி நின்று
நலம்பெருக ஒத்துழைப்பு நல்கு வோமே.

கைத்தறியில் காலத்துக் கேற்ற வாறு
கண்கவரும் புதுமுறைகள் காண வேண்டும்
எத்தொழிலும் இத்தொழிலுக் கீடா காதே
என்ருலும் பிறதொழிலும் ஏற்க வேண்டும்
ஒத்துரிமை யுடையவராய் உலகில் எங்கும்
உறவுடனே வாழ்கின்ற உள்ளம் வேண்டும்
புத்துணர்ச்சி யுடன்இன்பம் பொங்கச் செய்யும்
பொன்விழாக் காண்பதனல் பொலிவுண்டாமே.

பணத்தாலும் படிப்பினுலும் குலத்தாலும் பதவியினுலும் அழகினுலும் உயரத்தினுலும் கனத்தாலும் ஒருவன் பெருமையடைய முடியாது. தியாகம் ஒன்ருலேயே பெருமையடைய முடியும். தனக்கென்று வாழ்கின்றவன் சிறியவன். பிறர்க்கென்று வாழ்கின்றவன் பெரியவன்.

— திரு முருக கிருபானந்தவாரியார்

தென் இந்திய செங்குந்த மகாஜன பொன் விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த நம் குலமக்களை வருக ! வாழ்க ! என வரவேற்று வாழ்த்துகிறோம்.

அறிஞர் அண்ணா கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட்., எண். K. H. 2.

பொதட்டூர்ப்பேட்டை-631208.

திருத்தணி வட்டம், செங்கை மாவட்டம்.

B. M. கோவிந்தசாமி முதலியார்	தலைவர்
T. M. சுகுமாரன்	செயலாளர்
B. G. ஊரப்ப முதலி	நிர்வாகஸ்தர்
B. விநாயகம்	நிர்வாகி
D. P. வெங்கடேசன்	,,
T. G. மேகவர்ண முதலியார்	,,
D. S கிருஷ்ணன்	,,

ஈழத்துச் செங்குந்தர்கள்

இந்தியாவில் எழுபத்திரண்டு நாட்டு, ஐம்பது இலட்சம், செங்குந்தர்களுக்கு காஞ்சிபுரம் எப்படி முதன்மைத் தலைநகராக முன்னிற்கிறதோ அதே போன்றே ஈழத்திலும் வாழும் பத்து ஆயிரத்திற்கு உட்பட்ட செங்குந்தர்களுக்கு உலகத்தின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியன் கோலோச்சிய நல்லூர் விளங்குகிறது. ஈழத்தில் நல்லூர், திருநெல்வேலி, கள்ளியங்காடு, கரவெட்டி, கொடிகாமம், கச்சாய், முல்லைத்தீவு, முள்ளியவளை, திருகோணமலை, மட்டக்களப்பு, தாமரைக்கேனி, ஆரையம்பதி, பெரியகல்லாறு போன்ற இடங்களிலும் பரந்து செறிந்து வாழ்கிறார்கள். மற்றும் இலங்கையின் தலைப்பட்டணம் ஆகிய கொழும்பிலும், மலைநாட்டிலும் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

நல்லூர் இராஜதானியை சுற்றிச் சூழ இன்றும் நம்மவர்களே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அக்காலத்தில் பூதத்தம்பி முதலி, அப்பாமுதலி என்ற நம்மவர் பெயரையுடைத்தோர் கோலோச்சியுள்ளார்கள். குறிப்பாக ஈழம்வாழ் செங்குந்தர்கள் தொகையாகவும் கூட்டமாகவும் வாழ்வது நல்லூரிலேயே. இங்கு செங்குந்தர் சந்தை, செங்குந்த இந்துக் கல்லூரி, மற்றும் இந்துக் கோவில்களும் சிறப்புடன் நம்மவரால் அமைக்கப்பட்டு உள்ளன. இந்தியாவில் ஞானியாரடிகள், திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் நம்மவர் மத்தியில் தோன்றியது போன்று, நல்லூரில் சடையம்மா எனும் அம்மையாரும் வாழ்ந்தார்கள். இவர்களால் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர் தங்குமிடத்திற்கு அண்மையில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடமும், கதிர்காமத்தில் சடையம்மா மடமும், திருச்செந்தூரில் குருநாதன் நிலையமும் இவரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவரது சமாதி மடம் காங்கேசன்துறையில் கீரிமலையில் உள்ளது. இவரது சித்து மகிமை பற்றி ''ஆத்மஜோதி'' பத்திரிகை ஆசிரியர் முத்தையா அவர்கள் ''ஈழத்துச் சித்தர்கள்'' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். இலங்கையிலேயே பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு இதற்கென விசேடமாகச் செய்யப்பெற்ற தேரில் கொடிச்சீலை கொண்டு சென்று கொடுப்பதும், சூரன்போர் விழாவில் பங்கு கொள்வதும் நம்மவரேயாகும். இதுபற்றிய விபரம் நல்லூர் தேவஸ்தானத்தால் ''நல்லூர் கந்தசுவாமி'' எனும் பெயரால் திரு. குல. சபாநாதனால் எழுதப்பட்ட நூலில் விளக்கப்பட்டுள்ளது.

இங்குள்ளவர்கள் நெசவுத்தொழிலை அதிகப்படியாக விட்டுவிட்டார்கள். ஆனால் மட்டக்களப்பில் ஒருசில இடங்களில் இன்னமும் செய்கிறார்கள். குறிப்

பாக யாழ்ப்பாணத்தில் வாழுபவர்கள் வியாபாரம், வைத்தியம், அரசு உத்தியோகம் போன்றவற்றையே செய்கிறுர்கள். யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள ஆயுர்வேத மருந்துக் கடைகளில் எண்பது சதவீதமானது நம்மவருடையதே.

1932ம் ஆண்டு எனது பாட்டனுர் சோதிட வைத்தியர் சண்முகம் இளைய தம்பி அவர்களால் இலங்கையில் உள்ள திருநெல்வேலியில் ஸ்தாபிக்கப் பட்ட செங்குந்த இந்துக் கல்லூரியில் கற்ற பலர் மேல்நிலையில் உள்ளார்கள். அத்துடன் பலர் தற்போது டாக்டர், வக்கீல், கணக்காளர், விரிவுரையாளர் களாகவும் உள்நாட்டிலும், கடல்கடந்த வெளிநாடுகளிலும் சிறப்புற விளங்கு கிறுர்கள். இன்று முன்னணி வகிக்கும் குறிப்பிடக்கூடிய சிலர் தற்போதைய இலங்கைப் பல்கலைக்கழக கொழும்புப் பகுதி கல்விப் பகுதி முதல்வர் பேராசி ரியர் ச. முத்துலிங்கம், வடமாநில பஸ்போக்குவரத்து சபைத் தலைவர் நீதிபதி சி. கனகரெத்தினம், சட்டத் தரனி மு. ஆலால சுந்தரம், எம். பி. (கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர்) உயர்திரு. எஸ். டி. சிவநாயகம், (பிரதம ஆசிரியர் ''தினபதி'' தினசரி) சட்டத்தரனி. இர. சிவலிங்கம் (தலைவர் இலங்கை இந்திய நட்புறவுச் சங்கம்) போன்றோர் ஆகும்.

1932ம் ஆண்டு காஞ்சி மணிமொழி யாரென அழைக்கப்படும் உயர்திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரும், உயர்திரு. ம. சண்முகசுந்தர முதலி யாரும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து செங்குந்தர் விழாவில்பங்கேற்று புத்தூக்கம் அளித்தார்கள் என்றுல் மிகையாகாது. நம்மவரான சுவாமி உருத்திரகோடீஸ்வரரும் நம்மவரு க்குப் பல நூல்களை அக்காலத்தில் நல்கி கல்விக்கு ஊக்கமளித்தார்கள். இலங்கை இந்திய நம்மவர் நட்புறவு நோக்கி சேலம் குருசாமிபாளையம் திருநாவுக்கரசு B. A. க்கும் மட்டக் களப்பு தாமரைக்கேணி இராமகிருஷ்ண மிசன் அதிபர் செல்வி. V. கமலபூசனி B. A. (Hons) க்கும் நடைபெற்ற திருமணத்தின் பின் செங்குந்த மித்திரனைப் பெற்ற ஒரு சிலரே இந்தியாவில் உள்ள நம்மவர் பற்றி அறிந்திருந்தார்கள். 1969ம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த தமிழ் நாட்டு சபாநாயகர் புலவர் காங்கேய முதலியார் கோவிந்தன் அவர்கள் கூட நம்மவர் என்பதை சென்றகால வெள்ளிவிழா மலரில் ''நமது புலவர் கள்'' என்ற பகுதியில் பார்த்தே ஒரு வரவேற்பு உபசாரம் கொடுத்தோம். இன்றும் இலங்கையில் பெயர்பெற்ற திருமுருக. கிருபானந்தவாரியார், திருக்கோவில் ஆசிரியர் ந. ரா. முருக வேள், சென்னை பல்கலைக்கழக தமிழ் துறைப் பேராசிரியர் சி. பாலசுப்பிர மணியம் போன்றோரும் நம்மவர் என் பதை செங்குந்த மித்திரன் மூலமே அறிகிறோம். மீண்டும் எமது இலங்கை இந்திய நட்புறவு உலகலாவியதாக விரிவடைய சேலத்தில் நடைபெறும் இச்செங்குந்த மகாஜன சங்க பொன் விழா வழி செய்ய வேண்டும்.

எழுதியவர் :
க. சி. இராஜேஸ்வரன்
ஈஸ்வரி மில்ஸ்,
நல்லூர் சந்தை, யாழ்ப்பாணம்
இலங்கை

கவிச்சக்ரவர்த்தி கூத்தரின் படைப்புகள்

டாக்டர் சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி., டிப். மொழியியல்;
டிப். வடமொழி;

இந்தியக் கல்வித்துறை, மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்

தமிழிலக்கிய வரலாற்றில் பிற்காலச் சோழர்காலம் பொற்காலம் எனப் போற்றப்பெறுகின்றது. அரசியல், வாணிபம், கலை, சமயம், இலக்கியம் முதலிய பல்வேறு துறைகளிலும் தமிழினம் மேம்பட்டுத் தலைநிமிர்ந்து விளங்கிய காலம் சோழர் காலமாகும். (கி.பி. 900 - கி.பி. 1300.) இக்காலப் பகுதியில்தான் சோழர் தம் ஆட்சி இமயம் முதல் ஈழம் வரை நிலைபெற்றிருந்ததுடன் கடல்கடந்து கிழக்கிந்தியத் தீவுகளிலும் பரவி விளங்கியது. தொல்காப்பியம், சங்க இலக்கியம், காப்பியம் முதலிய பழந்தமிழ்ப்பனுவல்களைப் பயின்று எங்கும் பரப்பும் பாங்கில் உரைவிளக்கம் காணும் புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் இக்காலத்தில்தான் எழுச்சியுற்றன. சைவ, வைணவத் திருநூல்களின் தொகுப்புப் பணியும், காப்பியம் உள்ளிட்ட பிரபந்தங்களின் வளர்ச்சியும், மெய்கண்ட சாத்திரங்களின் தோற்றமும் இப் பொற்காலத்தின் விளைவுகள் எனலாம்.

இப் பொற்காலப் பகுதியில்தான் நம் மாண்புமிகு செங்குந்தர் மரபின் தனிப்பெரும் செம்மலெனத் திகழும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தமது ஒப்பற்ற இலக்கியங்களின் வாயிலாக மொழித் துறைக்கும், வரலாற்றுத் துறைக்கும் அழியாப் புகழ் சேர்க்கும் அரும்பெரும்பணிகளை ஆற்றியுள்ளார்.

கூத்தர் பெருமான் சிவநேசச் செல்வம் மிக்கவர்; வண்டமிழிலும் வடமொழியிலும் வரம்பிலாப் புலமை நிரம்பப்பெற்றவர். மிடுக்கான நடையில் அடுக்காகச் சொற்களை எடுப்பாக ஆளும் ஏற்றம் மிக்க இயல்பினால் இக் கவிஞர் கோமானைக் கௌடப் புலவர் என்று இருமொழி வல்லுநர் ஏத்தினர். கவிச்சக்ரவர்த்தி, கவிராட்சன், காளக்கவி, (—காளம் என்னும் விருது பெற்றவர்), சருவக்ஞகவி என்று அக் காலத் தமிழகம் இக்கவிச் சிங்கத்தினை உச்சியில் வைத்து மெச்சிய திறனை இவர் படைத்த தக்கயாகப் பரணியின்

உரைப் பகுதி உறுதிப்படுத்தும். இவர் பரம்பரையே கவிஞர் பரம்பரை போலும்! சோழவேந்தன் புலவர் முற்றூட்டாக இவர்க்கு வழங்கியுள்ள கூத்தனூரில் கிடைத்துள்ள கல்வெட்டொன்று (**A. R. No. 109 & 110 of 1927-8**) ''மலரி கவிச் சக்கரவர்த்தி பெயரான் கவிப் பெருமான் ஆனந்த வரதக் கூத்தன் என்பான் கலைமகள் உருவை எழுந்தருளுவித்தான்'' எனக் கூறுகின்றது. மலரி என்னும் ஊர் கூத்தரின் பிறப்பிடமாகும். இவர் சொல்லாற்றினைப் பாராட்டும் தண்டியலங்கார உரைமேற்கோள், ''மலரி வருங் கூத்தன்தன் வாக்கு'' என மொழிதல் காணத் தக்கது.

மணிமேகலையில் இடம்பெறும் அறவண அடிகளைப்போலவே கூத்தர் பெருமானும் பலதலைமுறைகளைக் கண்டவர். நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவினராய்ச் செந்தமிழ்ப் பணியாற்றிய சீரிய பாவலர். முதற் குலோத்துங்கனின் புதல்வன் விக்கிரம சோழன் (கி.பி. 1118-1136), அவன் மைந்தன் இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133–1150), அவன் புதல்வன் இரண்டாம் இராசராசன் (கி.பி.1146-1163) ஆகிய சோழவேந்தர் மூவர் காலத்தும் அவைக்களப் புலவராகவும், அருந்தமிழ் புகட்டும் ஆசானாகவும், அரசியல் மேதையாகவும் விளங்கினார். சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த இக் கவிஞர் பெருமானின் இலக்கியப் படைப்புக்கள் பற்றிச் சற்றே உற்று நோக்குவோம்.

I. விக்கிரம சோழன் உலா.

உலா என்பது தொண்ணூற்றாறு பிரபந்தங்களில் ஒன்றாகும். நாடாளும் மன்னவன் பட்டத்து யானைமிசை இவர்ந்து நகர்வலம் வரும் திறனைக் கண்டு ஏழுவகைப் பருவப் பாவையர் எய்தும் மனநிலையினை இயம்பும் பாங்கில், சோழவேந்தனின் முன்னோர் பெருமையினையும், வீரத் திறனையும், வெற்றிச் சிறப்பினையும், அரசியல் அதிகாரிகளின் பண்பு நலன்களையும் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பாரித்துரைக்கும் பாங்கில் கூத்தர்பிரான் உலாவினைப் பாடியுள்ளார்.

விக்கிரம சோழன் சிறந்த சிவநேசச் செல்வன் என்பதை,

''மறைக்கொழுந்தை வெள்ளி மலை
கொழுந்தை மோலிப்
பிறைக்கொழுந்தை வைத்த பிரானைக்—
கறைக்களத்துச்
செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத்
தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி''

எனவரும் உலாப்பகுதி உணர்த்துகின்றது. இச்சோழன் தில்லைக்கூத்தரின் திருக்கோயிலுக்குத் திருச்சுற்று முதலிய திருப்பணிகள் ஆற்றிய திறனும் கல்வெட்டுக்களினாலும் உறுதி பெறும். இவ்வுலாவில் இலக்கியச் சுவை மலிந்த பகுதிகள் பல.

அவற்றுள் ஒன்று பெதும்மைப் பெண்ணின் திறம் உரைப்பது :

''மழலை தனது கிளிக்களித்து வாய்ந்த
குழலின் இசைகவர்ந்து கொண்டாள்—
நிழல்விரவு
முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்''

சோழ நாட்டிற் கிடைக்கும் பல்வேறு பொருள்களின் சிறப்பினை,

''ஏனைக் கலிங்கங்கள் ஏழனையும்
பொய்க் கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே......
பாரிற் படுவன பன்மணியும் நின்கடல்
நீரிற் படுவன நித்திலமும்—நேரியநின்
வெற்பில் வயிரமும் வேந்தநின்
சோணாட்டுப்
பொற்பில் மலிவன பூந்துகிலும்''

எனவரும் கண்ணிகள் எழிலுற எடுத்தியம்பும். 342 கண்ணிகளைக் கொண்ட இவ்வுலா முற்றும் கற்றுச் சுவைக்கத்தக்க இலக்கியமாகும்.

2. கலிங்கப்பரணி

விக்கிரம சோழன் தன் இளமைக் காலத்தில் வேங்கி நாட்டு வேந்தன் தெலுங்க வீமனைப்பொருது வாகை சூடிய பேராற்றலைப் பாராட்டி நம் கவிஞர் கோமான் **கலிங்கப்பரணி** என்னும் இலக்கியம் யாத்துள்ளார். இவ்வுண்மையினை,

''செருத்தந் தரித்துக் கலிங்கரோடத்
தென்தமிழ்த் தெய்வப்பரணி கொண்டு
வருத்தந் தவிர்த்துல காண்டபிரான்
மைந்தற்கு மைந்தனை வாழ்த்தினவே''
(தாழிசை, 776)

எனவரும் தக்கயாகப்பரணியும்; ''இப்பரணி பாடினர் ஒட்டக்கூத்தரான கவிச்சக்கரவர்த்திகள். இப்பரணி பாட்டுண்டார் விக்கிரமசோழ தேவர்'' எனவரும் பழைய உரைக்குறிப்பும் உணர்த்துகின்றன. அன்றியும்,

''................. வேற்றூர்
விரும்பரணில் வெங்களத்தீ வேட்டுக்
கலிங்கப்
பெரும்பரணி கொண்ட பெருமான்—
தரும்புதல்வன்
கொற்றக் குலோத்துங்க சோழன்''
(குலோ. உலா. 28)

''தரணி ஒருகவிகை தாங்கக் கலிங்கப்
பரணி புனைந்த பருதி''
(இராச. உலா. 27)

''பாவகன் வளைத்தெழு கலிங்கமும்
விழுங்கப்
பகட்டணி துணித்தொரு பெரும்பரணி
கொள்ளும்
சேவகன்''
(குலோ. பிள்ளைத்தமிழ் 9:3)

எனவரும் கூத்தரின் வாக்கும் நோக்கத் தக்கது. இப்பரணியைச் சேர்ந்ததாகக் கருதப்பெறும் சிலதாழிசைகள் சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லாரினல் மேற்கோளாக ஆளப் பெற்றுள்ளன. எஞ்சிய பகுதி இதுகாறும் கிடைத்திலது.

3. குலோத்துங்க சோழன் உலா

இரண்டாம் குலோத்துங்கனைப் பாடற்பொருளாகக் கொண்டது இந்நூல். இவ்வேந்தன் காலத்தில் அமரேதும் இன்றி அமைதி குடிகொண்டதால் ஆக்கப்பணிகள் பல நடந்தன. இவற்றையெல்லாம் இவ்வுலா நமக்கு உணர்த்துகின்றது. இவ்வரசன் செய்த தில்லைக்கோயில் திருப்பணிகளைப் பல கண்ணிகளில் கவிஞர்கோமான் பொறித்துள்ளார். ஆனந்தக்கூத்தரின் அம்பலத்தினைப் பொன்வேய்ந்து போற்றிய இவ்வேந்தன் சிவகாமக் கோட்டத்தினையும் அமைத்த செய்தியை

''.................. ஒருதான்
பிறக்கும் இமயப் பெருங்கடவுட் குன்றம்
மறக்கும் படிச்செல்வம் மல்க—சிறக்கும்
இருக்காதி எம்மறையும் எவ்வுலகும்
ஈன்றாள்
திருக்காமக் கோட்டம் திகழ்வித்து''
(குலோ. உலா. 54–56)

எனவரும் உலாப்பகுதி உணர்த்து கின்றது. கவிஞர் பெருந்தகையின் கற்பனை வளத்திற்குக் காட்டாக,

''ஆடாத தோகை அலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை—சூடத்
தளிராத சூதம் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி—அளிகள்
இயங்காத தாள்கா இறக்காத தேறல்
வயங்காத கற்பக வல்லி''

(124—126)

என்ற பகுதியை இயம்பலாம். பேதைப் பருவத்துப் பெண்ணை வருணிக்கும் இப்பகுதி இக்காலக் கவிதைத்தன்மை பெற்றும் திகழ்தல் காணத்தக்கது.

4. குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

இரண்டாம் குலோத்துங்கன் தம் ஆசிரியர் கூத்தரைப் போலவே இரு மொழிப் பெரும்புலமை படைத்தவன். இவன் பிறந்து வளர்ந்தகாலமெல்லாம் உடனிருந்து கண்காணித்து ஒம்பிய புலவர் பெருமான் இவன்பேரில் பிள்ளைத் தமிழ் பாடியிருத்தல் முற்றிலும் பொருந்துவதே. இந் நூலினைக் கரந்தைப் புலவர் திரு. L உலகநாத பிள்ளை 1933–இல் பதிப்பித்துள்ளார். நம்குலச் செம்மலும் முதுபெரும் புலவருமாகிய திருமுறைச் செல்வர் பேராசிரியர் திரு க. வெள்ளை வாரணர் அவர்கள் இந்நூலைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கட்டுரையினைத் தஞ்சை மாவட்டச் செங்குந்த மகாசன சங்கத்தின் வெள்ளி விழா மலரில் வெளியிட்டுள்ளனர். கவிஞர், கலைஞர் முதலிய பரிசிலர் பலர்க்கும் குலோத்துங்க சோழன் குறையாது கொடுக்கும் கொடைத்திறனை,

''கோடியர் புலவர் விறலியர் பாணர்
குலகிரி களும் குறை நிரையத்
தேடிய நிதியம் குலோத்துங்க சோழன்
உருட்டுக சிறுதேரே''

எனவரும் பிள்ளைத்தமிழ்ப் பாடற்பகுதி சுட்டுகின்றது.

இரண்டாங் குலோத்துங்கன்பேரில் கூத்தர் பெருமான் மேற்குறித்த இரு நூல்களைப் பாடிய சிறப்பினை,

''...பாடிய, வெள்ளைக் கலியுலா மாலை
யொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்''

என்று சங்கரசோழன் உலா பாராட்டு கின்றது.

5. இராசராசசோழன் உலா

இவ்வேந்தன் தன் தந்தை இரண்டாங் குலோத்துங்கனைப் போலவே கலைபயில் தெளிவும் கடவுட் பற்றும் மிக்கவன். பழையாறை நகரைப்பல் வகையாலும் விரிவுபடுத்தி இராசராச புரம் என்றும் புதுப்பெயரிட்டு அதனையே தலைநகராகக் கொண்டு ஆண்டவன். இந்நகரில் இவன் எடுப்பித்த இராசராசேச்சுரம் என்னும் சிற்பக்கவின் மிக்க சிவாலயமும், இக் கோயிலின் கருவறைப்புறச் சுவரில் திருத்தொண்டர் அறுபத்து மூவரின் வரலாறுகளை உயர்த்தும் பாங்கில் அமைந்துள்ள வடிவங்களும் சிறப்பாகக் குறிப்பிடற்குரியவை. மூன்றுங் குலோத்துங்கன் காலத்தில் பெரியபுராணம் தோன்றுவதற்குரிய கால்கோளாக இம்மாடக் கோயிலை மதித்தல் சாலும். இவ்வேந்தன் தன் மீது பாடப்பெற்ற உலாவினை உற்று நோக்கிச் சுவை நலம் துய்த்துக் கூத்தரை ஏத்தும் பாங்கில், ஒவ்வொரு

கண்ணிக்கும் ஓராயிரம் பொற்பரிசில் தந்து போற்றினன் என்பதை,

''.................தெள்ளித்தம்
முன்னு யகரிலவன் மூதுலாக்
கண்ணிதொறும்
பொன்னுயிரம் சொரிந்த பூபதியும்''

எனவரும் சங்கரசோழன் உலா வலியுறுத்துகின்றது. இவ்வுலாவில்,

''கச்சியிற் கற்றளியில் கல்லிற்
கலிங்கத்தில்
கொச்சியில் கோதா விரிக்குளத்தில் –
விச்சியில்
வல்லூரில் கொல்லா புரத்தில் மணலூரில்
நெல்லூரில் புத்தூரில் நெட்டூரிற்—
செல்லூரில்
கோட்டாற்றில் கொங்கில் குடக்கூரிற்
கொப்பத்தில்
வாட்டாற்றில் காம்பிலியின் மண்ணேயில்
வேட்டுத்
தரணி கவர்ந்து தமிழ்வேந்தர் பாடும்
பரணி புனேந்த பகடு (இராச. 262–265)

என்று சோழவேந்தனின் களிற்றுப் பெருமை கவிநலம் பெருகப்புனேயப் பெற்றுள்ளது. வேந்தன் வெற்றி பெற்ற ஊர்களே அடுக்கிச் சொல்லும் அழகினே என்னென்பது!

6. தக்கயாகப்பரணி

விக்கிரமனுக்குப் பரணி பாடிய கவிஞர் கோமான் தக்கனின் அக்கிர மங்களே அழித்த வீரபத்திரரின் வெற்றிச் சிறப்பினேயும் விரித்துப்பாட முற்பட்டார். பரம்பொருளேப்பணி யாதவர் செய்யும் தவமும் அவமாகும் என்பதைத் தக்கன் கதை சுட்டுகின்றது தக்கன் பக்கம் சார்ந்த முனிவர்களின் ஆணவமலத்தை அகற்றும் பொருட்டு இறைவன் எடுத்த பிட்சாடணமூர்த்தத் தினேத் திருமுறைகள் பாடிப்பரவும். தக்கன் வேள்வியைத் திருமந்திமர விரித்துரைக்கின்றது. திருவாசகத்தில் திருவுந்தியாரில் பல பாடல்கள் தக்கனின் வேள்வியைத் தகர்த்த செய்தியைக் குறித்துள்ளன. எனவே, இக்கதையினேப் பரணியின் கருப் பொருளாகக் கொண்டு சந்தம் குலுங்கும் செந்தமிழ்த் தாழிசைகளில் கவிவளம் மல்கிப் பல்கிச் சிறக்கக் கூத்தர் பாடியுள்ளார். காளிக்குக் கூளி கூறிய பகுதியில்,

''பாவியார்சிறு தக்கனுெரொரு பக்கமாய
பரம்பரன்
தேவியான்முனி வுண்டுபட்டது
கேண்மினென்றது செம்புமே'' (245)

எனவரும் தாழிசையில் பகைவனேக் கூட இரக்க உணர்ச்சியுடன் சுட்டும் கவிஞரின் மென்மையுள்ளம் புலப் படுகின்றது. இப்பரணி நூலினேப் பயின்றதாலன்றே அருணந்திசிவனர்,

''அரனடிக் கன்பர் செய்யும் பாவமும்
அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம்
பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி
தீமை யாகி
நரகினிற் பாலன் செய்த பாதகம் நன்மை
யாய்த்தே''

எனப் பாடுவாராயினர்!

இப்பரணியின் மற்றுமொரு சிறப்பு திருஞானசம்பந்தப் பிள்ளேயின் வரலாற்றினேக் கொற்றவைகேட்க, கலேமகள் எடுத்துரைப்பதாகும். கோயிலேப் பாடியது என்னும்பகுதியில் 169–221 தாழிசைகளில் இடம் பெறும் சம்பந்தரின் வரலாறு சேக்கிழார் பிள்ளேபாதி புராணம் பாதி என்னும் அளவிற்கு முக்கியத்துவம் தந்து திருஞானசம்பந்தரின் வரலாற்றினேப்

பாட ஊக்கியது என்று உய்த்துணரலாகும்)

7. குலோத்துங்கன் கோவை

இக்கோவையும் கூத்தர்பாடியது என்பர். ''கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்'' எனத்தனிப் பாடல் காணப்பெறுவதால் இக்கோவை நூலினை நம் ஆசிரியர் பாடியதெனக் கொள்ளுதல் கூடும். இக்கோவையில் 510 பாக்கள் உள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆராய்ச்சியாளர் திரு. மு. ரா. அருணசலக்கவிராயர் தாம் வரைந்த அரும்பதவுரையுடன் 1910இல் இந்நூலினைப் பதிப்பித்துள்ளார். இக்கோவைத் தலைவனாகக் குறிக்கப்பெறும் குமார குலோத்துங்கனை மூன்றாங்குலோத்துங்கன் எனக் கருதுவர். அங்ஙனமாயின், நம் கவிஞர் கோமான் இரண்டாம் இராசராசன் மகனாகிய இம் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தும் இலங்கியவர் என்று எண்ணுதல் வேண்டும். சீலமும் ஒழுக்கமும் கைக்கொண்டு நன்னெறியில் நின்ற கூத்தர் நீண்டகாலம் வாழ்ந்தவர் என்று எண்ணுதல்சாலும். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில், முதற் குலோத்துங்கன் மகள் அம்மங்காதேவி மூன்றாங் குலோத்துங்கனின் காலத்திலும் வாழ்ந்ததை எடுத்துரைப்பார். குலோத்துங்க சோழன் கோவையில் சுனைநயப் புரைத்தல் என்னும் துறைக்குரியதாய்,

''கருமேக வண்ணன் குலோத்துங்க
சோழன்கல் யாணிவெற்பில்
திருமேனி நாணும் திருவுருவாய்! செய்ய
வாய்வெளுப்பும்
உருமேல் பசப்பும் விழிமேல் சிவப்பும்
உடல்வியர்ப்பும்
தருமேல் குடைவேன் அடியேனும் அந்தத்
தடஞ்சுனையே''

எனவரும் பாடல் சுவைநலம் மிக்கது.

8. காங்கேயன் நாலாயிரக் கோவை

பெரும்பாலும் கோவை நூல்களில் நானூறு பாடல்களே பாடப்பெறும். எனின், தம் பரந்தபுலமைக்கு ஏற்ப ஐந்நூறும், ஆயிரமும் பாடும் ஆற்றல் கூத்தர்பால் விளங்கிற்று. காங்கேயன் என்னும் புதுவைநகர் வள்ளல்மீது பாடப்பெற்ற நாலாயிரம் பாடல்கள் கொண்ட இந்நூல் தமிழர்தம் கவனக் குறைவால் மறைந்தது போலும்!

9. அரும்பைத் தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரம் போல் இந்நூல் அளவினால் அமைந்திருத்தல் வேண்டும். அரும்பை வள்ளல் ஒருவன் மீது வரலாற்றுணர்வும் கற்பனையும் கலந்து நம்கவிஞரால் பாடப்பெற்ற இந்நூலும் கிடைத்திலது.

10. உத்தரகாண்டம்

உத்தம சோழன் காலத்தில் விளங்கிய கம்பர் இராம காதையின் முதலாறு காண்டங்களையுமே பாடினார். அவரால் பாடப்பெறாது எஞ்சிய ஏழாவது பகுதியாகிய உத்தரகாண்டத்தினையும் ஓய்வு நேரத்தில் ஒட்டக்கூத்தர் பாடி நிரப்பினார் போலும். இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உரைவிளக்கத்துடன் வெளியிடப்பெற்றுள்ளது.

11. ஈட்டி எழுபது

நம் குலத்தின் பெருமையினை நானிலம் உணரும் பாங்கில் கூத்தர் பாடியது ஈட்டி எழுபது என்பர். ஈட்டி எழுபது நம்மரபின் படைக்கருவியாகிய

வேலினைச்சுட்டும். முன்னாள் தமிழ்நாடு சட்டமன்றத்தின் அவைத் தலைவரும் பேராசிரியரும் ஆகிய திரு கா. கோவிந்தன், எம். ஏ. அவர்கள் ''கூத்தன் தமிழ்'' எனப்பெயரிட்டு இந்நூலில் இடம் பெற்றுள்ள கதைகளையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் விளக்கி அரியதோர் உரை செய்துள்ளார். செங்குந்தர்களின் சிவநெறிச்சிறப்பும், செங்குந்தத் தலைவர்களின் பேராற்றல் திறனும் பெருமையும் இந்நூலில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன1927இல் திரு அ. கோவிந்தராச நாயகர் இந்நூலினைச் சென்னையில் வெளியிட்டுள்ளார். செங்குந்தர்கள் திருக் கோயிலின் அருளாட்சித் தலைவர்களாகத் திகழும் சிறப்பினை,

''விடங்கமே ழாதி வீதி விடங்கம் ஆரூர் வெண்காடு
நடங்கொளுங் தில்லை மூதூர் பஞ்சநன் னதி சாய்க்காடு
மிடங்கொள் மாகாள மேழும் இடைமருதூர் செங்காடும்
தொடங்கிய தரும ஆட்சிச் செங்குந்தர் தொகுதி வாழி''

எனவரும் ஈட்டி எழுபது எடுத்துக் காட்டுகின்றது.

புலனழுக்கற்ற அந்தணாளன்

இங்ஙனம் பல்வேறு பனுவல்களைப் படைத்துத் தமிழ் வரலாற்றில் தனியிடம் பெறும் தகுதிமிக்க கூத்தர் பெருமானைக் கம்பர், புகழேந்தி முதலிய வேறுவேறு காலத்துப் புலவர்களுடன் ஒருங்குசேர்த்து, பூசலிட்டுக் கொண்டனர் என்றெல்லாம் தமிழ் நாவலர் சரிதை, விநோதரச மஞ்சரி முதலிய நூல்கள் கற்பனைக் கதைகளைக் கட்டிவிட்டன. இக்கதைகளின் பொய்ம்மையினை டாக்டர் உ. வே. சா. கல்வெட்டாராய்ச்சிக் கலைஞர் சதாசிவப்பண்டாரத்தார், சித்தாந்தக் கலாநிதி ஔவை துரைசாமிப்பிள்ளை முதலிய அறிஞர் பெருமக்கள் தக்க ஏது காட்டி, கூத்தரின் புலனழுக்கற்ற புலமைத்திறனை மதித்து எழுதியுள்ளனர் இவர்தம் தூய உள்ளத்திற்கு

''பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி கவிச்சக்கரவர்த்தி பரவச்
செஞ்சேவகம் செய்த சோழன் திருப்பெயர''
(குலோ. பிள்ளை)

என்று செயங்கொண்டாரை வாயாரப் போற்றியிருப்பதொன்றே போதிய சான்றாகும்.

வரலாற்றுக்கருத்துக்களை இலக்கிய மகாப் படைப்பதில் பெருவெற்றி கண்ட கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தரின் கூரிய சீரிய புலமைக்கதிர் தமிழகம் எங்கும் பரவுக! நம் குலம் ஓங்குக! தமிழினம் தழைக்க! வாழ்க உலகெலாம்!

ஒட்டக்கூத்தரும் இரட்டையரும்

தெய்வத் தமிழகத்தில் கோலோச்சிய முடியுடை வேந்தர் மூவரும் தமிழையும், சைவத்தையும் கண்ணெனப் போற்றிக் காத்து வளர்த்திருக்கின்றனர். அப்படிச் சைவமும் தமிழும் வளர்த்ததில் இந்தகுலத்திற்குப் பெரும் பங்குண்டு. ஒட்டக்கூத்தர், இரட்டைப் புலவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், இன்றைய தலைமுறையில் பாரதி தாசன், சுரதா ஆகியவர்கள் இந்த மரபில் வந்தவர்களே! தமிழ்ப்புலவர்களின் செம்மையான வரலாறோ அல்லது தமிழ் இலக்கியத்தின் முழு வரலாறோ கிடைக்காததால் ஒட்டக்கூத்தர், இரட்டைப்புலவர் ஆகியவர்களின் முழு வரலாறும் நமக்கு இப்போது கிடைக்கவில்லை. 'தமிழ் நாவலர் சரிதை' முதல் 'தமிழ் இலக்கிய வரலாறு' வரையிலுள்ள நூல்களில் இந்தப் புலவர்களின் வரலாற்றுக் குறிப்புகள் தான் தென்படுகின்றன. அந்தக் குறிப்புகளின்படி பார்த்தாலும் இந்தப் புலவர்கள் மூவரும் பெருங் கவிஞர்கள் என்றும், செவிக்கினிய, சிந்தைக்கினிய தமிழ்ப் பாக்களைப் பாடித் தமிழ் வளர்த்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. இவர்களில் ஒட்டக்கூத்தர் சோழர் அவைக்களத்தே அரசவைக் கவிஞராக வீற்றிருந்து செல்வச்செழிப்புடன் வாழ்ந்திருக்கிறார். இரட்டையர்கள் வறுமையில் வாடி, தமிழகமெங்கும் நாடோடிகளாக அலைந்து அல்லற்பட்டிருக்கின்றனர்.

(2) ஒட்டக்கூத்தர் சோழ வள நாட்டில் மலரி என்ற ஊரிலே பிறந்தவர். இயற்பெயர் கூத்தர். கூத்த முதலியார் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார். கூத்தர் என்பது தில்லை நடராசப் பெருமானின் திருப்பெயர். அந்தப் பெயரைக் கொண்ட இந்தக் கவிஞர் சைவ மரபில் வந்தவர் என்று தெரிகிறது. 'ஒட்டம்' அதாவது பந்தயம் வைத்து கவி பாடியதால் கூத்தர் என்ற பெயருடன் 'ஒட்ட' என்ற சொல்லும் சேர்ந்து ஒட்டக்கூத்தர் என்று இவருக்குப் பெயர் வந்திருக்கிறது. தமிழேயன்றி வடமொழியிலும் இவர் பெரும் புலவராக விளங்கியிருக்கிறார் என்று தமிழ்த்தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

> சென்று செவிஅளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே,
> நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் —ஒன்று,
> மலரி வருங் கூந்தலார் மாதர் நோக்கு, ஒன்று,
> மலரிவரும் கூத்தன்தன் வாக்கு''

என்ற தண்டியலங்கார மேற்கோட் செய்யுள் இவருடைய பாடல்களின் நயத்தை நன்கு விளக்குகின்றது. ''கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக் கூத்தர்'' என்று பின்னாளில் வந்த புலவர்கள் இவரைப் பாராட்டியிருக்கிறார்கள்.

(3) **தக்கயாகப் பரணி:-** இந்தக் கவிஞர் செய்த நூல்கள் பல. ஆயினும், இன்று நமக்கு கிடைப்பவைகள் சிலவே. ''பரணி'' என்றவுடன் செயங்கொண்டார் பாடிய 'கலிங்கத்துப்பரணி' தான் நமக்கு நினைவுக்கு வருகிறது. ஆனால், அதைப்போன்றே நயமிகு பரணி ஒன்று ஒட்டக்கூத்தர் பாடியிருக்கிறார் என்பது இன்று நம்மில் பலருக்கும் தெரிவதில்லை. சிவனை அவமதித்துத் தக்கன் செய்த வேள்வியை, வீரவாகுதேவர் அழித்து வெற்றி கொண்டதை 'தக்கயாகப்பரணி' என்று ஒட்டக்கூத்தர் பாடியிருக்கிறார். இந்தப் பரணி மற்ற பரணிகளிலிருந்தும் மாறுபட்டது; கூத்தரின் சைவப் பற்றினையும் தமிழ்ப் புலமையையும் ஒருங்கே விளக்கும் வகையில் அமைந்திருக்கிறது. கடவுள் வாழ்த்தில் ஞானசம்பந்தப்பெருமானை வாழ்த்தியிருப்பதும், பிறகு, நாமகளைக் கொண்டு அவர் வரலாற்றைச் சொல்ல வைத்திருப்பதும் அவருடைய சைவப் பற்றுக்குச் சான்றுகள். வேள்வியை அழித்த வீரவாகு தேவர் நாமகளின் நாசியை அரிந்தார் என்று புராணங்கள் சொன்னாலும், அதை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தன் ஊராகிய மலரியில் நாமகளுக்குக் கோயிலெடுத்து, அவளை ''ஆற்றங்கரை சொற்கிழத்தி வாழியவே'' என்று நூலிலும் வாழ்த்தியிருக்கிறார். இந்நூலிலுள்ள பெருநயங்களைப் படித்தே மகிழ வேண்டும்.

(4) **மூவர் உலா:-** விக்கிரம சோழனின் அவைக்களத்தை கூத்தர் அலங்கரித்திருக்கிறார். அவர் மகன் குலோத்துங்கனுக்கும், அவனது மகன் இரண்டாம் இராசராசனுக்கும் ஆசானாக இருந்து அவர்களுடைய அவைக்களத்தையும் அலங்கரித்திருக்கிறார். இந்த மூன்று சோழர்களாலும் கூத்தர் ஆதரிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டிருக்கிறார். அவர்கள் மூவர் மீதும் ''மூவர் உலா'' என்ற அரிய நூலை கூத்தர் பாடியிருக்கிறார். குலோத்துங்க சோழன் மீது ஒரு பிள்ளைத் தமிழும் இவர் இயற்றியிருக்கிறார். இம்மூவரில் ஒருவர் அரசிலாற்றங்கரையில் உள்ள ஓர் ஊரை இவருக்கு முற்றூட்டாக அளித்திருக்கிறார்; அது கூத்தனூர் என்று இன்றும் வழங்கப்படுகிறது. தன் மீது உலா பாடியதற்காக விக்கிரம சோழன் இவருக்கு யானை, காளம் முதலிய விருதுகளை அளித்தான். ''பெருக்கத்து வேண்டும் பணிவு'' என்றபடி அந்த விருதுகளுக்கு தான் ஏற்றவர் இல்லையென்று, தம்முடைய பணிவை இவர் பாடல்களால் தெரிவித்திருக்கிறார்.

(5) அருட்செல்வமும், பொருட்செல்வமும் ஒருவரிடத்தே சேர்ந்தமைவதில்லை என்ற சொல்லுக்கு மாறாக, இப்பெரும் கவிஞர் அருட்செல்வமும், பொருட்செல்வமும் பெற்று நெடுநாள் வாழ்ந்து, தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிறார். தான் பிறந்த மரபினருக்காக ''ஈட்டி எழுபது'' பாடினதாக வரலாறு கூறுகிறது. அந்த நூலும் இன்று முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை. 'கவிராட்சசன்' என்றும் 'கவிச் சக்கரவர்த்தி' என்றும் 'காளக்கவி' என்றும் ''வாணிதாசன்'' என்றும் இக்கவிஞருக்குப் பட்டங்கள் இருந்திருக்கின்றன. ஆங்கிலக் கவிஞர் 'கோல்ட்ரிஜின்' வருணனைகளைப் போலவே, உலக இயல்புக்கு மாறான வருணனைகள் இவர் நூல்களில் பலபடப் பரந்துகிடப்பதால் இவரை ''கௌடப் புலவர்'' என்றும் அறிஞர் பாராட்டியிருக்கின்றனர்.

(6) ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் சம காலத்தவர் என்றும், அவர்களுக்குள் பூசல் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் வைது கொண்டனர் என்றும் சில செய்திகள் உண்டு. ஆனால் வரலாற்றுப்படி ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் சம காலத்தவர் அல்ல. இருவரும் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த இருபெரும் புலவர்கள். அவர்களுக்குள் போட்டியும் பொறாமையும் இருந்தது என்று சொல்வது கதை கேட்போருக்கு இனிமையாக இருக்கலாமே ஒழிய, அது வரலாற்று உண்மையல்ல. அது தமிழுக்கோ, தமிழ்ப் புலவர்களுக்கோ ஏற்றமுமில்லை.

''தண்ணீருங் காவிரியே, தார் வேந்தன் சோழனே,
மண்ணாவதும் சோழ மண்டலமே''

என்று புகழப்படும் சோழ வளநாட்டில் ஆமாத்தூரிலே பிறந்தவர்கள் ''இரட்டையர்கள்''. இவர்கள் இயற்பெயர் தெரியவில்லை. இவர்கள் காலம் 14ம் நூற்றாண்டு ஆகும். இவர்கள் இருவரும் அத்தை பிள்ளை; அம்மான் சேய்; என்று தெரிகிறது. மாறாக இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்று சொல்வாருமுண்டு. ஒருவருக்கு ஒருவர் எப்படி உறவு என்பதைப் பற்றி ஐயமிருந்தாலும், இருவரும் நெருங்கிய உறவினர் என்பதில் ஐயமில்லை. இருவரில ஒருவர் முடவர்; இன்னொருவர் குருடர். குருடர் தோளில் முடவர் ஏறிக்கொள்ள, முடவர் வழிச் சொல்ல, இந்த இரு புலவர்களும் தமிழகமெங்கும் நடந்து தெய்வத்தலங்களைக் கண்டு வணங்கியும், பாடியும் தம் வாழ்நாளைக் கழித்திருக்கின்றனர்.

இவர்களுடைய இறைவுணர்வையும், தமிழ் உணர்வையும் கண்டு தமிழ் மக்கள் இவர்களைத் ''தெய்வப் புலவர்கள்'' என்றே சிறப்பித்துச் சொன்னார்கள். இருவரும் உடல் ஊனமுற்று இருந்தாலும் உணர்ச்சி ஒன்றி ஒருவரால் தான் மற்றொருவருக்கு வாழ்வு என்ற நிலையினால் இருவரும் ஒருவரே என்று சொல்லும் அளவுக்கு ஒன்றுபட்டு வாழ்ந்திருக்கிறார்கள். முடவர் தன் கண்ணால் பார்த்ததை வைத்து முதல் இரண்டு அடிகளைப் பாட, குருடர் அதைக் கேட்டு தம்முடைய நுண்ணிய அறிவினால் அந்தக் கருத்தை ஒட்டியோ, வெட்டியோ அடுத்த இரண்டு அடிகளைப் பாடி நிறைவு செய்திருக்கிறார். இம்மாதிரி இவர்கள் பாடிய பாடல்களில் வசவும், நகைச்சுவையும், கற்பனையும் படித்து ரசிக்கத்தக்கவைகள். ''பாவை பாடிய வாயால் கோவை பாடு'' என்ற மாணிக்கவாசகப் பெருமானை, தில்லை நடராசர் பணித்ததாக ஒரு வரலாறு உண்டு. அந்த இறைவன் இந்த இரட்டையர்களைப் பார்த்து கலம்பகம் பாடச்சொல்லிக் கேட்டாராம். இவர்கள் கலம்பகம் பாடுவதில் வல்லவர்கள். ''கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்'' என்று இந்த இரட்டையர்கள் சிறப்பிக்கப் படுகிறார்கள். இவர்களுடைய முதிய பிராயத்தில் காளமேகம் இளைஞராக இருந்ததாகத் தெரிகிறது.

ஆங்கூர் என்ற தலத்திலே கோவில் அர்ச்சகர் ஒருவர் அரிசி வடித்து நைவேத்தியம் செய்யாமல், சூடு ஏற்றிய கல் மீது தண்ணீர் ஊற்றி ஆவி பறக்கும்படி செய்து, அதுதான் நைவேத்திய அன்னம் என்று பிறரை ஏமாற்றி வந்தார். அதைக் கண்ட முடவர்,

''தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனே அல்லாழி
யப்பா
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ?
—என்றார்.

அதைக் கேட்ட குருடர் உண்மையை உணர்ந்து கொண்டு,

—போங்காணும்
கூறுசங்கு தோல் முரசு கொட்டோசை
யல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்''

என்று பாடி முடித்தார். அர்ச்சகரின் திருட்டு வெளி வந்தது; சிவ குற்றம் நீங்கியது.

இரட்டையர்கள் திருவண்ணா மலைக்குச்சென்று வழிபாடு செய்தபோது அங்கு சம்பந்தாண்டான் என்ற செல்வனைக் கண்டார்கள். அந்தச் சம்பந்தாண்டான்தான் அருணகிரி யாரோடு மாறுபட்டு வாதுக்கழைத்த வன்; புலவர்களின் அருமை தெரிந்து மதிக்காதவன்; அகம்பாவம் மிக்கவன். இரட்டையர்கள் பார்த்தபோது சம்பந் தாண்டனுக்கு நாவிதன் சவரம் செய்து கொண்டிருந்தான். இரட்டையர்களைப் பார்த்து அகம்பாவமாக ''என்மீது மண் என்று எடுத்து மலுக்கு என்று முடியும்படி விரைந்து ஒரு பாடல் பாடுங்கள் பார்க்கலாம்'' என்றான். அதைக் கேட்ட முடவர்,

''மன்னு திருவண்ணா மலைச்சம்பந்
தாண்டாற்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்?
— என்றார்

அதைக் கேட்ட குருடர்,

— மின்னின்
இளைத்த மடவார் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு''

என்று பாடி சம்பந்தாண்டனைத் தலை குனிய வைத்தார்.

இன்னொரு ஊரிலே திருவேங்க டேசன், இனியன் என்ற இருசகோதரர் கள் இருந்தனர். அவர்களுள், திருவேங்கடேசன் ஈகைக் குணம் உள்ளவர்; வள்ளல். இனியன் அதற்கு மாறானவன். அவர்களைப் பார்த்தபோது முடவர் பாடினார்-

''தேன்பொழியும் வாயான் திருவேங்க
டேசனுடன்
ஏன்பிறந்தான் இந்த இனியன்காண்?''
—என்று வினாஎழுப்பினர்.

அதற்குக் குருடர்

— யான் சொல்லக்கேள்
''சீதேவியார் பிறந்த செய்யதிருப் பாற்
கடலுள்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்''

என்று பதில் சொன்னாராம்.

இரட்டையர்கள், அங்கயற்கண்ணி உடனாகிய ஆலவாய் அண்ணலை வழி பட மதுரை வந்து பொற்றாமரைக் குளத்திலே இறங்கிக் குளித்தார்கள். பொய்கையிலே ஆடையை தோய்க்கும் போது, குருடர் கையிலிருந்த ஆடை நழுவி விட்டது. பார்வை இல்லாத தனாலே அவர் அந்த ஆடையை நீரிலே கையால் தடவித் தடவித் தேடினார். அதைப் பார்த்த முடவருக்கு வேடிக்கை செய்யத் தோன்றியது.

''அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து
நாமதனைத்
தப்பினால் நம்மையது தப்பாதோ''
— என்றார்

குருடர் இளைத்தவரா என்ன?

— ''இப்புவியில்
இக்கலிங்கம் போனால் என் ஏகலிங்க
மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை''
— என்றார்.

இந்த இரட்டையர்கள் வறுமையாலும் வாடியதாகத் தெரிகிறது. வறுமை நீங்கத் தெய்வங்களை வேண்டியும் அவர்கள் வறுமை நீங்கவில்லை. அந்த நிலையில் முடவர்,

''கேட்ட வரமளிக்கும் கீர்த்தி உள்ள
தெய்வங்காள்
கூட்டோடு மெங்கே குடிபோனீர்''
– என்று வருந்தினர்

அவரைத் தேற்றுவதற்காகக் குருடர்,

– ''பாட்டாய்க் கேள்
செல்கால மெல்லாம் செலுத்தினோம்
அல்காலம்
கல்லானோம் செம்பானோம் காண்''
- என்றார்.

அம்மானை என்பது மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. இன்று தமிழ் மக்கள் அதை மறந்து விட்டார்கள். தமிழ் மக்களின் பண்பாட்டுக்கும், பாரம்பரியத்துக்கும் இறையுணர்வுக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும் விளையாட்டு இந்த அம்மானை, மூன்று கன்னிப் பெண்கள் சேர்ந்து, ஒருவர் ஒரு சேதியைச் சொல்ல, இன்னொருவர் அது எப்படி என்று கேட்க, மூன்றுமவர் அதற்கு நயமான விடை சொல்லுவார். இம்மூன்றும் பாட்டாக வரவேண்டும். அதுதான் அம்மானை ஆட்டம். இந்த அம்மானை விளையாட்டை வைத்து ''மூவர் அம்மானை'' என்ற நூலை இரட்டையர்கள் பாடியிருக்கிறார்கள்.

'மனுநீதிச் சோழனின் நீதியையும், நேர்மையையும் உலகத்திற்கு எடுத்துக் காட்ட, சிவபெருமான் பசுவாகவும், எமன் கன்றாகவும் திருவாரூர் வந்ததாகவும், மனுநீதிச் சோழன் மகன் தேரிலே வரும்பொழுது, கன்று தேர்க்காலில் அடிப்பட்டு இறந்தது என்றும், தாய்ப் பசு மனுநீதிச் சோழனிடம் போய் நீதி கேட்க, மனுநீதிச் சோழன் தன் மகன் மீது தேர்க்காலை ஏற்றி நீதி வழங்கினர்' என்றும் திருவாரூர் புராணம் சொல்கிறது. அப்படிச் சிவ பெருமானும், எமனும், பசுவாகவும், கன்றாகவும் வந்ததால் அந்தப் பசு பால் கறக்குமா என்ற கேள்வி எழுகிறது பால் கறக்கும் போது சிலபசுக்கள் பால் கறப்பவரையோ அல்லது கன்றையோ காலால் உதைத்துப் பால் தர மறுப்பதும் உண்டு. எனவே, கன்றை உதைக்கும் பசு பால் தராது. திருக்கடவூரிலே மார்க்கண்டனின் உயிரைக் கவர வந்த எமனைச் சிவ பெருமான் காலால் உதைத்தார் அல்லவா? எனவே, அந்தச் சிவபெருமான் கன்றை உதைக்கும் பசு தானே? அது எப்படி பால் கறக்கும்; இந்த வேடிக்கையான கருத்தை மூவர் அம்மானையில் இரட்டையர்கள் பாடியிருக்கிறார்கள். இதோ அந்தப் பாடல்:-

முதல்பெண்: ''ஈசன் பசுவாகி ஏமன் இளம்
கன்றாகி;
வீசு புகழ் ஆரூரின் வீதி வந்தார்
அம்மானை!

இரண்டாவது பெண்: ''வீசு புகழ் ஆரூரின் வீதி
வந்தார் ஆமாகில்
காசளவு பால்தான் கறக்குமோ
அம்மானை?

மூன்றாவது பெண் ''கன்றை உதைகாலி
கறவாதே அம்மானை''

ஆமாத்தூர் கலம்பகம், ஏகாம்பர நாதர் கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பர நாதர் வண்ணம், மூவர் அம்மானை, கச்சிக் கலம்பகம், கச்சி உலா, திருவொற்றியூர் தியாகேசர் பஞ்சரத்தினம், வடிவுடை அம்மை பஞ்சரத்தினம் ஆகியவைகள் இந்த இரட்டையர்கள் செய்த நூல்கள் என்று தெரிகிறது. இவைகளைத் தவிர, பல நூறு தனிப் பாடல்களையும் இக்கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள்.

செங்குந்தர் நீதி முறை

A. துரைசாமி, B. A., B. L.,
வழக்கறிஞர், சேலம்

உலகில் மனிதன் ஒற்றுமையாக வாழ நீதி நெறியும் முறையான தென்று அமைய வேண்டுவது இன்றி யமையாத தொன்ருகும். செங்குந்தரின் மேம்பாடுகளுக்கு அவர்களின் நீதி முறை செம்மையான தொன்ருக இருந்ததும் ஒரு காரணமாகும்.

செங்குந்தர்களின் குலத்தொழில் ஆதிகாலந் தொட்டு நெசவுத் தொழில் என்பது யாவரும் அறிந்ததே. நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த செங்குந்தர் களுக்கு அவர்களின் பொது இடமாக அமைந்தது பாவடியாகும். பாவடி என்பது பாவு செய்யும் பரவலான இடம். தினசரி காலையில் பாவு செய்ய டி இடம் பயன்படும். பிறகு ஒவ் வொரு பொது நிகழ்ச்சிகளையும் அங்கு செய்து வருவர். பாவடியே செங் குந்தரின் வாழ்க்கைக்கு உயிர்நாடி. அத்தகைய பாவடியில் அமர்ந்து பொது மக்கள் அனைவரும் சேர்ந்து கலந்து பேசி முறையான ஒரு முடிவையே ஒவ்வொரு சிறு தகராறு களிலும் பெருவழக்குகளிலும் முடிவு செய்வர். செங்குந்தர்கள் தங்களுக் குள்ளேயே அவ்வாருன வழக்குகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஒரு நெறி முறையையே வகுத்திருந்தனர். தற் போதுள்ளது போல் அவர்களும் நீதியை முறையாகக் கையாண்டனர். அத்தகைய நீதிமுறையைக் காண் போம்.

செங்குந்தர் நீதிமுறைக்குத் தக்க படியும் வாழ்க்கை முறைக்குத் தக்க படியும் ஊர், மேலூர், நாடு, மேல் நாடு, மகா நாடு என்று ஐந்து பிரி வாகக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு ஊரிலும் ஊர்க்காரியங் களைக் கவனிக்கவும் நீதி செலுத்து வதற்கும் குடிமகன், காரியக்காரர், பெரியதனக்காரர், நாட்டாண்மைக் காரர் என்பார் உளர்.

ஊர் நியாயத்தில் கலந்துக் கொண்டு தன் கருத்தைத் தெரிவிக்க ஒவ்வொரு வயது வந்த குடிமகனுக்கும் உரிமையுண்டு.

குடிமக்களில் திருமணமானவர்கள் காரியக்காரராகத் தேர்ந்தெடுக்கப் படத் தக்க தகுதி படைத்தவர்கள். குழந்தைகள் பெற்று பொறுப்புள்ள வர்கள் பெரியதனக்காரர்களாகத்

தேர்ந்தெடுக்கத் தக்க தகுதி படைத்தவர்கள். ஊருக்குத் தக்கபடி ஒரு ஆண்டுக்கு ஒரு முறையோ இரண்டு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையோ ஊர்ப்பொதுக் கூட்டத்தில் பெரும்பாலானவர்கள் கூடி காரியக்காரர்களையும், பெரியதனக்காரர், நாட்டாண்மைக்காரர் ஆகியவர்களையும் தேர்ந்தெடுத்து வெற்றிலை பாக்கு கொடுத்து நியமிப்பார்கள். அவ்வாறாக நியமிக்கப்பட்ட காரியக்காரர்களும் பெரியதனக்காரர்களும்நாட்டாண்மைக்காரர்களும் அடங்கிய ஊர்ப் பொது மக்களின் கூட்டத்தில் ஒருவர் வழக்குமுறையிட்டால், ஊராரால் நியமிக்கப்பட்ட சங்கோதி என்றழைக்கப்படும் பொது ஊழியர் எதிர் தரப்பார், — பிரதிவாதியிடம் சென்று இன்னார் அவர் பேரில் வழக்கு தொடர்ந்திருக்கிறார் என்று அறிவித்து மேலும் குறிப்பிட்ட காலத்தில் அந்த வழக்கு குறித்து நியாயம் பேசி முடிவு செய்ய ஊர்க் கூட்டம் கூட இருப்பது பற்றியும் அறிவித்து ஊரிலும் பாவடிகளிலும் கூவி பறை சாற்றி விடுவார். குறித்த தேதியில் ஊர்க் கூட்டம் கூடிய பின் அக்கூட்டத்தில் பெரியதனக்காரர்கள், காரியக்காரர்கள், குடிமக்கள் சங்கோதி ஆகியவர்கள் முன்னிலையில் வாதியும் பிரதிவாதியும் அவரவர் வழக்கு விவரத்தை முறையிடலாம். பின்னர் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டுத் தீர்ப்பு கூறப்படும். தீர்ப்பில் வாதி பிரதிவாதிகள் பேரில் கூறப்படும் அபராதமோ அல்லது தண்டனையோ கடுமையானதாக தென்பட்டால் அவர்கள் ஊர் பொது மக்கள் முன்பு ஷை தண்டனை என்னால் தாங்க முடியாது, சற்று குறையுங்கள் என்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக் கொண்டால் அவர்கள் மீண்டும் கலந்து ஆலோசித்து தண்டனையையோ அபராதத்தையோ குறைத்து மறுதீர்ப்பு வழங்குவதும் உண்டு. அப்படி அபராதத்தைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்ளுவதற்குச் சபையைக் கண்டு கொள்ளுதல் என்று பெயர்.

அந்தப்படி கூறப்படும் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்துகொள்ள தீர்ப்பினால் பாதிக்கப் பட்டவருக்கு உரிமையுண்டு. அவர் அப்பீல் செய்துக் கொள்ளும் உரிமையை அப்போதே (முடிவு சொன்ன அப்போதே) தெரிவித்துக் கொள்ளுதல் **மேவுதல்** என்றழைக்கப்படும்.

சிறிது சிக்கலான வழக்காக இருப்பின் மேலூர்க்காரர்களையும் முறைப்படி அழைத்து மேலூர்காரியக்காரர், பெரியதனக்காரர்கள், அனுபவ மிக்க குடிமக்கள் ஆகவர்களையும் வைத்துக் கொண்டு நியாயம் பேசி முடி வெடுத்தலும் (தீர்ப்பு கூறுதல்) உண்டு.

ஷை தீர்ப்பின் பேரில் குறிப்பிட்ட காலாவதிக்குள் அந்த ஊர் எந்த நாட்டின்கீழ் உள்ளதோ அந்த நாட்டில் சங்கோதி, காரியக்காரர், பெரியதனக்காரர், நாட்டாண்மைக்காரர் ஆகியவர்களிடம் முறையிட்டு அப்பீல் விசாரிக்கச் செய்ய வேண்டியது. பிறகு நாட்டிலிருந்து அப்பீல் பிரதிவாதிக்கும் தீர்ப்பு கூறிய ஊருக்கும் சங்கோதி மூலம் அறிவிப்பு கொடுக்கப்படும். அதன் பிறகு சம்மந்தப் பட்ட ஊர், மேலூர் முதலியவைகளின் பிரதிநிதிகளையும், மற்றும் அந்த நாட்டின் கீழ் உள்ள ஊர் பிரதிநிதிகளையும் அழைத்து குறித்த தினத்தில் நாடு கூடும். அந்த நாட்டில் அப்பீலுக்குச் சம்மந்தப் பட்ட தீர்ப்பின்

வழக்கு பற்றி ஆதிமுதல் கேட்கப்பட்டு விசாரித்து நாட்டில் தீர்ப்பு கூறப்படும்.

நாட்டின் தீர்ப்பில் ஏற்பட்ட முடிவு படி அந்த நாட்டின் கீழுள்ள அனைத்து கிராமங்களிலும் அதே போன்ற வழக்கு களில் அதே போன்ற முடிவு அமுலுக்கு வரும்.

நாட்டின் தீர்ப்பை முடிவானதாக ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் மகா நாட்டுக்கு அப்பீல் செய்ய பாதிக்கப் பட்டவருக்கும், நாட்டுத் தீர்ப்பு ஊர்த் தீர்ப்பை மாற்றியிருந்தால் முதல் தீர்ப்பு வழங்கிய ஊருக்கும் உரிமை யுண்டு.

நாட்டில் நியாயம் பேசுவதானால் சிக்கலான வழக்குகள் மேல் நாடுகளை யும், மற்ற சக நாடுகளையும் கலந்தோ அல்லது அவற்றின் பிரதிநிதிகளையும் அழைத்தோ நியாயம் பேசி முடிவு செய்து தீர்ப்பு கூறுவதும் உண்டு.

நாட்டின் தீர்ப்பின் பேரில் அப்பீல் செய்து கொள்வதென்றால் தீர்ப்பினால் பாதிக்கப் பட்டவர்கள் மேவுதல் கேட்டுப் பெற வேண்டும். குறிப்பிட்ட கால வரையறைக்குள் மகாநாட்டுக்கு அப்பீல் செய்து விடவேண்டும்.

மகாநாட்டுக்கு ஒவ்வொரு ஊரிலி ருந்தும் நாட்டிலிருந்து பிரதிநிதிகள் உண்டு. மகாநாட்டுக்கும் காரியக்காரர் கள், பெரியதனக்காரர்கள், நாட்டாண் மைக்காரர்கள் உண்டு.

மகாநாட்டில் நியாயம் கொடுத்து விட்டால் இரு பார்ட்டிகளுக்கும் தீர்ப்புக்குச் சம்மந்தப்பட்ட ஊருக்கும், நாட்டுக்கும் முறைப்படி தெரிவித்து ஒரு குறிப்பிட்ட தினத்தில் மற்ற ஊர் பிரதிநிதிகளும் நாட்டுப்பிரதிநிதிகளும் அடங்கிய மகாநாட்டுக் கூட்டத்தில் மீண்டும் டி வழக்கும், ஊர்த்தீர்ப்பும் நாட்டுத் தீர்ப்பும் விவாதிக்கப் பட்டு ஆராயப்பட்டு தீர்ப்பளிப்பார்கள். அத் தகைய மகா நாட்டுக் கூட்டத்திற்கு மற்ற மகா நாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப் படலாம்,

மகா நாட்டின் தீர்ப்புகளும், அனு சரிக்கப்பட்ட முறைகளும் அதன் கீழுள்ள நாடுகள், ஊர்கள் ஆகிய அனைத்திலும் பின்பற்றப்படும்.

இவ்வாருக செங்குந்தர்கள் தங் களுக்குள் ஏற்பட்டு வந்த சிறு பூசல் களையும் தகருறுகளையும் மற்றெல்லா வித சச்சரவுகளையும் தீர்த்து வந்திருக் கின்றனர் என்பது இப்போதும் சில ஊர்களிலும் நாடுகளிலும் மகாநாடு களிலும் கையாளும்முறைகளிலிருந்தும் தெரிய வருகிறது. மேற்கண்ட முறை களை நாம் பின்பற்றினால் நீதி மன்றங் களுக்குச் சென்று பல வேறுபட்ட இன்னல்களுக்கு ஆளாக வேண்டிய தில்லை என்பதும் நம்முள் ஒற்றுமை வளரும் என்பதும் திண்ணம்.

விலங்குகட்கும் மனிதனுக்கும் உண்பது, உறங்குவது, உலாவுவது, மக்களைப்பெறுவது, மார்வது எல்லாம் பொதுவாக அமைந்துள்ளன. தெய்வ உணர்ச்சியே விலங்குகளுக்கும், மனிதனுக்குப் இடையே இட்ட எல்லைக்கல் (பிரிக்கும் நிலை)

— திருமுருக கிருபானந்த வாரியார்



திரு S. சாலே, B. A.,
பொருளாளர் : மதுரை மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்



திரு P. S. சிவப்பிரகாச முதலியார்
தலைமை பொறியாளர் (Retd.)
நெடுஞ்சாலைப்பிரிவு
தமிழ்நாடு



திரு P. K. சாமிநாத முதலியார்
செயலாளர் : சென்னை—செங்கை
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்

திரு K. S. ராஜேஸ்வரன்
ஜாப்னா
இலங்கை

திரு M. மாணிக்கம்
செயலாளர்
மதுரை மாவட்ட செங்குந்த
மகாஜன சங்கம், மதுரை



திரு V. ரத்ன முதலியார் B. A. B. L.,
சேர்மன், M. P. S. C. (Retd.)
சென்னை–18

திரு சரவண பழனிவேலு
செங்கை மாவட்ட செயலாளர்
விளம்பர குழு செயலர்



திரு C. அருணசலம், B.A.L.T.,
செயலாளர்
திருநெல்வேலி மாவட்ட செங்குந்தர்
சங்கம்

திரு T. V. பரமசிவ முதலியார்
பொருளாளர் : கோவை
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்



திரு M. R. நடராஜ முதலியார்
துணைத்தலைவர் : கோவை
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்

திரு V. V. C. R. M. கந்தசாமி, B. Sc.,
அமைப்பாளர் : கோவை
செங்குந்தர் டிரஸ்ட்



திரு R. சோமசுந்தரம், M. A. B. L.,
சங்க அமைப்பாளர்
செங்குந்த மகாஜன சங்கம்
விருத்தாசலம்



திரு S. T. R. M. கந்தசாமி முதலியார்
துணைத்தலைவர் : தஞ்சை ஜில்லா
செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்
சிக்கல்



திரு K. திருஞான சம்பந்தம்
செயலாளர் : தஞ்சை ஜில்லா
செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்
செம்பொனார் கோயில்

திரு R. N. சந்தான ராஜ கோபாலன்
தலைவர் : தஞ்சை ஜில்லா
செங்குந்த மகாஜன சங்கம்

திரு S. K. P. பழனிவேலு
பொதுச்செயலாளர் : தஞ்சை ஜில்லா
செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்

திரு ப. செல்வராசு B.A.,
பொருளாளர் : திருச்சி
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்



Dr. M. கருணாநிதி M.B.B.S.,
அமைப்பாளர் : திருச்சி
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்



திரு து. பழனியாண்டி முதலியார்
செயலாளர் : திருச்சி
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்

திரு கா. சிவப்பிரகாசம்
இணைச்செயலாளர் : தருமபுரி
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்
(குருபரஹள்ளி)



திரு N. விநயக மூர்த்தி, B. A. B. T.,
துணைச்செயலாளர் : தஞ்சை ஜில்லா
செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்
குடவாசல்

திருமதி முத்துலட்சுமி இராமலிங்கம்
உபதலைவி : தஞ்சை ஜில்லா
செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்
ஆக்கூர்

திரு T. S. M. மகாதேவ முதலியார்
துணைத்தலைவர் : தஞ்சை
மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்

திரு தெ. சம்பந்த முதலியார்
பொருளாளர் : தஞ்சை
மாவட்ட செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்

"சமுதாய உணர்வும் உழைப்பும்"

செ. நாராயணசாமி M. Sc.,
(பள்ளிக் கல்வி உதவி இயக்குநர், சென்னை)

சமுதாயம் என்பது ஒரு சொத்து. அதை மேலும் மேலும் வளரச் செய்கின்ற உணர்வும் அதற்கான உழைப்பும்தான் மிக முக்கியத் தேவை எனலாம். சமுதாயம் உயர்ந்தால் நாடு உயரும். சமுதாயம் சீரழிந்தால் நாடு தன் சீரழிவிலிருந்து தப்பவே இயலாது தொட்டுக் கட்டுகின்ற ஒரு மலர் மாலையினைப் போல் சமுதாயம் என்ற கட்டுக் கோப்பினை நலிந்து விடாமல் அழகாக மிளிரச் செய்திடல் வேண்டும். சமுதாயம் முன்னேற அச்சமுதாயத்திலே உதித்த ஒவ்வொருவர் மனதிலும் சமுதாய உணர்வு மங்காமல் ஒளியுடன் விளங்கிட வேண்டும். சமுதாய உணர்வு சிறிதேனும் குன்றாமல் ஒவ்வொருவரும் உழைத்தால் சமுதாயம் உயர்வடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்றுகேள்" என்றார் அமெரிக்க அதிபராக இருந்த ஜான் எஃப் கென்னடி. அதேபோல் ஒருவன் சமுதாயம் அவனுக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட சமுதாயத்திற்கு அவன் என்ன செய்தான் என்பது தான் முக்கியமான ஒன்றாக ஒவ்வொருவர் மனத்திலும் குன்றாமல் இருக்க வேண்டும். சமுதாயத்திற்காக சமுதாய வளர்ச்சிக்காக ஆற்றல் மிக்க தகுதி படைத்த பண்பாளராக ஒவ்வொருவரும் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயம் வளர இளைஞர்கள் உழைக்க வேண்டும். பெரியவர்கள் துணை நின்று தங்கள் முழு ஒத்துழைப்பினை வழங்கிடவேண்டும். அப்பொழுது தான் இளைஞர்களின்பால் உள்ள சமுதாயம் என்ற உணர்வு உரம்பெற்று வலுவடையும், சமுதாயம் உயர்வடையும். சமுதாயம் என்ற பொதுச் சொத்தினை குன்றாமல், குறையாமல் பாதுகாத்திட அயராது உழைப்பவர்கள் இளைஞர்களாகவும், அந்த உழைப்பினை வெளிக் கொணர்ந்து சமுதாயத்தை உயர்வு பெறச் செய்பவர்கள் பெரியவர்களாகவும் இருந்திட வேண்டும். அப்படி இருந்தால் அச் சமுதாயத்தை ஒரு திறம் கொண்ட ஆலமரத்திற்கு ஒப்பிட்டு, அம்மரத்தின் துளிர்விடும் இலைகளாக இளைஞர்களையும், அம்மரத்தின் திறம் கொண்ட வேர்களாகப் பெரியவர்களையும் கொள்ளலாம். சமுதாயம் என்ற ஒளி விடும் விளக்கு சுடர் விட்டு எரிய

திரியான இளைஞர்களும், என்னைப் போன்ற பெரியவர்களும் மிக மிக முக்கியம்.

ஏதாவது பயனுள்ள வழியில், சமுதாயத்தின் பொதுவான பொருளாதார மேம்பாட்டிற்குப் பணி செய்வது மூலமே நாம் கண்ணியமான, சமுதாய உணர்ச்சி பூர்வமான வாழ்க்கையை நடத்தச் சித்தம் கொண்டுள்ளோம் என்பது புலனாகும். தனி ஒருவன் உயர்ந்தால் சமுதாயம் அவனால் உயரும். தனி ஒருவன் உயர்வால் சமுதாயம் உயர்ந்தால் அது அந்தச் சமுதாயத்திற்குப் பெருமை. ஆனால் அதற்கு மாருக சமுதாயத்தால் ஒருவன் உயர்ந்தால், அந்த உயர்வு ஏற்றம் மிக்கதாகவோ, பெருமைப்படத் தக்கதாகவோ, நிலைத்து நிற்கக் கூடியதாகவோ இருக்காது. எனவே சமுதாயம் பெருமை அடைய வேண்டுமானால், சமுதாய மக்கள் பெருமிதம் கொள்ள வேண்டுமானால் நாம் உயர்ந்து, சமுதாயத்தை உயர்வு பெறச் செய்து சரித்திரம் படைக்கவேண்டும். அப்போதுதான் சமுதாயத்தைச் சரித்திரம் மறக்காததோடு, சமுதாயத்தை உயர்வடையச் செய்த உத்தமரையும் சமுதாயம் மறக்காது. இத்தகு வெற்றி காண முக்கியமாகத் தேவை உழைப்பு. அதற்கான உணர்வு. எனவே இந்த முயற்சிக்கு நாம் 'நிர்மாணம்' என்று கூடப் பெயரிடலாம்.

நாடு பூராவும் உள்ள மக்களின் உணர்ச்சிகளும், செயல் துடிப்புகளும் வீணாகக் கூடாது என்று உணர்ந்தால் இன்றைய நிலையில் நம்முன்னுள்ள ஒரே வழி சமுதாய முன்னேற்றத்திற்கு அவற்றைப் பயன்படுத்துவதுதான். முதலில், தேர்ந்தெடுக்கப்படும் சில நிலைகளில் உள்ள மக்கள் தம் மனோ வலிமை, அறிவாற்றல் ஆகியவற்றை அவர்களின் சுயநல உணர்ச்சி அடிப்படையில் தோன்றும் உணர்வுகளை சமுதாய நலத்திற்காக முடுக்கிவிட்டு பயனை அடைவதுதான் சமுதாயத்திற்குச் செய்யும் நன்மையாகும். இரண்டு விதங்களில் மக்களின் சக்தியை சமுதாய வளர்ச்சிக்குப் பயன்படுத்தி, சமுதாயம் உயர வழிவகை செய்யலாம். முதலாவதாக, சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டுள்ள மக்களிடம் மறைந்து கிடக்கும் சமுதாய உணர்வுகளையும், சக்திகளையும் வெளிக்கொணர நடவடிக்கையை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். இதை சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் செய்ய வேண்டும். இரண்டாவதாக, நம் மக்களிடம் மறைந்து கிடக்கும் உழைப்பினை உயரப்படுத்தி செயலாக்க வேண்டும். இது இளைஞர் பணி. இவற்றை அனைத்து மட்ட மக்களும் உணருமாறு செய்தல் வேண்டும். அப்போதுதான் உழைப்பும், உணர்வும் திரண்டு ஒருங்கே கிட்டி சமுதாயம் வளர்ந்து உயர்ந்து நிற்கும்.

சமூக அடிப்படையில் பலவித மாறுபாடுகள் இருந்தாலும் சமுதாயம் என்ற உணர்வினிலே ஏற்ற தாழ்வுகள்; ஏழை பணக்காரன் என்ற உணர்வு; கற்றவன் கல்லாதவன் என்ற எண்ணம் இவை அறவே இருத்தல் கூடாது. சமுதாயம் என்று சொன்னால், அது முன்னேற்றம் அடைந்து உயர்வடையவேண்டும் என்ற ஒரே எண்ணம் மட்டும்தான் அனைவர் மனத்திலும் மாருமல், மறையாமல், மங்காமல், மலியாமல் இருத்

தல் வேண்டும். அப்போதுதான் சமுதாயப் பணி செவ்வனே நடைபெறும்.

வறட்டுச் சித்தாந்த ரீதியிலான வழியில் செல்லுவதையே வற்புறுத்தியும், சிலாகித்தும் சிலர், சில சமயங்களில் அபிப்பிராயம் கூறிக்கொண்டே இருப்பதையும் நாம் பார்க்கிறோம். அவர்களின் வாதங்களுக்கு அழுத்தமான முக்கியத்துவம் தராமலும், அவற்றை அப்படியே முழுவதும் ஒதுக்கியும் விடாமலும் நாம் சில வேளைகளில் விட்டுக்கொடுத்தும்கூட சமுதாய வளர்ச்சியினைச் செயல்படுத்த வேண்டியுள்ளது. இந்த மாதிரி நேரங்களில், இந்த மாதிரி மனிதர்களிடம் உள்ள சித்தாந்த ரீதியிலான வறட்டுப் பிடிவாதத்திற்கு முழுவதும் இடம் தந்து விடாமலும், தருவது போலவும் நமது காரியத்தை ஆற்றிட வேண்டும். இதனால் சமுதாய வளர்ச்சியில் தோய்வு சிறிதும் ஏற்பட்டு விடக் கூடாது.

''எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

என்றார் வள்ளுவப் பெருந்தகை. அதற்கேற்ப யார் யார் வழிவகை கூறுகிறார்களோ அவர்கள் கூறுவனவற்றில் சமுதாயம் மேலும் மேலும் வளர, உயர்வு பெறத் தேவையான உண்மைப் பொருள் தெரிந்து அவற்றை அள்ளி எடுத்து, மலர் மாலையாகத் தொடுத்து அழகு மிளர்ந்திடச் செய்தல் தான் சமுதாய வளர்ச்சிக்கு நாம் செய்யும் இன்றி அமையாத கடமையாகும். இது சமுதாய உணர்வால் தோன்றிய கடமையாகும்.

''சாதிகள் இல்லையடி பாப்பா, சமயச் சண்டைகள் ஒழித்து விடல் வேண்டும்'' என்று பாடினார் மகாகவி பாரதியார். சமுதாய உணர்வை, சமுதாய வளர்ச்சியை விருப்பு, வெறுப்பின்றி சண்டை சச்சரவுக்கு வழிவகுக்காமல் நாமும் வளர்ந்து, சமுதாயமும் உயர்ந்திட உழைத்திட வேண்டும். அப்போது தான் சமுதாயம் என்ற உணர்வு வளர்ந்து, சமுதாயமும் உயர்வு பெற்று நாமும் பெருமையும், பெருமிதமும் கொண்டு சரித்திரம் படைக்கலாம்.

வாழ்க சமுதாயம்! வளர்க சமுதாய உணர்வு!!

இளைய தலைமுறைக்கு ஒரு மடல்

திரு. சி. காந்திதாஸ், எம். ஏ., பி. எல். வழக்கறிஞர்
(தலைவர் மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம், மதுரை)

அன்புள்ள தம்பி, தங்கைக்கு,

உங்கள் ஒவ்வொருவருடனும் நேரிடையாகப் பேச வேண்டும், என் மனதில் உள்ளவற்றை வெளிப்படையாக கூறி விட வேண்டும் என்ற எனது நீண்ட நாள் ஆசையை 'பொன்விழா' மலரில், இந்த மடல் மூலமாகப் பூர்த்தி செய்து கொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்கு உள்ளமெல்லாம் பூரிப்பு அடைகிறேன்.

உற்றார், உறவினர்களுக்கு எழுதும் மடல்கள் அன்பை காட்ட, பாசத்தை வளர்க்க, உறவை வலுப்படுத்த பயன்படும்.

இந்த மடல் நம்மவரிடையே 'இன உணர்வை' உண்டாக்கவும், நம்மவரிடம் காணப்படும் கருத்து வேறுபாடுகள், கட்சி வேறுபாடுகள், உட் பூசல்கள், சுயநலத்தின் காரணமாக மன வேற்றுமைகள், போட்டி, பொறாமை இவைகளை அறவே ஒழித்து, நம் சமூகத்தார் ஒற்றுமையுடன் செயல்பட்டு, கல்வி, பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகளில் உயர்ந்திட வழி கோலும் என்ற உணர்வுடன் இந்த மடலை எழுதுகின்றேன்.

''நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்று கேட்டுக் கொள். நாடு உனக்கு என்ன செய்தது'' - செய்யும் என்று கேளாதே - என்றார் கென்னடி. நீங்களும் அறிவீர்கள்.

''நம் சமூகப் பெரியவர்கள், மூத்த தலைமுறையினர் எங்களுக்கு என்ன செய்தீர்கள்'' என்று நீங்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். இதுவரை நாம் நம் இனத்திற்கு, சமூகத்திற்கு என்ன செய்திருக்கிறோம், என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து நீங்கள் செயல்பட வேண்டிய காலம் வந்து விட்டது.

மற்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் அரசு தருகின்ற அனைத்துச் சலுகைகளையும் பெற்றுக் கொண்டு போட்டி போட்டுக் கொண்டு முன்னேற்றம் பெற்று வரும் காலம் இது. இந்தச் சமயம் நாமும் அவர்களை விடச் சிறப்பாக முன்னேற்றம் காண இயலாவிடினும், அவர்களுக்கு இணையாகவாகிலும் வருதல் வேண்டும். இது நல்ல சமயம். பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு பல சலுகைகள் இருந்து வருகின்றன. நாளை என்ன ஆகும் என்று நாமறியோம். எனவே

வாய்ப்பு உள்ள போது நாம் பயன் படுத்தத் தவறினல் நமது சமூகத்தினர் சகல துறைகளிலும் அனுதைகளாக ஆக நேரிடும் என்பதனை மன வேதனை யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்குந்தர் சமூகம் மிகப் பழமை யானது. வரலாற்று சிறப்புப்பெற்றது. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் கல்வி, கேள்வி, நாகரீகம், ஒழுக்கம், செல்வம், கொடை, வீரம் முதலியவற்றில் மேம்பாடு அடைந்து இருந்த ஒன்று ஆகும்.

இராசராசன் காலத்தில் பெரும் பான்மையோர், சிற்றரசர்களாகவும், குறு நில மன்னர்களாகவும், அமைச்சர் களாகவும் சேனைத் தலைவர்களாகவும், போர் செய்யும் வீரர்களாகவும் இருந்து வந்திருக்கின்றனர். சோழமன்னனது மெய்க் காவற்படை வீரர்களின் பெயரே கைக்கோளர்கள் ஆகும்.

செங்குந்தர் குலக் கொழுந்துகளே! செந்தமிழ் உள்ளவரை, தமிழினம் இருக்கின்ற வரை நமது இனப் பெருமை இருந்தே தீரும்.

நம் முன்னேர்களின் பெருமையை மட்டும் பேசி என்ன பயன்? ஊரும், உலகமும் நம் இனத்தின் இளந்தலை முறையினர் செய்து வரும் ஆக்கப் பணிகள் குறித்து பெருமையுடன் பேச வேண்டாமா?

நாம் நம் சமூக வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நீங்கள் ஆக்க ரீதியாக அமைதியுடனும், அசையாத உறுதியுடனும் செயல்படுவதைக் கண்டு என் உள்ளமெல்லாம் பூரிக்க வேண்டும். ஆனந்தக் கண்ணீர் குற்ருல அருவியெனக் கொட்ட வேண்டும் என்பது என் ஆசை. இதை நிறைவேற்றுவீர்கள் என்ற உறுதி யான நம்பிக்கையுடன் இந்த மடலைத் தொடருகின்றேன்.

நாங்கள் நம் சமூகத்திற்கு என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று துடிப்புடன் பல கேள் விகளை நீங்கள் தொடுப்பது என் காதுகளில் விழாமலில்லை. எனக்குத் தெரிந்த அளவில் அவைகளுக்கு பதில் தருகின்றேன்.

ஆக்கப்பணிகள் செய்வீர்

ஜாதி ஒழிய வேண்டும். மறுப்பதற் கில்லை. இன்றுள்ள அரசியல் போக்கைப் பார்த்தால் ஜாதிஒழியாது. அனைத்துச் சமூகங்களும் கல்வி, பொருளாதாரம், சமூகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சமநிலை அடையும் வரை ஜாதிகள் இருந்தே தீரும்.

மனிதனுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளில் ஒன்று உடை. கைத் தொழிலில் நம் சமூகத்தினர் பெரும் பான்மையினர் ஈடுபட்டுள்ளனர். நம் சமூகம் வலுவுள்ள சமூகம். ஆளும் கட்சியினர், எவராயினும் அவர்கள் உணரும்படி செய்தல் வேண்டும்.

நம்மவர்கள் வாழும் பகுதிகளில் கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தி மாவட்டந் தோறும் மாவட்ட சங்கங்கள் நிறுவி, சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபட

வேண்டும். சங்கங்கள், பல துறைகளில் இருக்கும் நம்மவர்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தரும்.

பத்திரிக்கைகள், கட்டுரைகள், பிரச்சாரங்கள், கலை நிகழ்ச்சிகள் இன ஒற்றுமை ஏற்பட சிறந்த சாதனங்கள்.

பிறருடைய கருத்துக்கு மதிப்பு தந்து, தவறுகளை ஒத்துக்கொண்டு, தன்னை திருத்திக் கொண்டு, எதிர்ப்புக்கும், ஏளனத்திற்கும் அஞ்சாமல், உணர்ச்சி வசப்படாமல், தன்னம்பிக்கையுடன், ஓய்வு நேரத்தைக் குறைத்துக் கொண்டு, உழைக்கும் நேரத்தை விரிவாக்கிக் கொண்டு சமுதாயப் பணி செய்ய வேண்டும்.

தன்னிச்சையாக எதையும் செய்யக் கூடாது. பலரையும் கலந்து செய்ய வேண்டும். எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணமே வரக்கூடாது.

சமுதாய சேவை என்பது வேதனை நிறைந்த சுமை. சோற்றிலே கல் கிடந்தது என்பதற்காக சாப்பிடுவதை நிறுத்த முடியுமா?

"குடி செய்வார்க்கு இல்லைபருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்"
— வள்ளுவர் வாக்கு

இன உயர்வைக் கருதி உழைத்திடுவோர் சோம்பல் கொண்டு அயர்ந்து விட்டாலும், தம் மீது பகைவர்கள் வீசிடும் இழி சொற்கள், பழிமொழிகள் ஆகியவற்ருல் தனது மானத்திற்கு ஊறு வந்து விட்டதே என்று கவலைப்பட்டாலும், அவர்களது குறிக் கோளான இன உயர்வை ஏற்படுத்திட இயலாமற் போய் விடும் என்று உறுதியிட்டுக் கூறுகிறது குறள்.

உயிரினும் உயர்ந்தது மானம் எனக் குறிப்பிட்ட வள்ளுவர், அந்த மானத்தைப் பற்றிக் கூடக் கவலை கொள்ளாமல் இன உயர்வுக்கு உழைத்திட வேண்டும், இல்லையேல் இன முன்னேற்றம் கெட்டொழியும் எனக் கூறுகிருர்.

தேச முன்னேற்றமும், சமூக முன்னேற்றமும் இளைய தலை முறையினரைப் பொறுத்தது.

நியாயமான, நேர்மையான வழியில் நடக்க வேண்டும். உண்மையும், நியாயமும் என்றும் வெல்லும்.

கசடறக்கற்பீர்!

நம்மவர்கள் அனைவரும் நன்கு படிக்க வேண்டும். பெண்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும். ஆண்கல்வி, தனிப்பட்டமுதலாளிக்கோ அல்லது சர்க்கார் இலாக்காவுக்கோ பயன்படுகிறது. பெண் கல்வி நல்ல முதலீடு. நல்ல குடும்பத்தை, நன்மக்களை உருவாக்க நமது இன மகளிர் உயர்கல்வி பெற்றே தீர வேண்டும். நல்ல குடும்பம் ஒரு சிறந்த பல்கலைக்கழகம்.

செங்குந்தர் சமூகம் கல்வியில் மிக பின்தங்கிய சமூகம். ஏழை எளிய செங்குந்த மாணவர்கள் கல்வி பயில உதவும் பொருட்டு, கல்வி நிதி ஏற்படுத்துதல் மிக முக்கியம்.

நம்மவர்களுக்கென்று கல்வி ஸ்தாபனங்கள் நிறுவ முயற்சி செய்ய வேண்டும்.

படித்த பிறகு தன்னுடைய பழைய நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

வயது முதிர்ந்தவர்களுக்கு இரவுப் பள்ளிகள் அமைத்துத்தர வேண்டும்.

கைத்தொழில் கல்வி கற்க வேண்டும். கைத்தறி, விசைத் தறியுடன் நின்று விடாமல் 'டெக்ஸ்டைல் டெக்னலஜி' பயின்று அறிவியல் முறைப்படி இனத் தொழிலை வளர்ச்சியடையச் செய்திடல் வேண்டும்.

நிலம் நிறைய உள்ளவர்கள் விவசாயக் கல்லூரிகளில் சேர்ந்து பயின்று, கற்றுவந்ததை வீணாக்காமல் நல்ல முறையில் பயன்படுத்தி 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்ற வள்ளுவர் பெருந்தகையின் வார்த்தைகளை மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

சுற்றம் போற்றுவீர்!

மருத்துவ மேதைகள், அறிவியல் நிபுணர்கள் நம் இனத்தில் நிறைய தோன்ற வேண்டும். பொறியியல் வல்லுனர்கள் தொழில் பேட்டைகள் நிறுவி நம் இன இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற வழி வகைகள் செய்திடல் வேண்டும்.

வேலை பெற்றவர்கள் தங்களது திறமை முழுவதையும், கவனம் முழுவதையும், வேலையில் செலுத்த வேண்டும். ''பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினர்'' என்கின்ற பாடல் வரிகள் நினைவிருக்கட்டும். தாங்களும் வாழ்ந்து, வேலை கொடுத்தோரையும் வாழ வைத்தல் வேண்டும். நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும். அப்போது எல்லோரது இல்லங்களிலும் இன்பம் பெருகும். ஆனந்தம் பொங்கி வழியும்.

உழைப்பால் உயர்வீர்!

வாழ்வில் முன்னேற்றம் கண்டவர்கள், வரலாறு படைத்தவர்கள், வெற்றி பெற்றவர்கள் இவர்களது சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், அவர்களுடைய வெற்றிக்கு அடிப்படையாக இருப்பது உழைப்பு, கடும் உழைப்பு, அயராத உழைப்பு என்பது தெரியும்.

உழைப்பால் உயர்ந்தவர்கள் எல்லா நாடுகளிலும் உள்ளார்கள். 'From Log Cabin to White House' காட்டில் மர வீட்டில் பிறந்த ஆபிரகாம் லிங்கன் வெள்ளை மாளிகையில் அமெரிக்க நாட்டின் தலைவராய் அமர்ந்தார். அந்த முன்னேற்றத்தை அவருக்குப் பெற்றுத்தந்தது அவருடைய ஓயாத உழைப்பு. உழைப்பு ஒன்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டு முன்னேறியவர்கள் பட்டியல் நம்மவர்களின் பெயர்கள் அதிகமாக இடம் பெற வேண்டும். நமது இனக் கொழுந்துகள் துளிர் விட்டு வளர்ந்து ஆல் போலச் செழித்து குன்றுப் புகழடைதல் வேண்டும்.

பட்டியல் தாயரிப்பீர்!

சமூகத்தில் மக்கள் தொகை கணக்கு எடுக்கப்படவேண்டும். சரியான கணக்கு இருந்தால்தான் அந்த அளவிற்கேற்ப அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகிய துறைகளில் நம் உரிய பங்கினை அரசிடம் கேட்டுப் பெற முடியும்,

நம்மவர்களின் அரசாங்க அலுவலர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுனர்கள்,

புலவர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியவர்களின் பட்டியல்களும், நம்மவர்கள் அமைந்திருக்கும் வர்த்தகர்கள் சங்கங்களின் பட்டியலும் தயாரிக்கப்பட வேண்டும்,

செங்குந்தர் சமூகத்தைப் பற்றி புராணம், சரித்திரம் இவற்றை ஆதாரமாகக் கொண்ட குறிப்புகள் சேகரிக்க வேண்டும்.

குறள் வழி நிற்பீர்!

அக நானூறுதனை ஆழ்ந்து படித்து, புறநானூற்றுப் பாடல்களைப் புரட்டிப் பார்த்து, திருக்குறள்தனை தெள்ளத் தெளிவாய்க் கற்றுணர்ந்து, பாரதியார் பாரதிதாசன் கவிதைகளில் காதல் கொண்டு இலக்கியம் படியுங்கள். அவை உங்கள் வாழ்வின் வெற்றிக்கு வழி வகுக்கும். 'குறள் வழி வாழ்க' என நம் இனச் செல்வங்களை உளமார வாழ்த்துகிறேன்.

பாரதியார் பாடிய 'ஒளி படைத்த கண்களையும், உறுதி கொண்ட நெஞ்சங்களையும்' உடைய அடலேறுகளாய் நமது இன இளைஞர்கள் மாறட்டும். அவர் கூறிய புதுமை பெண்களாய், புரட்சி சிங்கங்களாய் நமது தங்க மகளிர் மலரட்டும். ''நாய் என்று பெண்ணை நவில்வோர்க்கு இப்புவிக்குத் தாய் என்று காட்ட தமிழருக்கு வாய்த்தவளே'' என்று பாரதிதாசன் பாடிச் சென்றுரே, அது போல நமது தாய்க் குலம் உயரட்டும். பள்ளந்தனில் விழும் பிள்ளைப்பூச்சியாய், ஊமையாய், ஆமையாய் இராது நரம்பெல்லாம் இரும்பாக, விழிக்கின்ற விழியில் மேதினிக்கு ஒளி தருபவர்களாக நமது கண்மணிகள் மாறட்டும்.

அன்புச் செல்வங்களே!

எண்ணங்கள் எழுத்தாகி விட்டன. செயல்பட்டால் அனைவரும் பெருமகிழ் வெய்துவர். உறக்கத்தை மறந்து உழைப்பில் உயர்ந்தால் நாடு முன்னேறும், சமூகம் முன்னேறும், நாமும் முன்னேறுவோம் என்பது திண்ணம்.

அன்புள்ள

சி. காந்திதாஸ்

தீயினில் பாய்ந்த தெய்வம்

கா. அ. ச. ரகுநாயகன்

திருப்பத்தூர் நகரில் ஐந்து அல்லது ஆறு தலைமுறைக்கு முன்னர் நடை பெற்றதாகக் கூறப்படும் ஒரு வரலாறு இது செவி வழிச் செய்தி; ஏட்டில் எங்கும் இடம் பெறக் காணோம்.

செங்குந்தர் குலத்து இளைஞன் ஒருவனும் நாயுடு இனத்து இளைஞன் ஒருவனும் உயிர்த் தோழர்களாய் இருந்தனர்.

ஒரு நாள் இருவரும் வெளியூர்க்குப் புறப்பட்டுச் சென்றனர். வழியில் சிற்றோடை ஒன்று குறுக்கிட்டது. நீரில் இறங்கி அதனைக் கடந்து செல்லலாம். அவ்வாறு செல்ல அந்தக் கட்டிளங்காளைகளுக்கு மனம் இல்லை. இளமைத் துடிப்புள்ள அவர்கள் அந்த ஓடையைத் தாவிக் கடக்க வேண்டுமென எண்ணினார்கள்.

ஓடை சிறியதுதான்; ஆயினும் தாவிக் கடக்கும் அளவில் அவ்வளவு குறுகியதாக இல்லை.

''இதனை நான் தாவியே கடப்பேன் நான் வெற்றிபெற்றால் எனக்கு என்ன பரிசு தருவாய்?'' என்று நண்பனிடம் கேட்டான் நாயுடு இளைஞன்.

''நீ இவ்வோடையைத் தாவிக் கடந்துவிட்டால், என் தங்கையை உனக்கு மணம் செய்து கொடுப்பேன்; நானும் உன்னைப் போலவே தாவி விட்டால் நீ கொடுக்கும் பரிசு என்ன'' என்று பதிலுக்குக் கேட்டான் குந்தர் குலக் குமரன்.

''எனக்கும் ஒரு தங்கை இருக்கின்றாளே!'' என்று புன்முறுவல் செய்தான் நாயுடு குல நம்பி.

விளையாட்டாக விளைந்த பேச்சு இது. இருவருக்கும் தங்கையர் உண்டு. இருவருமே அழகிகள்.

நாயுடு வீரன் தாவினான்; வெற்றி பெற்றான் செங்குந்த இளைஞன் தாவினான்; வீழ்ந்தான்.

தான் வாக்களித்தது போல் தன் தங்கையை நண்பனுக்கு மணம் முடிக்க மகிழ்ச்சியுடன் உடன்பட்டான் அந்தச் செங்குந்தர் செம்மல்.

நண்பர்கள் இருவரும் தங்கள் பயணத்தை முடித்து ஊர் திரும்பினர். வழியில் நடந்த நிகழ்ச்சிகளைச் செங்குந்த மைந்தன் தன் பெற்றோர்க்கு உரைத்தான்.

மகன் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது தம் கடமை என்பதைப் பெற்றோரும் உணர்ந்தனர். தம் அருமை மகளை நாயுடு குல நம்பிக்கு மணம் செய்து கொடுத்தனர்.

திருமணம் முடிந்தவுடனே, படையில் சேர்ந்து பாசறை செல்லும்

கடமை ஏற்பட்டது மணமகன் நாயுடு மைந்தனுக்கு, நாடு காவல் பணியில் தயக்கம் கூடாதன்ரே! உற்ருர் உறவினரிடமும், தன் அன்பு மனைவியிடமும் விடைபெற்றுப் புறப்பட்டான் வீரன்.

கணவன் பிரிந்து சென்ற பின்னர், சின்ஞள் கழித்து அந்தச் சிறுமி மலர்ந்து மங்கையானுள். போருக்குச் சென்ற தன் கணவன் மீண்டு வந்து தாம் இருவருமாக இல்வாழ்க்கை நடத்தும் இனிய நன்னுளை எண்ணிக் காத்திருந்தாள் இளம் மனைவி.

அவன் திரும்பி வரவில்லை. ஆண்டுகள் சில கழிந்தன அவனைப் பற்றிய செய்தி ஏதும் எட்டவில்லை. போரில் அவன் மடிந்திருப்பானே என்று சிலர் ஐயுற்றனர். 'ஆம், ஆம் அப்படித்தான் இருக்கும்' என்று பிதற்றினர் பிறர் நோயறியா பேதையர் சிலர்.

இந்தக் கூற்றை ஏற்க மறுத்தது கன்னியின் உள்ளம். ஆயினும் அவர்கள் முன்னே தனியளாய் வாழவும் விரும்பவில்லை அந்தப் பூங்கொடி.

தீயினை வளர்த்து அதனைத் தழுவித் தன் வாழ்வை முடித்துக் கொள்வதாக அறிவித்தாள் அந்த மறக்குலத்து மங்கை. அவளை எவரும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

பொது மன்றத்தில் தீ வளர்ந்தது. பெற்ருேரும் மற்ருேரும் காண, உற்ருரும் உறவினரும் சூழ அந்தக் கன்னிப் பெண் மஞ்சள் ஆடையை அணிந்து தீயினில் பாய்ந்தாள்; வெந்து சாம்பல் ஆனுள்.

அப்போது அவள் கணவன் அங்கு வந்து சேர்ந்தான், போர் முனைக் கோலத்தோடு குதிரைமேல் ஏறி விரைந்து வந்தான் அந்த வீரன்.

நிகழ்ந்தவற்றைச் சொல்லி ஊரார் அழுதார்கள், பெற்ருேர்கள் கதறினுர்கள்.

அவற்றைக் கேட்ட இளைஞன் துக்கத்தில் துடித்தான். மனைவியின் பெருமையினையும், அந்த மாசறு பொன்னுடன் தான் இணைந்து வாழ முடியாமற் செய்த ஊழ்வினையையும் எண்ணிப் புலம்பினுன். வாழ்வு அவனுக்குக் கசந்தது; அதனை வெறுத்தான். தானும் தன் குதிரையோடு அந்தத் தீயினில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.

கொழுந்து விட்டு எரிந்த தீ அடங்கிய பின், அந்த இடத்தில் மாண்டவரின் எலும்பும் காணவில்லை.

ஆயினும் அந்தக் கன்னிப் பெண் உடுத்தியிருந்த மஞ்சள் ஆடையின் ஒரு பகுதி-இடுப்பில் நிற்கும் கொசுவம் கையில் அணிந்திருந்த கரி வளையல், மடியில் வைத்திருந்த மரச்சீப்பு ஆகிய இவை மட்டும் எரியவில்லை.

இதனைக் கண்ட மக்கள் வியந்தார்கள்; தீயினில் பாய்ந்த பெண்ணைத் 'தெய்வமே' என்று தொழுதார்கள். மடிப்புக் கலையாதிருந்த மஞ்சள் கொசுவத்தையும், கரி வளையலையும், மரச்சீப்பையும் அந்தத் தெய்வத்தின் சின்னம் என்று போற்றினுர்கள்.

தீயினில் பாய்ந்த அம்மனை அக்குடும்பத்தினர் தம் குல தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். மஞ்சள் கொசுவமும், கரி வளையும் மரச்சீப்பும் இன்றும் இருந்து வருகின்றன. அவற்றை ஓர் ஓலைப்பெட்டியில் வைத்

திருக்கின்றனர்; கன்னிப் பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் அவற்றை வழிபடுகின்றனர்.

தீப்பாய்ந்த அம்மனுக்கு இந்த நகரில் தனியே கோயில் இருக்கிறது. ஊரின் வட எல்லையில், சாலை ஓரத்தில் இக்கோயில் இரு பகுதியாக அமைந்துள்ளது—இரு சிறு கோயில்கள்; கோயிலின் அமைப்பே அதன் பழமையைக் காட்டுகிறது.

ஒரு கோயிலில், தீப்பாய்ந்த அம்மனுடைய உருவம் கற்சிலையாக வடிக்கப்பட்டுள்ளது; மற்றொன்றில் குதிரைமேல் அமர்ந்துள்ள வீரனின் உருவம் சிலையாக உள்ளது.

ஆண்டுதோறும் தை மாதத்தில் ஒரு வெள்ளிக்கிழமையில் அந்தக் குடும்பத்தினர் தாரை, பம்பை உடுக்கை போன்ற வாத்திய முழக்கத்துடன் இந்தக் கோயிலுக்குச் சென்று விழா எடுத்து வழிபடுகின்றனர்; பொங்கல் வைத்துப் பூசிக்கின்றனர். செங்குந்தர் குல மக்கள் எல்லோரும் விழாவில் கலந்து கொள்கின்றனர்.

தன்னை வேண்டி வழிபட்டுக் குறை இருப்பவர்களுக்குத் தீப்பாய்ந்த அம்மன் வரம் தந்து அருள் பாவிக்கின்றாள்.

With Best Compliments from :-

V. S. வீரபத்திர முதலியார் & சன்ஸ்,
V. S. VEERABADHRA MUDALIAR & SONS,
GENERAL MERCHANTS
TIRUPATTUR. (N. A.) 635602.

சுப்புலாபுரம்

இந்து செங்குந்தர் அபிவிருத்தி சங்க தோற்றுவாயும் வளர்ச்சியும்.

சுப்புலாபுரம் இந்து செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் 1971ம் ஆண்டு ஜனவரி மீ" 25 அங்கத்தினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டது. இச் சங்கத்தின் முக்கியமான குறிக்கோள் 1. இந்து செங்குந்தர் கல்வி அபிவிருத்தி. 2. சமுதாய சீர்திருத்தம். ஆகியவையாகும். இச்சங்கத்தின் முயற்சியின் பேரில் ரூ. 20000 - பெருமான இந்து செங்குந்தர் பொதுக் கட்டிடம் ஒன்று வாங்கப் பட்டது. சங்கத்தின் பெரு முயற்ச்சியின் காரணமாக இந்து செங்குந்தர் மாணவர்களின் கல்வி நலனுக்காக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கொண்டு வரப்பட்டது.

ஆண்டு தோறும் செங்குந்தர் சங்க ஆண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வமயம் 1 முதல் 5 வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு சிலேட்டு புத்தகங்கள் வழங்குவதோடு கல்வி இறுதியாண்டுகளில் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப் படுகிறது. இந்து செங்குந்தர் வாலிபர்களுக்கு ஆண்டு தோறும் விளையாட்டு போட்டிகள் வைத்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

சங்கத்தின் முயற்சியால் T.N.H.57 தொழிலியல் கூட்டுறவு நெசவாளர் சங்கமும், T.N.H.48 காந்திஜி நெசவாளர் கூட்டுறவு சங்கமும் தொடங்கப்பட்டு வருகிறது. தற்போது இச்சங்கம் 160 அங்கத்தினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இந்து செங்குந்தர் சமுதாய முன்னேற்றத்திற்கு இச்சங்கம் எந்த நேரத்திலும் பணிபுரிய காத்துக் கொண்டிருக்கிறது.

பருத்திச் செடியிலிருந்து பஞ்சு உதிர்கிறது. அந்தப் பஞ்சிலிருந்து கொட்டை எடுத்து, நூலாக நூற்று, தறியில் கொடுத்துத் துணியாக நெய்து உடுத்திக் கொள்கிறோம். பஞ்சுதானே துணியாயிற்று. அதனால் துணியைப் பஞ்சு என்று சொல்லுகிறோமா? இல்லையே! அதைப் போலவே எங்கோ வெறும் பாறையாக எடுத்து வந்து பக்தி சிரத்தையுடன் சிற்பி சிலையாக வடித்து பல மந்திரங்கள் ஓதிக் கோயிலில் பிரதிஸ்டை செய்திருக்கிறது. அப்படிப் பிரதிஸ்டை செய்யப்பட்ட திருவுருவை அர்ச்சித்து, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றித் துதித்து வணங்கி வந்திருக்கும் போது அதைப் பழைய கல்லாக எப்படிக் கருதமுடியும் முருகனைவோ, சிவலிங்கமாகவோ, ராமனைவோ தானே இருக்க முடியும்? இதைக் கல் என்றால் இனி நீ உடுத்தியிருக்கும் துணியை துணி என்று சொல்லாதே. பஞ்சு என்றே சொல்லு!

— திருமுருக கிருபானந்த வாரியார்

முதலியார் கல்வி நிறுவனம்.

ஈரோடு கலைக் கல்லூரி

ஈ ரோ டு

ஈரோடு முதலியார் கல்வி நிறுவன நிர்வாக உறுப்பினர்கள்

திரு. R. A. N. முத்துசாமி முதலியார்



திரு. P. K. நஞ்சப்ப முதலியார்

திரு. A. பெருமாள் முதலியார்



திரு. S. N. பழனியப்ப முதலியார்

ஈரோடு முதலியார் கல்வி நிறுவன நிர்வாக உறுப்பினர்கள்



திரு. மயிலோன் A. ஆறுமுகம்

திரு. C. K. சிவசுப்பிரமணியம்

திரு. A. முனுசாமி



திரு. S. வையாபுரி

ஈரோடு முதலியார் கல்வி நிறுவன நிர்வாக உறுப்பினர்கள்

திரு. K. V. இலட்சுமணன், B. Com.,

திரு. P. P. சதாசிவம்.



திரு. T. R. சாமிநாத முதலியார்

திரு. G. K. நாராயணன்

முதலியார் கல்வி நிறுவனம் நடத்தும் கல்விச் சாலைகள்

A. முனுசாமி,
(பொருளாளர்)
முதலியார் கல்வி நிறுவனம்.

விரைவாக வளர்ந்து வரும் ஈரோடு நகரிலும் ஈரோட்டைச் சார்ந்துள்ள சிற்றூர்களிலும் வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி நலனுக்காகத் தோன்றியது முதலியார் கல்வி நிறுவனம் (Mudaliar Education Trust) ஆகும்.

சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறி ஆடைகளை நெய்யும் நெசவாளர் பெருமக்களில் நிதிகுறைந்தவர்களின் காசுகளையும், நிதிமிகுந்தவர்களின் பொற்குவைகளையும் பெற்று முதலியார் கல்வி நிறுவனம் ஈரோடு நகரில் 1971-ம் ஆண்டு அமைக்கப் பெற்றது.

சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் (அப்போது துணைப் பதிவாளர்) திரு C. K. குமாரசாமி அவர்கள் முதலியார் கல்வி நிறுவன அமைப்பிற்கு மூலகாரணராயிருந்தார். அவருடைய அரும் பெரும் செல்வாக்கினால் திரு C. B. கந்தசாமி முதலியார் ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடையளிப்பதாக வாக்களித்தார். அதை முதலாகக் கொண்டு நன்கொடை வசூல் தொடங்கியது. பத்து இலட்ச ரூபாய் நிதி திரண்டது. பத்தாயிரம், ஐயாயிரம் இரண்டாயிரத்து ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் என்று நானூறு பேர் வாக்களித்தார்கள். மூன்று கலைநிகழ்ச்சிகள் மூலம் மூன்றரை இலட்ச ரூபாய் சேர்ந்தது.

ஈரோடு முதலியார் கல்வி நிறுவன சேமிப்பு நிதி என்னும் பெயரில் A, B, பிரிவு (குரூப்) வரிசையில் நடைபெற்ற சீட்டின் மூலம் கிடைத்த பெருந்தொகையும் நிறுவனத்திற்குக் கிடைத்தது.

முதலியார் கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிக்காகத் தங்கள் வள்ளன்மையினால் இருபத்தையாயிரமும் அதற்கு மேலும் கொடுத்துள்ள பெருந்தகையாளர்கள் திருவாளர்கள் R. A. N. முத்துசாமி முதலியார், V. அர்த்தனரி முதலியார், S. வையாபுரி முதலியார், R. A. N. அங்கப்ப முதலியார், பிரபாத் J. K. நாராயணன் + J. K.

சிங்காரவேலு, T. R. சுவாமிநாத முதலியார், K முத்துசாமி முதலியார். S. K. சின்னைய முதலியார், P. செங்கோட முதலியார், A. V. R. M. வேலாயுத முதலியார், + A.V R.MV. சங்கரநாராயணன் ஆகியோராவர்

முதலியார் கல்வி நிறுவனம், **ஈரோடு கலைக் கல்லூரியையும், ஈரோடு தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்தையும்** நடத்தி வருகின்றது **ஈரோடு கலைக் கல்லூரி.**

எலத்தூர் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த மறைந்த பெரியார் திரு C. P கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில், சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தாமரைத் திரு .நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கல்லூரிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

முதலியார் கல்வி நிறுவனத்தாரின் அயரா உழைப்பினாலும் இடையரு முயற்சியாலும் ஆறுமாத காலத்திற்குள் கல்லூரிக் கட்டடம் கட்டி முடிக்கப்பெற்று 12-7-72 முதல் கல்லூரி சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

ஈரோடு இரயில் நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவில் சென்னிமலை ரோடில் கவினுறு கல்லூரிக் கட்டடம் காட்சியளிக்கின்றது.

கல்லூரிக்கு முன்னால் சல சலக்கும் நீரோடை, அதையொட்டி விளங்கும் அழகான தோட்டம்! தோட்டத்தில் வரிசையாய்ப் பரவி நிற்கும் பாதாம் மரங்களின் பாங்கான தோற்றப் பொலிவு பார்ப்பவர் மனத்தைக் கொள்ளைக் கொள்ளும்! பின்பக்கம் நீண்டு பரந்து பச்சைப் பசேலென விளங்கும் செந்நெல் வயற்பரப்பு! இயற்கைத் தெய்வம் எழிற்கொலுவிருக்கும் இன்பச் சூழல்!

இக்கல்லூரிக்காக முதலியார் கல்வி நிறுவனத்தார் 26 ஏக்கர் நிலப்பரப்பை ரூ 1, 53, 000 க்கு வாங்கி அதிலே 7, 80, 000க்கு கட்டடங்களைக் கட்டியுள்ளார்கள். மேலும் 1, 63, 000க்கு மேஜை, நாற்காலி போன்ற மரச் சாமான்களையும், செய்முறைப் பயிற்சிச் சாலைக்காக ரூ 2, 26, 984க்கு உபகரணங்களையும், நூலகத்திற்காக ரூ. 66, 042க்கு நூல்களையும் வாங்கி இருக்கிறார்கள்.

மாணவர் விடுதி ரூ. 2,40,000 செலவில் கல்லூரிக்கு அருகிலேயே கட்டப்பட்டுள்ளது.

இக் கல்லூரி முதலாண்டிலேயே முதல்நிலைக் கல்லூரியாக, பி. ஏ. பொருளாதாரப் பட்ட வகுப்புடன் தொடங்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1973-74ம் ஆண்டில் பி. எஸ்ஸி. கணிதப் பட்ட வகுப்பும், 1975-76ம் ஆண்டில் பி. காம் பட்ட வகுப்பும், 1979-80 ம் ஆண்டில் பி. எஸ்ஸி. வேதியல், பி. எஸ்ஸி. விலங்கியல் ஆகிய பட்ட வகுப்புகளும், 1980-81ம் ஆண்டில் பி. எஸ்ஸி. பௌதிகப் பட்ட வகுப்பும், 1981-82ம் ஆண்டில் எம். காம் முதுநிலை பட்ட வகுப்பும், தொடங்கப் பெற்றுச் சீரும் சிறப்புடன் திகழ்கிற இக் கல்லூரியில் எழுநூறு மாணவர்கள் தற்போது கல்வி பயில்கின்றனர்.

கல்லூரியின் தோன்றாத் துணையாயிருந்து ஒல்லும் வகையெல்லாம் உதவி புரியும் நல்லார் சென்னைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் செம்மனச்

செம்மல் திரு. C. K. குமாரசாமி அவர்களின் நல்லிதயத்தில் கருக்கொண்ட இக்கல்லூரி, முதல்வர் பேராசிரியர் K. இராமதாஸ் அவர்களின் அரிய அரவணைப்பில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தோங்கி வருகின்றது.

கல்லூரி இலக்கினை எடுத்துக் கூறும் ஏற்றக்குறிக்கோள்கள் **அறிவு, பண்பு, ஆன்மீகம்** என்பவை ஆகும்.

கல்லூரியின் நோக்கம் இளைஞர்களின் மூளை, மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் வளர்த்தல் — சீராய் வளர்த்தல்— ஆகும். இதுவே கல்லூரியின் குறிக்கோளாக அமைந்திருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

மூளையின் வளர்ச்சியை அறிவு காட்டும்!
மனத்தின் விரிவைப் பண்பு பேசும்!
ஆன்மாவின் உயர்வை ஆன்மீகம் உணர்த்தும்!

'கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன்' என்று கூறிவிட்டால் போதுமா? எல்-லாரும் கல்வி கற்க நாம் வழி செய்ய வேண்டாவா? பிற்பட்டவர்களுக்கும் வசதிக் குறைவானவர்களுக்கும் இந்தக் கல்லூரி நல்ல சேவை-கல்விச் சேவை–செய்து வருகின்றது.

'இக் கல்லூரியின் பணி குறிப்பாகப் பின்தங்கிய இளமாணவர்களுக்குச் செய்யும் பணி பாராட்டுக்குரியதாகும்' என்று முன்னாள் தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் போற்றியுள்ளார்.

ஈரோடு தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம்

'தொழிற்சாலைகளே நான் வணங்-கும் திருக்கோயில்கள்' என்னும் நேரு பெருமானின் பொன்மொழி தொழிற் கல்வியின் மேன்மையினைப் புலப்படுத்தும். இதனை நன்குணர்ந்த முதலியார் கல்வி நிறுவனம் மாணவர்களுக்கு வெறும் பட்டப்படிப்பு மட்டும் தந்தால் போதாது என்று தொழிற் கல்விக்கும் வழி செய்தது.

முதலியார் கல்வி நிறுவனத்தின் சார்பில் ஈரோடு தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்தைத் தமிழகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் மாண்புமிகு சு. முத்துசாமி, M.A., அவர்கள் 15-9-80ஆம் நாள் தொடங்கி வைத்தார்.

முதலாண்டில் டெக்ஸ்டைல் டெக்னலஜி, டெக்ஸ்டைல் டிசைன் ஆகிய இரு வகுப்புகளில் 90 மாணவர்களுடன் தொடங்கிய இந்நிறுவனத்தில் இந்த ஆண்டு டெக்ஸ்டைல் புராசசிங், டெக்ஸ்டைல் என்ஜினியரிங் ஆகிய மேலும் இரு வகுப்புகள் தொடங்கப் பெற்று 155 மாணவர்கள் பயில்கின்றனர். முதல்வர் டாக்டர் குல்கர்னி அவர்களும் ஆசிரியர் பெருமக்களும் நிறுவனத்தைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்து வருகின்றனர். மாணவர் விடுதியில் 80 பேர் தங்கியுள்ளனர்.

இந்தத் தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம் தொடங்குவதற்குப் பெரிதும் காரணர்களாயிருந்த ஈரோடு சட்டமன்ற உறுப்பினரும் போக்குவரத்துத் துறை அமைச்சரும் ஆகிய மாண்புமிகு சு. முத்துசாமி அவர்கள், தொழிற் கல்வி இயக்குனர் திரு. S. வையாபுரி அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. C. K. குமாரசாமி ஆகியோரை நன்றிப் பெருக்கோடு முதலியார் கல்வி நிறுவனம் நினைவு கூர்கிறது.

பவானிக்கு அருகில் சூரியம்பாளை -யத்தில் ஈரோடு தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனத்தின் கட்டடத்திற் -காக 60 ஏக்கர் நிலத்தை உரிமை யாக்கிக் கொள்வதற்குத் தமிழக அரசு உறுதி தந்துள்ளது. அங்கு விரைவில் வலிவும் வண்ணப் பொலிவும் மிக்க கட்டடம் கட்டப்பெறும்.

முதலியார் கல்வி நிறுவனத்தின் தலைவர் R.A.N. முத்துசாமி முதலியார்.

துணைத்தலைவர்கள் S.N. பழனியப்ப முதலியார், C.K. சிவசுப்பிரமணியம், G.K. நாராயணன், P.K. நஞ்சப்ப முதலியார், **A.** பெருமாள் முதலியார், T.R. சுவாமிநாத முதலியார்,

தாளாளர் P.P. சதாசிவம், **செயலர்** K.V. இலட்சுமணன், **இணைச் செயலர்கள் S.** வையாபுரி முதலியார், மயிலோன் **A.** ஆறுமுகம்.

பொருளாளர் A. முனுசாமி ஆகியோர் இக்கல்விச் சாலைகளின் உயிர் நாடியாய் இருந்து கண்ணைக்- கண்ணின் மணியாய்க் — காப்பாற்றி வருகின்றார்கள்.

காடு திருத்திக் கழனியாக்கி உழுது விதைத்து உரம் கொல்லும் களை நீக்கி நீர் பாய்ச்சி நிலத்திற்குக் காவலிருந்து அறுவடைக்குச் செல்லும் உழவன், கன்னிப் பெண்களைப் போல தலை சாய்த்து நிற்கும் முற்றிய செந்நெற் கதிர்களைக் கண்டு எவ்வாறு மகிழ்ச்சி யடைவானோ அவ்வாறு மகிழ்ச்சி யடைந்து கல்விச் சாலைகளின் நலம் போற்றும் **உறுப்பினர், பெருமக்கள்,** நிர்வாகத்தினருக்குத் தோள் தந்து துணை நிற்கிறார்கள்.

முதலியார் கல்வி நிறுவனம் போன்ற பல அறநிலையங்கள் தோன்றி நம் இனத்தாரைப் போன்ற பிற்படுத்தப் பெற்ற மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் வாழ்க்கை வளத்துக்கும் தொண்டாற்ற வேண்டும் என்பதே எங்கள் அவா!

அன்புடையவர் தமது என்பையும் பிறர்க்குப் பயன்படுமாறு புரிவர் அன்புடையார் தாம் உண்மையான மனிதர். ஆசையுடையவர் மனித விலங்காவார்

— திருமுருக கிருபானந்த வாரியார்

இலங்கையில் செங்குந்தர்

இலங்கை என்னும் தீவு, தமிழ் நாட்டின் கரையிலிருந்து சுமார் 20 மைல் தொலையில் உள்ளது. சரித்திர காலத்துக்கு முன்னைய காலத்து லெமுரியாக் கண்டத்தில் ஒரு பகுதி இத் தீவு என்பது பவகற்ப ஆராய்ச்சி யாளரின் திண்மையான கருத்து. இந் நாட்டில் தமிழர்கள் வந்தேறும் குடிகள் அல்ல. கலிங்கத்திலிருந்து அரசிளங் குமாரன் விசயனும் தோழர்கள் 700 பேரும் கி. மு. 54ம் ஆண்டில் இலங்கை வந்தபோது இங்கிருந்த பழங்குடி களான இயக்கரும், நாகரும் பழந் தமிழர் மரபின் இரு இனத்தவர்களே யாகும். இவர்களின் வழித் தோன்றல் கள்தான் இன்றைய தமிழரும், சிங்கள வரும். இவர்கள்தான் இலங்கையின் ஆதிகுடிகள். இவர்கள் இராமயண காலத்து இராவணன் ஆண்ட இலங் கையின் பழங்குடிகளின் மரபினர். இன்றைய இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழர்கள் பரந்து வாழ்கின்றார்கள். இந்த இரு மாகா ணங்களிலும் தமிழர் மத்தியில் செங்குந் தர்கள் கலந்து வாழ்கின்றார்கள். வடக்கு, கிழக்கு பகுதிகளில் நம்மவர் ஏறக்குறைய பன்னிரண்டாயிரம் பேர் வரையில் வாழ்கின்றார்கள்.

இன்று நம்மவர்கள் முக்கியமாக வாழும் பகுதிகள், யாழ்ப்பாணத்தில் நல்லூர், திருநெல்வேலி, கரவெட்டி யாகும். யாழ் குடாநாட்டுக்கு வெளி யில் இலங்கையின் கிழக்குக் கரையோ ரமாக முள்ளியவளை, திருகோணமலை, மட்டக்களப்பு, ஆரையம்பதி ஆகிய பகுதிகளில் முக்கியமாக வாழ்கின்றார் கள். இப் பகுதிகள் அனைத்தும் பழந் தமிழ் மன்னர்களின் இராசதானிகளு க்கு அண்மையாகத்தான் அமைந்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நல்லூர் - திருநெல்வேலி

செங்குந்தர்கள் இலங்கையில் அடர்த்தியாக வாழும் பகுதி இதுவே ஆகும். யாழ்ப்பாண மாநகர எல்லைக் குள்ளும், பிறமும் ஆக செறிந்து வாழும் பகுதி இதுவேயாகும். கடைசி யாழ்ப் பாண தமிழ் மன்னன் சங்கிலியனின் அரசு இருக்கை நல்லூர்தான். இந்த அரசு இருக்கைப் பகுதியைச் சுற்றியே நம்மவர்கள் வாழ்கின்றார்கள். இங்கே கிட்டத்தட்ட எண்ணாயிரம் பேர் வரை யில் வாழ்கின்றார்கள். இவர்கள் மத்தி யில் செங்குந்தர் இந்துக் கல்லூரியும் (உயர் நிலைப்பள்ளி) செங்குந்தர் சந்தையும் இருக்கின்றன. தமிழ் மன்னர்கள் வழிபட்ட சட்டநாதர் சிவன் கோவிலும் இன்று இலங்கையில் புகழ் மிக்க நல்லூர்க் கந்தசாமி கோவிலும் அண்மையில் உள்ளது. இன்றும் இக்கோவிலுக்கு நம்மவர்களே திருவிழாவுக்கான கொடிச் சீலை கொடுக்கின்றார்கள்.

இப்பகுதியில் உள்ள நம்மவர்கள் பழைய காலத்தில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டார்கள். ஆனால் இன்று அனே வரும் கல்வியில் ஆர்வம் கொண்டு படித்து அரசு சேவையிலும், மருத்துவ சட்டத் தொழில்களிலும், வணிகத்திலும், முன்னேறி வருகின்றார்கள். இந் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் நம்மவர்கள் கல்வியில் அக்கறை கொண்டு பலர் சிறந்த சித்த வைத்தியர்களாகவும், சோதிடர்களாகவும், ஆசிரியர் களாகவும் திகழ்ந்தார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் செங்குந்தர்கள் மத்தியில் நாகலிங்க முனிவர், சபாபதி வள்ளல், பேராசிரியர் சண்முகசுந்தரம் முதலியார், மாணிக்கவாசகர் முதலியோர் போன்ற பெருமக்களால் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்ச்சி யாழ்ப்பாணத்திலும் எதிரொலிக்கத் தவறவில்லை. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தொடங்கப்பட்ட அதே காலத்தில் யாழ்ப்பாணத்தில் வட இலங்கை செங்குந்த மகாஜன சங்கம் தோன்றியது. அதன் முதல் தலைவராக இருந்தவர் எனது தந்தை சித்த வைத்தியர் திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம் இன்றும் எம்முடன் இருக்கின்றார். இங்கும் வெகு சிறப்பாக மகா நாடு நடத்தினார்கள். எனது தாய் வழிப் பாட்டனார் சித்த வைத்தியர் திரு. நா. இராமலிங்க முதலியார் கட்டுவித்த திருநெல்வேலி வாலை அம்மன் கோவில் முன்றலில் மூன்று நாட்கள் விழா சிறப்பாக நடை பெற்றது. தாய்ச் சங்கத்திலிருந்து விழாவுக்குப் பேராசிரியர் திரு சண்முக சுந்தர முதலியாரும், திரு. மாணிக்க வாசக முதலியாரும் (காஞ்சி மணிமொழியாரும்) வருகை தந்து எனது பெற்றோரின் இல்லத்தில் தங்கி விழாவில் பங்கெடுத்தார்கள். பின்பும் சில ஆண்டுகள் செயல்பட்ட யாழ்ப்பாணச் சங்கம் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியதுடன் வலுவிழந்து விட்டது. இப்பகுதி நம்மவர்கள் பலர் இன்று அரச சேவையிலும், தனித் தொழிலிலும் மற்றும் பிற முயற்சிகளிலும் முதனிலையில் உள்ளார்கள். அவர்களின் விபரத் தொகுப்பு தனியாகக் கொடுக்கப்படுகின்றது.

கரவெட்டி

நம்மவர்கள் யாழ்ப்பாணத்தில் செறிந்து வாழும் இன்னோர் இடம் கரவெட்டியாகும். யாழ்ப்பாணத்தை ஒரு காலத்தில் இருபிரிவாக ஆண்டார்கள். அவையாவன வடமராட்சிப்பகுதி என்றும், தென்மராட்சி பகுதி என்றும் கூறுவார்கள். இப்பகுதியில் இன்றும் வடமராட்சி, தென்மராட்சி என்ற பெயர் வழங்குகின்றன. இந்த வடமராட்சிப் பகுதியின் தலைநகர் பகுதியே கரவெட்டியாகும். அங்கு இன்றும் இருநூறு குடும்பங்கள்வரை சிறப்பாக வாழ்கிறார்கள். யாக்கரு பிள்ளையார் கோவில் அவர்களது முன்னோரால் கட்டப்பட்டு சிறப்பாக நடைபெறுகிறது. இவர்களில் தனிநிலை விபரம் பிறிதாகத் தொகுக்கப் பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் நம்மவர்கள் பலர் மீசாலை, கச்சாய் என்னும் கிராமங்களில் வாழ்கின்றார்கள். அவர்கள் குடாநாட்டில் வாழும் எம்மவர்களோடு கொண்டு கொடுத்து வாழ்கின்றார்கள்.

முள்ளியவளை

யாழ் குடாநாட்டுக்கு வெளிவே நம்மவர்கள் கூட்டமாக வாழும் இடம் முள்ளியவளையாகும். பழந்தமிழர் ஆட்சியில் இருந்த வன்னி நாட்டின் அரசர்கள் வன்னியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். கடைசி மன்னர் பண்டார வன்னியன். அவனின் இராசதானிக்கண்மையில் வாழ்ந்தவர்கள் தான் இவர்கள். நூற்றைம்பது குடும்பங்கள் வரை வாழ்கின்றூர்கள். அவர்களின் முக்கிய தொழில் வேளாண்மை. இன்று பலர் கல்வி கற்று அரசு சேவையிலும், பிற வழிகளிலும் முன்னேறி வருகிருர்கள்.

திருகோணமலை

திருகோணமலையில் சில நூற்றுக் கணக்கானேர் வாழ்கிருர்கள். அவர்களின் முக்கிய தொழில் வேளாண்மை. இன்று பலரும் கல்வியில் முன்னேறி அரசு சேவையிலும், பலவகை பதவிகளிலும் இருக்கின்றூர்கள்.

மட்டக்களப்பு

கிழக்கிலங்கையில் நம்மவர்கள் வாழும் முக்கிய நகரம் மட்டக்களப்பு. இங்கு மாநகர எல்லையுள் கோட்டை முனை, தாமரைக்கேணி பகுதிகளில் சுமார் முன்னூறு குடும்பங்கள் இருக்கின்றூர்கள். இன்று அனைவரும் கல்வியில் முன்னேறி பலரும் அரச சேவையில் பல பதவிகளில் இருக்கிருர்கள்.

மட்டக்களப்புக்கு அண்மையில் இருக்கும் ஆரையம்பதியில் சுமார் நூறு குடும்பங்கள் இருக்கின்றூர்கள். பலரும் கற்று அரச சேவையில் இருக்கின்றூர்கள்.

கல்லாறு

மட்டக்களப்புக்குத் தெற்கே கோட்டைக் கல்லாறு என்னும் பழைய கோட்டைக்கு அண்மையில் இருந்த நம்மவர்கள் இலைமறை காயாக கலந்து வாழ்கின்றூர்கள். தொடர்பு மிகக் குறைவு.

இவர்கள் அனைவரும் பூர்விகக் குடிகளைச் சேர்ந்த இலங்கையர்கள். இவர்களுக்கும் இன்றைய தமிழ்நாட்டு நம்மவர்களோடு எவ்விதத் தொடர்பு மில்லாது இலங்கையில் வாழ்பவர்கள், இவர்களுக்கு ஓரிடத்தாரோடு, மற்ற இடத்தாருக்குத் தொடர்பு உண்டு. இவர்கள் எல்லாம் கி. மு. முதலாம் நூற்றுண்டில் இலங்கையை ஆண்ட சோழ மன்னன் எல்லாளன் படையுடனே, பின் இலங்கையின் வடகீழ் தமிழ் இராட்சியங்களை ஆண்ட தமிழ் மன்னர்கள் காலத்திலோ அல்லது பிற்பட்ட பல்லவ, சோழ, பாண்டிய பேரரசுகளின் காலத்தில் ஏற்பட்ட படைகளோடு வந்து இலங்கையின் பல பகுதிகளிலும் குடியேறியவர்கள் என்பதுவே உண்மை.

பல நூற்றுண்டு காலமாக இவர்கள் தங்கள் தனித்துவம் கெடாமல் குலப் பெருமை பேணி வாழ்ந்துள்ளார்கள் என்பது சிந்தித்து உவப்படைய வேண்டிய உண்மையாகும். இந்நாட்டின் சமுதாயச் சூழலில் பல இழப்புக்களையும், இகழ்ச்சிகளையும் கண்டும், தம் தனித்துவம் கெடாது வாழ்ந்துள்ளார்கள் எமது முன்னோர் கள் என்று சிந்திக்கும் பொழுது அவர்களின் துணிச்சலைப் போற்ருமல்இருக்க

முடியாது. மேலும் நூற்ருண்டு கால மாக நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும், மற்றும் மட்டக்களப்பு, காரைவெட்டி ஆகிய பகுதிகளிலும் சூரன் போர் நிகழும் நாளில் நாம் வீரவாகு தேவரின் வழித் தோன்றல்கள் என்பதை நிலை வூட்டுமுகமாகப் போர்க்கோலம் தரித்து முடி அணிந்து, வாள் ஏந்தி நம்மவர் கள் கோவில் செல்லும் காட்சி எம்மை யெல்லாம் மெய் சிலிர்க்க வைக்கும். இதுகாறும் இலங்கையில் பூர்விகக் குடிகளில் கண் வாழும் நம்மவர்கள் பற்றித் தொகுத்துக் கூறினேன். இது நிற்க,

மலை நாடு

இலங்கையில் மத்திய மலைநாட்டுப் பெருந்தோட்டங்களில் வேலைவாய்ப் புத் தேடி, இந் நூற்ருண்டின் முற் பகுதியில் வெள்ளையர்களால் தருவிக் கப்பட்ட தமிழ் நாட்டவர்களிலும் நம் மவர்கள் இலைமறை காயாக மறைந்து வாழ்கிருர்கள். இவர்களுக்குள்ளும் எவ்வித தொடர்பும் இல்லை. இவர் களுக்கும் இலங்கையின் பூர்விக மக்கள் மத்தியில் வாழும் நம்மவர்களுடனும் எவ்வித தொடர்பும் கிடையாது. இவர் களில் பலரும் கல்வி கேள்வியிற் சிறப் புற்று முன்னேறியுள்ளார்கள். இவர் களையும் ஒருங்கிணைத்து ஏனையோர் களுடன் தொடர்பு படுத்தி நம்மவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற் படுத்த வேண்டியது இன்றைய எமது முக்கிய கடமையாகும்.

ஆ. சு. செல்வரத்தினம், B. Sc.,
(சென்னை)
இணைச்செயலாளர்,
மாவட்ட அமைச்சு,
முல்லைத்தீவு, இலங்கை.

நிரம்பவும் படிப்பதை விட, படித்தபடி நின்று ஒழுகுவதற்கு முயற்சி செய்.
படிப்பது உணவு உண்பதுபோல்; ஒழுகுவது உணவு ஜீரணமாவதுபோல;
உணவு நிரம்ப உண்டாலும் செமிக்கவில்லை யானல் என்ன பயன்?
செமிக்காத உணவு துன்பஞ் செய்கிறதன்ருே?
ஆதலின் சிறிது கற்ருலும் கற்றவண்ணம் நிற்க வேண்டும்.

ஓதலின் நன்று ஒழுக்கமுடைமை.

— திருமுருக கிருபானந்தவாரியார்

முன்னேற்றத்திற்குறிய படிநிலைகள்

திரு. செ. க. குமாரசாமி, எம். ஏ.,
பதிவாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் அறிவிற் சிறந்த ஔவை பிராட்டியார். நல்லது இது தீயது எது எனக் காணுகின்ற எப்பொருளையும் பகுத்தறிந்து காணு கின்ற திறம் மனிதப்பிறவிக்கே வாய்த்த தாகும். மனம் என்ற சிறந்த கருவியைப் படைத்திருப்பவன் மனிதன். அம் மனமே நல்லது கெட்டது இவை இவை யெனப் பகுத்தறியும் திறனை நல்கு கின்றது. இம் மனத்தால் இறைவன் திருவுருக் காட்சியினையும் நினைவிற் கொண்டு வந்து மகிழ முடியும் என்ற காரணங் கருதியே தொண்டில் தலை சிறந்தவராம் திருநாவுக்கரசர் பெரு மானும் 'மனிதப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே' என்று பாடினார்,

மனிதப் பிறவி தொண்டிற்கு நிலைக் களனாய் இருப்பது. அறிவு முதிர்ந்து மனிதப் பிறவியின் பயன் பெருகுகிறது. திருவள்ளுவர் பெருமானும் அறிவின் பயன் பிற உயிர்களின் துன்பங்கண்டு இரங்குவதே என்று கூறியுள்ளார்:

''அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போற் போற்றாக் கடை''

—திருக்குறள் : 315

எனவேதான் இந் நாட்டிற் பிறந்த அருளாளர்கள் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' எனத் தொண்டு வாழ்வு வாழ்ந்தனர். எண்ணற்ற நூல்களை எண்ணிக் கற்றாலும் அந் நூல்களெல் லாம் குறிப்பிடும் சாரமான கருத்து இதுதான் கிடைத்தவற்றைப் பிறருக் கும் கொடுத்துப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதுதான்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

—திருக்குறள் : 322

எனவே மனித சமுதாயத்திற்குப் பயன்படத் தக்க நல்வாழ்வு வாழ வேண்டுமென்றால் முதலாவது மனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ள வேண்டும். அதாவது உயர் நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் தன்னை உயர்த்திக் கொள் வதும் தாழ்த்திக் கொள்வதும் தனி யொரு மனிதனின் செயலில் உள்ளது.

ஆங்கிலத்தில் 'A man is the architect of his own destiny' என்பர். திருக் குறளோடு ஒப்ப உயர்வாக வைத்து எண்ணத்தகும். நீதி நூலாம் நாலடி யார்,

''நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மேல் உயர்ந்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்''

— நாலடியார் : 248

என்று குறிப்பிடுகின்றது.

எனவே பிறருக்குப் பயன்படத்தக்க அளவில் சமுதாயத்திற்குப் பயன்படத் தக்க அளவில் வாழ வேண்டுமானல் முதலாவது ஒருவர் தம் வாழ்வை நல்ல முறையில் வளப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஒருவர் தன்னை நன்னிலைக்கு உயர்த்திக் கொள்வதற்கு சில அடிப்படைப் பண்புகள் அவர் வாழ்வில் அமைய வேண்டும். முதலா வதாக அவர் நேர்மை நெஞ்சங் கொண்டவராகத் துலங்குதல் வேண்டும். தாம் மேற்கொண்டுள்ள பணியில் சிறப்பதும், அப் பணியைச் சிறப்பிப்பதும் அவர்தம் நோக்கங்களாக விளங்குதல் வேண்டும். பெரிய இடங் களில் நேர்மைக் குறைவு ஏற்படு மானல் அது வீழ்ச்சிக்கு அடிகோலி விடும். எனவே இவர் உண்மையானவர். இந்நிறுவனத்தின் முன்னேற்றமே தம் குறிக்கோளெனக்கருத்தில் கொண்டுள் ளார் என்று பகைவரும் பாராட்டு கின்ற அளவிற்கு நேர்மை நெஞ்சம் முதலாவது வாய்க்கின்ற அளவிற்குத் தாம்வேறு, தாம் பணியாற்றுகின்ற நிறுவனம் வேறு என்றில்லாமல் அந் நிறுவனத்தோடு ஒன்றுபட்டு விட வேண்டும்.

அடுத்த படியாக அமையவேண்டிய பண்பு உழைப்பு என்பதாகும். 'உழைப் பின் வாரா உறுதிகள் உளவோ?' என்பது பழமொழி. உழைப்பே ஒரு வரை வாழ்க்கையில் உயர்த்தும் என்பது அனுபவமொழி. தான் பிறந்த குடியின் பெருமையினை உயர்த்துவ தற்கு உறுதி பூண்டு உழைக்கும் ஒருவனுக்குத் தெய்வமே விரும்பித் துணைவரும் என்று திருவள்ளுவரும் செப்புகின்றார்.

''குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''

— திருக்குறள் : 1023

எனவே உழைப்பு என்பது ஒருநாளும் வீண்போகாது. அது குறிப்பிட்ட காலத்தில் தகுந்த நற்பலனைத் தந்தே தீரும். ஆக, கடின உழைப்பினை மேற்கொள்ளும் பொழுது பகலென்றும் இரவென்றும் பாராமல் மேற்கொண்ட செயல் முற்றுப்பெறும் வரையில் அதிலேயே கருத்தூன்றிக் கடமை யாற்ற வேண்டும் என்பர் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்''

— திருக்குறள் : 668

நேர்மை நெஞ்சமும் உழைப்புத் திறனும் கொண்டவர்கள் வாழ்க் கையில் அடுத்துப்பெற வேண்டிய பண்பு 'துணிவு' என்பதாகும். எடுத்த செயலை எவ்வகை எதிர்ப்பு வரினும் அஞ்சாது மேற்சென்று செம்மையாக முடிக்கும் மனத்திட்பமே இங்கு 'துணிவு' என்று குறிப்பிடப் படு கின்றது. திருவள்ளுவர் பெருமானும் 'வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்' என்று சொல்லுவார். ஆங்கிலத்தில் 'will power' என

வழங்கப்படுவதும் இதுவேயாகும். இதனையேதான் அண்மையில் அமரராகிவிட்ட அரசவைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களும்,

''போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் தொடர்ந்து
செல்வேன்

ஏற்றதொரு கருத்தை என் உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன்
அஞ்சேன்''

என்று குறிப்பிட்டுப்போந்தார் ஒரு செயலைச் செம்மையாக முடிக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்ட பிறகு எத்தகைய தடைவரினும் எதிர்ப்புக்கள் எதிர்ப்பட்டாலும் அவ்வனைத்தையும் சமாளித்து வெற்றி பெறும் அளவில் துணிவினை மேற்கொள்ள வேண்டும். 'துணிவே துணை' என்ற அளவிற்கு மனத்திட்பமே ஒரு செயலில் வெற்றி பெற ஒரு மனிதனுக்கு முற்றிலும் துணைசெய்வதாக அமையும்.

நேர்மையும், உழைப்பும், துணிவுங் கொண்டு செயலைச் சாதித்த பிறகு மனிதனுக்குத் தெளிவு பிறக்க வேண்டும். வெற்றியின் எக்களிப்பில் செயல்களின் சாதக பாதகங்களை மறந்துவிடுதல் கூடாது. எனவே எந்த ஒரு பொருளைப்பற்றியும் தெளிவான சிந்தனை வேண்டும்.

''எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
தெள்ளிய ஞானம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்''

என்று பாரதி கூறியபடி தெளிந்த சிந்தனைகள் எண்ணத்தில் உயர்வையும் செயலில் செம்மையும் தாமே புகுத்திவிடும் எனலாம். தெளிவான சிந்தனையுடையவர்களுக்கு நிகழ்காலமும் எதிர்காலமும் ஏவல் செய்யக்காத்திருக்கும்.

தெளிவிற்குப்பின் கனிவு வேண்டும். இரக்க உள்ளம் பிறந்தால் மனித சமுதாயத்தின் உயர்வுக்குக் குறிப்பாக நலிந்த சமுதாயத்தின் நல்வாழ்விற்கு உறுதுணையாக நிற்கமுடியும். பிறர் படும் துன்பத்தினைத் தாம்படும் துன்பமாக எண்ணுபவன் எவனோ அவன் தான் உண்மையான வைணவன் என்பார் அண்ணல் காந்தியடிகள். அவ்வகையில் நம்மால் இயன்ற வரையில் இயன்ற வகையில் பிறருக்கென உதவுவதில் தனி இன்பம் மட்டும் அல்ல, தனிக்கடப்பாடே உளது என நினைக்க வேண்டும். இவ்வுலகம் இடையுறுது இயங்கிக் கொண்டிருப்பதற்கே காரணம் தமக்கென வாழாமல் பிறருக்கென வாழும் பெருமக்கள் இருக்கின்ற காரணத்தினால்தான் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்ற மன்னன் குறிப்பிட்டுப் போந்தார். ''தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே உண்டா லம்ம விவ்வுலகம்'' என்பது அவன் வாக்காகும்.

''தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்''

— திருக்குறள் : 399

என்பார் திருவள்ளுவர்.

''எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லால்

வேறொன்றறியேன் பராபரமே''

என்றார் தாயுமானதயாபரர்.

எனவே நேர்மை, உழைப்பு, துணிவு, தெளிவு, கனிவு இவற்றோடு இறையுணர்வும் கொண்டு நம் வாழ்க்கையை

அமைத்துக் கொள்வோமேயாகில் அதனால் பெறும் பயன்கள் பெரிதென லாம். ''அவ்வருளாலே அவன்தாள் வணங்கி'' என்பர் மாணிக்க வாசகர். ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' எனும் பெரியோர்தம் அனுபவ மொழியினைக் கருத்திற் கொண்டு,

''வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ''

என்றபடி நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் நாமும் உயர்வோம், சமுதாயமும் உயரும்; நாடும் நன்னிலை பெறும்.

செங்குந்தர் குலம் வாழ 1981–ஆம் ஆம் டிசம்பர்த் திங்கள் 12, 13. தேதிகளில் சேலத்தில் நடைபெறவுள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பொன் விழாவிற்கு எங்களின் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

சோமு அக்ரோ செண்டர்

73, A/1 ரயில்வே ரோடு
சீர்காழி - 609 110.

பயிர்த் தொழிலுக்குத் தேவையான அனைத்து உரங்களும், பூச்சி மருந்துகளும் குறைந்த விலையில் உங்களுக்கு வழங்க எங்களை நாடுங்கள். தெளிப்பான்களும், அவற்றிற்குத் தேவையான உறுப்புகளும் எங்களிடம் கிடைக்கும்.

வருக ! ஆதரவு தருக !

கைத்தறியின் காவலர்

அமரர் A. மாரியப்பன்

P. திருஞான சம்பந்தம்
புரவலர், சேலம் நகர செங்குந்தர் நற்பணி மன்றம்

திரு A. மாரியப்பன் அவர்கள் 1920ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ந் தேதி ஆடி 18ஆம் நாள் சேலம் அம்மாப்பேட்டை திரு. வே மு. ஆறுமுக முதலியார் ரத்தினம்மாள் இவர்களுக்கு தலைமகனாய் பிறந்தார். இவருடன் பிறந்த சகோதரர்கள் இருவர், சகோதரிகள் ஐவர் ஆவர். இவர் செங்குந்த சமூகப் பற்றும், பாசமும் நிறைந்த, கைத்தறி ஜவுளி வியாபார குடும்பத்தில் பிறந்தவர். பள்ளி பருவத்திலிருந்து தேசத்தையும், தேசமக்களையும் உணரலானார். அடிமைப்பட்டுக் கிடந்த நமது பாரதம் விடுதலைப் பெற தேசப்பிதா அண்ணல் மகாத்மா காந்திஜி அவர்கள் சுதந்திர போராட்டக் குரல் எழுப்பிய போது, தனது படிப்பை பொருட்டாக நினைக்காமல் பள்ளி இறுதி ஆண்டு படிப்பைக் கூட முடிக்காமல் தன்னை தேசவிடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்துக் கொண்டார். ஓரளவு ஹிந்தியும் கற்றறிந்தார். விடுதலைப் போராட்டக் கிளர்ச்சியில் பங்கு கொள்ளச் செய்ய தேசிய சங்கங்களை அமைத்து போராட்டத்தை நடத்த வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதிலே ஆழமாகப் பதிந்தது. அவர் திட்டத்தை நிறைவேற்ற சமூகப் பெரியோர்களின் ஆதரவை நாடினார். திரு. N. மாணிக்க முதலியார், திரு P. மாரியப்ப முதலியார், திரு தியாகி மு அருணாசல முதலியார், திரு S. பழனியாண்டி முதலியார், திரு P. S. சண்முக முதலியார், திரு M. பெருமாள் முதலியார் போன்ற சமூகப் பெரியோர்களான தியாகச் செம்மல்களின் ஆசியோடும், ஆதரவோடும் அம்மாப் பேட்டையில் செங்குந்தர் மேட்டுத் தெருவில் மகாத்மா காந்திஜி தேசிய வாலிபர் சங்கத்தை அமைத்தார். சங்கம் அமைத்த பிறகு, கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த இப்பகுதியில் கல்வி கற்காதவர்கள் ஏராளமானவர் இருப்பதையறிந்து இரவுப் பள்ளியை துவக்கினார். அவரது நண்பர்களும், கற்றறிந்த சமூகப் பெரியோர்களும் ஆசிரியராகப் பணியாற்றினார்கள். சுமார் 1500க்கும் மேற்பட்டவர்கள் இரவுப் பள்ளியில் கல்விப் பயின்றார்கள். பலர் இன்றும், நான் மகாத்மா காந்திஜி தேசிய வாலிபர் சங்கத்தில் கல்வி அறிவு பெற்றவன் என்று பெருமையோடு கூறிக்கொள்வதைக் காணலாம்.

1936–ஆம் ஆண்டு திரு. ராஜாஜி அவர்கள் தலைமையில் அமைந்த காங்கிரஸ் மந்திரிசபையில் மதுவிலக்கை அமுலுக்கு கொண்டு வந்தபோது, அந்தச் சிறுவயதிலேயே தெருத்தெருவாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தார்.

1938–ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு சோதனைக்காலம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் திரு. மு. அருணாசல முதலியார் அவர்களுடன் சேர்ந்து அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று அமைத்து நெசவாளர்களுக்குப் பெரிதும் உதவி செய்தார்.

தேச விடுதலைக்கோரி 1941–ஆம் ஆண்டு மகாத்மா காந்திஜி அவர்கள் தனிநபர் சத்யாக்கிரகத்தை ஆரம்பித்தபோது, காந்திஜி அவர்களால் அங்கீகரிப்பவர்கள்தான் சத்யாக்கிரகத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற திட்டத்தையும் வெளியிட்டார்கள். அதன்படி காந்திஜி அவர்களுக்கு எழுதி அனுமதி பெற்று சத்யாக்கிரகம் செய்து பதினைந்து நாள் சிறை தண்டனை பெற்றார்.

1942–ஆம் ஆண்டு, வெள்ளையனே வெளியேறு, இந்தியக்குடிமகனே தேசவிடுதலைக்காக எதையும் செய், சாக அஞ்சாதே என்ற அடிப்படையில் செய் அல்லது செத்து மடி என்ற இறுதிக் கட்டப் போராட்டத் திட்டத்தை அறிவித்த போது காந்திஜி உள்பட நமது தேசத்தலைவர்கள் அனைவரும் கைது செய்யப் பட்டார்கள். அந்த நேரத்தில் திரு A. மாரியப்பன் அவர்கள் ஆவேசத்தோடு செயல்பட்டு மற்றத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு போராட்ட வாசகங் களை கைப்பிரதியாகவும், தனது அருமை நண்பர் திரு N. ராமசாமி உடையார் அவர்கள் தோட்டத்தில் ரகசியமாக சிறிய கை அச்சு எந்திரத்தைக் கொண்டு அச்சடித்து வெளியிட்டார்கள். அவரின் வீரமிக்க செயலை சமூகப் பெரியோர் களும், தாய்மார்களும் பாராட்டிப் பெருமைபடுத்தினார்கள். திரு N. ராமசாமி உடையார் அவர்கள் அந்த அச்சு எந்திரத்தை இன்றும் ஞாபகார்த்த சின்ன மாக வைத்திருக்கிறார்.

1946–ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பெயரால் அணி ஒன்று உருவானபோது, சேலம் மாவட்டத்தில் முதல் குரல் கொடுத்தவர் திரு A. மாரியப்பன் அவர்கள் தான். அன்றுதான் இவருக்கு சோதனைக் காலம் உருவானது அந்த ஆண்டில் காங்கிரஸ் மகாசபையின் தேர்தல் வந்தபோது சேலத்தில் காமராஜ் அணியில் நின்று வெற்றியும் பெற்றார். சேலம் மாவட்டத்தில் சிறந்த, உயர்ந்த அரசியல்வாதியாகத் திகழ்ந்தார். குழந்தை உள்ளம் கொண்டவர். தன்னுடன் இருந்தவர்கள் அதைப்பயன்படுத்திக் கொண்டு அவரை திசைதிருப்பி ஊர்மக்கள் ஒரு சாரார் மத்தியில் வெறுப்பையும், விரோதத்தையும் ஏற்படுத்தித் தந்தார்கள்.

1947-ஆம் ஆண்டு 15ஆம் தேதி நாடு சுதந்திரம் அடைந்தது. சுதந்திரத் திற்குப் பிறகு நெசவாளர்களுக்காகப் பல போராட்டங்களை நடத்தி தனது கட்சி அரசுக்கு நெசவாளர்களின் கஷ்டங்களை எடுத்துக் கூறி பல சலுகைகள் கிடைக்கச் செய்தார். 1951ம் ஆண்டு அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கத்திற்கு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டு தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பொறுப்பு ஏற்றபோது மேற்படி சங்கத்தில் 350 மெம்பர்கள் இருந்தார்கள். நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வந்து நிரந்தர வேலை வாய்ப்புகிடைக்க பெருமுயற்சி எடுத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான நெசவாளர்களை மெம்பராக்கி வேலை கொடுத்தார். இவர் மேற்படி சங்கத்தின் பொறுப்பேற்ற பிறகு, சங்கத்திற்கு சொந்தமாக ஒரு கட்டிடம் கட்டினார். அவரது பெருமைக்கு எடுத்துக் காட்டாக திரு வி. க. பாதையில் இன்றும் தலைநிமிர்ந்து

நிற்பதை அனைவரும் அறிவோம். மற்றும் சங்கத்திற்கு சாயச்சாலை அமைத்து அதற்கு ஒரு கட்டிடமும் வாங்கினர். அந்தக் கட்டிடம் இன்று மாரியப்பன் நிலையம் என்ற பெயரைத் தாங்கி மெம்பர்கள் வரவு. செலவு (நூல், கூலி. பெறுதல், துணி ஒப்படைத்தல்) செய்யும் இடமாக தங்க செங்கோட முதலித் தெருவில் உள்ளது. 1956ம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சர், பெருந் தலைவர் காமராஜ் அவர்களால் நெசவாளர் காலனிக்கு அடிக்கல் நாட்டப் பெற்று 200 வீடுகளைக் கட்டி முடித்து அதற்கு காமராஜ் நகர் நெசவாளர் காலனி என்று பெயர் சூட்டி பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் தலைமையில் பாரத வர்த்தகத் தொழில் அமைச்சராக இருந்த திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்களைக் கொண்டு திறப்பு விழாவும் செய்தார். 1963ல் சங்கத்தின் சாதாரண சாயச்சாலையை நவீன சாயச்சாலையாக்கி காலனியில் பெரிய கட்டிடம் கட்டி அதற்கு மாற்றினர்.

1957-ஆம் ஆண்டு சேலம் நகரத் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று சட்டப் பேரவை உறுப்பின ரானர். நெசவாளர் பிரதிநிதியாக பணியாற்றிய இவர் அகில இந்திய கைத்தறி வாரியத்தின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். நெசவாளர் களுக்குத் தேவையான அச்சு, பன்னை, தறிமிஷின், பேட்டுப் பெட்டி முதலியவைகளை முக்கால் பங்கு சர்க்கார் மானயத்துடன் பெற்றுக் கொடுத்தார். கூட்டுறவு சங்கத்தில் பங்கு செலுத்தி மெம்பராகச் சேர முடியாத ஏழை நெசவாளர்களை நான்கு அணா மட்டும் செலுத்தினல் மெம்பராக சேர்த்து தறி கொடுத்து உதவினர்.

1961ல் சேலம் அம்மாப்பேட்டையில் 25000 கதிர்கள் கொண்ட கூட்டுறவு நூற்பு ஆலை ஒன்றை நிறுவி நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த வர்களுக்கு வேலைவாய்ப்பளித்து ஊருக்குப் பெருமை தேடித் தந்தார். மேலும் சேலம் ஆத்தூர் ரோடில் 25000 கதிர்கள் கொண்ட சேலம் டெக்ஸ் டைல்ஸ் என்ற நூற்பாலையையும் நிறுவினர். 1962ல் நெசவாளர் நிறைந்த வீரபாண்டி தொகுதியில் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டார்.

இப்படிச் சாதனைகள் பல புரிந்த பெருமகன் தான் பொறுப்பேற்ற சங்கத்தின் வளர்ச்சியிலே கொஞ்சமும் சலித்ததில்லை. நெசவாளர்களுக்கும் பிராவிடெண்ட் பண்டு திட்டத்தை கொடுக்க வேண்டும் என்று வாதாடி இந்தியாவிலேயே முதன்முதலாக அம்மாப்பேட்டை சங்க மெம்பர்களுக்குப் பெற்றுத்தந்தார். மேலும் சர்க்காரின் முழு உதவியோடு 49 விசைத்தறிகளை பெற்று நிறுவியுள்ளார். ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர்களை மெம்பர்களாகச் சேர்த்து தறி கொடுத்து சங்கத்தை ஆலமரமாக வளர்த்தார். நெசவாளர்களின் வாழ்க்கைக்கு அவ்வப்போது ஏற்படும் செலவினங்களுக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் உதவியாக இருக்கும் பொருட்டு அம்மாப் பேட்டை அர்பன் கூட்டுறவு வங்கி ஒன்றை நிறுவி தலைமை பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டார். தான் மறையும் போதும் தலைவராகவே மறைந்தார். அதுவும் ஆலமரமாக வளர்ந்து வருகிறது.

அரசியல் காரணங்களால் 1971ம் ஆண்டு அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நிர்வாகத்திலிருந்து தானும், தனது தலைமையில் இருந்த நிர்வாகக் குழுவும் ராஜினாமா செய்து விட்டது. பிறகு அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவினரால் இரண்டு ஆண்டு கூட அமைதியான நிர்வாகம் நடத்த முடியாமல் 1974ல் சர்க்காரால் கலைக்கப்பட்டு சுமார் எட்டு ஆண்டு காலமாக சர்க்கார் அதிகாரிகளால் நிர்வாகம் நடத்தப்பட்டு வருகிறது அதன் பயனாய் சங்க மெம்பர்கள் கேட்பார் இல்லா குழந்தைகளாய் அவதிப்படுகிறார்கள்

1975 அக்டோபர் 2ம் தேதி பெருந்தலைவர் கா ம ரா ஜ் இறந்த பிறகு சேலம் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பொறுப்பேற்றார். சமூகப் பெரியோர்களின் பெரும் ஒத்துழைப்போடு 1976ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு பிறந்த நாள் விழா எடுத்து ஜூலை 18ம் தேதி 25000 ஏழைகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்து, பகல் 12மணிக்கு உணவு படைத்துக் கொண்டிருக்கும் போதே திடீரென சுகவீனம் அடைந்து நம்மிடமிருந்த பெருந்தகையை காலன் பிரித்துக் கொண்டுவிட்டான். அதை தெரிந்த சேலமாநகரமே அதிர்ச்சிக் குள்ளானது. பல்லாயிரக் கணக்கான மக்கள் சாரிசாரியாக வந்து கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தியதை இன்று நினைத்தாலும் உள்ளம் உருகும்.

7—6—1976ந் தேதி அம்மாப்பேட்டை அருள்மிகு செங்குந்தர் குமரகுரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் முன் மண்டபத் திறப்பு விழா நிகழ்சிக்குத் தலைமையேற்று சொற்பொழி வாற்றும்போது நமது ச மூ க த் தி ற் கா க பாலிடெக்னிக் ஒன்று எற்படுத்த வேண்டிய அவசர அவசியத்தைப்பற்றி தெளிவு படுத்தினார். அப்போது அக்கூட்டத்தல் இருந்த சமூகப் பெரியோர்கள் சிலர் நன்கொடை வழங்க உறுதி அளித்தார்கள். அப்பெருந்தகையின் கனவை நனவாக்க சமூகப் பெரியோர்கள், பொன்விழாவும், மாநாடும் நடைபெறுகின்ற போதே செங்குந்தர் கல்வி நிறுவனமும் அமைத்து சேலத்தில் தொழில் கல்லூரி நிறுவ எடுத்துக் கொண்டுள்ள மு ய ற் சி யா ல் அவர் ஆத்மா சாந்தியடையும் எனக்கூறி பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

செங்குந்தர் குலச் செம்மல்
திரு K. R. மாணிக்க முதலியார்

மெட்ருஸ்காரார் என்று பெருமை யோடு புகழப்பட்ட அன்புச் செல்வர் (அமரர்) K. இராமசாமி முதலியார்க்கு 29–9–1912ல் திரு. K. R. மாணிக்க முதலியார் அவர்கள் மூத்த மைந்த ராகப் பிறந்தார். சிறு வயதிலேயே இனிய பண்புகள் இவரிடம் அரும்பி யிருந்தன.

ஓடி விளையாடு பாப்பா—நீ,
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

என்று பாடிய பாரதியின் அறிவுரையை முழுக்க முழுக்க இவர் ஏற்றுக் கொண்டு இனிய பண்பாளராகத் திகழ்ந்தார்.

அம்மாப்பேட்டையில் நான்காவது வகுப்புவரை படித்தார். பின் சென்னைக்குச் சென்று 6 வது வகுப்பு வரையே படித்தார். மேலே பள்ளிக்குச் சென்று படிக்க முடியாத சூழ்நிலை. படிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியதாயிற்று.

பதினேழாவது வயதில் திருமணம் நடந்தது. தந்தையார் இவரது குடும்பப் பொருப்பை இவரே நடத்த வேண்டுமென்று எண்ணித் தனிக்குடித் தனம் வைத்தார். மாதச் சம்பளம் ரூ. 25/- க்கு நமது சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கப் பொரு ளாளர் திரு S. P. சம்பந்த முதலியார் அவர்கள் தந்தையார் (அமரர்) S. பழனியாண்டி முதலியார் கடையில் வேலை பார்த்து வந்தார். இந்தச் சம்பளம் குடும்பத்தை நடத்தப் போது மானதாக இல்லாததால் தந்தையார் இவருக்கு ஓய்வு நேரத்தில் ஊதியம் தரக்கூடிய துணைத்தொழில் ஒன்றை ஏற்பாடு செய்தார். ஜப்பான் நாட்டுச் சுவர்க்கடிகாரங்களை வாங்கி நம் குலத் தவர் வீடுகளில் விற்று வரச் செய்தார். ஒரு கடிகாரம் ரூ. 8, 10க்குத் தான் விற்கும். மாதத்தில் சராசரி 10 கடிகாரம் கடனுக்கு விற்று மாதா மாதம் வசூலித்துக் கொள்வார். சேலத்தில் தவணை முறை விற்பனையை முதன் முதல் துவக்கியவர் இவரே யாவார். பின்னர் 1936ல் (அமரர்) T. K. வைத்திலிங்க முதலியார் நூல் கடையில் கூட்டாளியாக சேர்ந்து வாணிகத்தின் நெளிவு - சுளிவுகளைத் தெரிந்து கொண்டார்.

1939ல் தனியாகவே நூல் வியா பாரம் செய்யத் துணிந்தார். அன்பும் பண்பும் இவரிடம் சிறந்த ஆற்றலை உண்டாக்கி வளர்த்தன. வாணிகம் வளர்ந்தது. இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது. 1947—1949

1951—1952 அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கத்தின் தலைமைப் பொறுப்பு இவரைத் தேடி வந்தது. சிறப்பும் பொறுப்பும் மிக்க பதவியிலமர்ந்து ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற கொள்கைக்கு நீரூற்றி வளர்த்தார்.

1952-1954 வரை அருள்மிகு குமரகிரி திருக்கோவில் அறங்காவலர் குழுத்தலைவராகவும் இருந்து ''அறவினை ஓவாது சொல்லும் வாயெல்லாம்'' செய்து வந்தார். குமரன் அருள் கூடி வந்தது.

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் நூல் வியாபாரிகள் சங்கத்தின் தலைவராக சுமார் 12ஆண்டுகள் தொடர்ந்து இருந்து வருகிறார். வியாபாரப் பெருமக்கள் இவரது தலைமையை விரும்பிப் போற்றுகின்றனர்.

திருப்பூர் S. R. C. மில்லில் சுமார் 4ஆண்டுகளாக இயக்குனராக இருந்து வருகிறார். 1978 ல் அம்மாப்பேட்டையை அடுத்த உடையாப்பட்டியில் ''கந்தகிரி ஸ்பின்னிங் மில்'' 6000 கதிர்களைக் கொண்டதாக விளங்குகிறது. இந்த ஆலைக்கு மேனேஜிங் டைரக்டராக அமைந்துள்ளார். அம்மாப்பேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபம் கட்டத் தொடங்கிய நாள் முதல் நிர்வாகப் பொறுப்பில் பெரும் பங்கு கொண்டுள்ளார். 1980 முதல் கல்யாண மண்டப கமிட்டித் தலைவராக விளங்குகிறார்.

இத்தகு சீர்மை வாய்ந்தவர்க்கு ஆண் மக்கள் இருவரும், பெண்மக்கள் மூவருமாவர். மூத்தமகன் திரு. M.இராஜாமணி B.A. நூல் வியாபாரம் செய்து வருகிறார். இளைய மகன் திரு. M. சிகாமணி B. SC., ஈரோட்டில் நூல் வியாபாரத்துடன் கூட்டாகத் தானிய மண்டியும் நடத்துகின்றார்.

''தம்மினும் தம் மக்கள் அறிவுடைமை'' என்ற திருக்குறள் கருத்துக்கு இலக்கியமாக இவர்கள் விளங்குகின்றனர். பெண் மக்கள் மூவரும் திருமணமாகி எல்லாவித சௌபாக்கியங்களுடன் இனிது வாழ்கின்றனர்.

''மங்கையராய் பிறக்க நல்ல
மாதவம்'' செய்தவர்களாவர்.

அம்மாப்பேட்டை காமராஜ் நகர் காலனிக்கருகில் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் வெட்ட வெளி ஆலயம் இக்கட்டுரை நாயகரின் தந்தையாரால் நிர்மானிக்கப் பெற்றது. அதன் நிர்வாகமும் இவரிடமே இருந்து வருகிறது. அங்கு மாதந்தோறும் பூச நட்சத்திரத்திலும், தைப் பூசத்திலும், புரட்டாசி சித்திரா நட்சத்திரத்திலும் ஏழைகளுக்கு உணவு - உடை வினியோகம் இவர் பொறுப்பில் நடை பெற்று வருகிறது.

சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத்தலைவராக இருந்து, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பொன்விழாவையும், சேலம் மாவட்ட செங்குந்தர் சமூக மாநாட்டையும் சிறப்பு மிக்க வகையில் நடத்தத் திட்டமிட்டு செயல்பட்டு வந்துள்ளார்.

உழைப்பால் உயர்ந்த உத்தமரை
உள்ளன்போடு போற்றுவோம்!

நம் குலத் தோன்றல்

எஸ். பி. சம்பந்தம்

தொகுப்பு : புலவர் சிலம்படியான்

செய்யுந் தொழிலில் நெய்யுந் தொழிலே சிறந்தது. சேலம் அம்மாப் பேட்டையில் திரு எஸ். பழனியாண்டி முதலியாருக்கும் நெசவுத் தொழிலே குடும்பத்தொழிலாக இருந்தது. அன்னூர்க்கு,

திரு எஸ். பி. ரத்தினம்,

திரு எஸ். பி. சம்பந்தம்,

திரு எஸ். பி. இராசேந்திரன், B.Com.,

ஆகிய மூன்று ஆண் மக்களும் அன்பும், பண்பும், அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமைந்த மும்மணிகளாகத் திகழ்கின்றனர். இவர்களுள் நடுநாயக மாகத்திகழும் **திரு. எஸ். பி. சம்பந்தம் அவர்களைப்பற்றி** நம் குலத்தவர்கள் அறிந்து கொள்வது பொன் விழா சமயத்தில் பொருத்தமானது என எண்ணினோம்; எழுதினோம்;

26-11-1924ல் திரு எஸ். பி.சம்பந்தம் அவர்கள் பிறந்தார். சீரோடும் சிறப் போடும் வளர்ந்தார். பள்ளிப்பருவம் எய்தியவுடன் அம்மாப்பேட்டையில் இருந்த ஆரம்பப்பாடசாலை (அது தான் அன்றைக்குச் சேலத்துச் சர்வகலா சாலை) யில் பாடந்தொடங்கியது. 1942 வரை படித்து S. S. L. C. படித்து முடித்தார். அதற்குமேல் ''நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்'' என்பதற் கேற்ப வீட்டிலேயே வணிகத்துறைக் கான அனுபவப்படிப்பைத் தொடர்ந் தார். அது இன்றும் வளர்கிறது. வளர்ந்து கொண்டே இருக்கிறது. பள்ளிப் படிப்பு முடிந்ததும் வர்த்தகத் துறையில் ஈடுபடலானார். ஆரம்பத்தில் சுத்த பட்டு வியாபாரம் சில்லரை வியாபாரமாக செய்து வந்தார். பிறகு அந்த வியாபாரத்திலேயே சொந்த முயற்சியால் சுமார் 20 நபர்களைக் கொண்டு கையினால் முறுக்கும் இயந்திரத்தைக் கொண்டு நல்ல முறை யில் தயார் செய்து இப்பேட்டையி லுள்ள எல்லா பட்டு நெசவாளர்களை யும் தன்பால் ஈர்த்து இரு தரப்பின ருக்கும் சிறந்த முறையில் வியா பாரத்தை வகுத்து நல்ல முறையில் வியாபாரத்தை பெருக்கிக் கொண்டார். பின்னர் 1960ல் தனது தகப்பனாரின் தொழிலாகிய நூல் வியாபாரத்தைத் தொடங்கினார்.

1960-ல் நூல் வியாபாரம் – ஆலை யிலிருந்து வர்த்தகர் நேரடி கொள் முதல் செய்து - வர்த்தகரிடமிருந்து நெசவாளர்களுக்கு விற்பனை செய்யும் முறையை முதன் முதல் கொண்டு

வந்தவர் நமது எஸ். பி. சம்பந்தம் குடும்பத்தார் என்ருல் மிகையாகாது.

''தொட்டதெல்லாம் பொன்னுகும்
வைத்ததெல்லாம் பயிராகும்''

என்பதற்கேற்ப 1965 முதல் 1981 வரை சேலம் நூல் வர்த்தக சங்கத்தின் காரியதரிசியாக இருந்து ஆற்றிய பணிகள் அனைவராலும் பாராட்டத் தக்கவை. நூல் வியாபார சங்கத்திற்கும் தனது பெரு முயற்சியால் சங்கத்திற்குச் சொந்த பொருப்பில் ஒரு நவீன வசதி கொண்ட சுமார் 15 கடைகளுடன் கூடிய ஒரு கட்டிடத்தைக் கட்டி முடித்துள்ளார் என்பதையும் குறிப்பிடத்தக்கது.

1965ல் மன்னு உலகத்து மன்னுதல் இல்லாத முறையில் சேலம் அம்மாப் பேட்டையில் 'செங்குந்தர் கல்யாண மண்டபம்' (டிசம்பர் 12, 13ல் பொன் விழா மாநாடு காண உள்ள மாளிகை) கட்டடப் பொறியாளர் போலத் தனது கூர்ந்த மதி நுட்பங்கொண்டு கட்டட நிர்மானம் செய்து புகழ் கொண்டார். இன்று தமிழ் நாட்டிலேயே தலை சிறந்து விளங்கும் மாபெரும் கல்யாண மண்டபங்களில் இது ஒன்ருகும். இதில் திருமணம் செய்பவர்கள் தங்குவதற்காக சுமார் 22 அறைகள் உள்ளன.

1974 ஆம் ஆண்டு தொழில் துறையில் முன்னேற்றங்காண வேண்டி ஒரு கழிவுப்பஞ்சு நூற்பாலை ஏற்படுத்தினர். அது இன்று 20,000 கதிர்களைக் கொண்ட ஒரு மாபெரும் நூற்பாலையாக இயங்குகிறது. ஏராளமான நம்மவர்க்கு வேலை வாய்ப்பளித்தது.

அடுத்து கந்தகிரி நூற்பாலையையும் தனது பெரு முயற்சியால் அம்மாப் பேட்டைக்கடுத்துள்ள உடையாப் பட்டிக்கருகில் நிறுவி தற்போது அது 6,000 கதிர்களைக் கொண்டதாக நல்ல முறையில் இயக்கம் கொண்டுள்ளது.

இஃதன்றி சம்பந்தம் டெக்ஸ் டைல்ஸ் என்ற ஒரு கழிவுப்பஞ்சு நூற் பாலையும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும் நம் செங்குந்த முதலியார் கல்யாண மண்டபத்தில் இருந்து நம் சமுதாயத்தில் நடக்கும் இறுதிக் காரியங்களுக்குச் சுமார் 4 ஏக்கர் நிலத்தில் ஏக காலத்தில் 300 பேர் உணவருந்தவும், 100 பேர் ஆண்கள், 100 பேர் பெண்கள் குளிக்கவும் ஒரு நந்தவனச்சோலை இவரின் பெருமுயற்சியால் நம் சமூகத்தவரைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது தமிழ் நாட்டிலேயே இந்த மாதிரி காரியத்துக்கு இது போன்ற அமைப்புள்ள சோலைவசதி எங்கும் கிடையாது. இங்கு இவர் தகப்பனர் ஞாபகார்த்தமாக ரூ 30,000/ செலவில் சமையல் அறை, சாப்பாட்டு இடமும் அமைத்துக் கொடுத்து இருக்கிருர்.

அம்மாப்பேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபத்தில் மேல் மாடியில் சுமார் ரூ. 25,000/– செலவில் இவரின் தகப்பனர் பெயரில் ஒரு ஹால் கட்டிக் கொடுத்துள்ளார்.

மேலும், நம் பேட்டையில் இவருடைய தகப்பனரின் அறக் கட்டளை நிறுவன சார்பாக சுமார் 5 இலட்சம் செலவில் ஒரு நவீன வசதி கொண்ட மருத்துவமனை கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிருர்.

இவருக்குத் தற்போது சுமார் அறுபது வயதாகிறது. இன்றும் தன் தமையனர் திரு. எஸ். பி. இரத்தின

முதலியார் அவர்களின் சொல்லுக்கு மீறி எதுவும் செய்யாதவர். இது சான்ருன்மைக்குரிய பண்பாக உள்ளது. இவர் தம்பியார் திரு. எஸ். பி. இராசேந்திரன், B. com., அவர்களும் தன்னுடைய மூத்த இரு சகோதரர் களின் சொற்களை மீறி நடந்ததில்லை. இவர் பக்தி நிறைந்த பண்பாளர். பல அறக்கட்டளை நிறுவனங்களின் பொறுப்புகளை ஏற்று நடத்துகிருர்.

திரு. எஸ். பி. சம்பந்தம் அவர்கள் அம்மாப்பேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபத்திற்கு ஆரம்ப கால முதல் நிர்வாகியாகவும், தற்போது பொருளாளராகவும் இருந்து செய்து வரும் பணிகளைப் பொன்னேட்டில் வரையலாம். தற்போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் பொன் விழா - சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சமூக மாநாடும் நடத்தப் பொருளாளராகவும் இருந்து வருகிருர்.

மேலும் பல அறப்பணிகள் இவரது பொறுப்பில் நடக்க உள்ளன.

''தொண்டர்தம் பெருமைகளை
சொல்லவும் படுமோ''
''என் கடன் பணி செய்து கிடப்பதே''

என்ற நாவுக்கரசரின் மறுபதிப்பாக இவர் விளங்குகிருர். இவர் பல்லாண்டு பல்லாண்டு நீடுழி வாழ்ந்து நம் சமூக வளர்ச்சிக்குப் பாடு படுவாராக.

ஒட்டக்கூத்தர்
சிரச்சிங்காதனம்

சேலம் மாவட்டமும் செங்குந்தரும்

பல சிறப்புகள் கொண்ட சேலம் மாவட்டம் சில ஆண்டுகளுக்கு முன் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதன் மற்றொரு பிரிவு தர்மபுரி மாவட்டம் ஆகும்.

சேர அரசர்களால் ஆளப்பட்டதால் சேரலம் என்று இருந்து பின் சேலம் என்றாகியது என்றும், மலைகளால் சூழப் பட்டிருப்பதால் சைலம் என்றிருந்து பின்னர் சேலம் என்று மருவி வழங்கப் பட்டது என்று காரணம் கூறப்படுகிறது

தற்போதைய சேலம் மாவட்டத்தில் பரவலாக செங்குந்தப் பெருமக்கள் பல நகரங்களிலும் பெரிய ஊர்களிலும், சிற்றூர்களிலும் பெருவாரியாக வாழ்ந்து வருகிறார்கள். முக்கியமாக சேலம் டவுனில், அம்மாபேட்டை யிலும், செவ்வாய்ப்பேட்டையிலும், தாரமங்கலம், திருச்செங்கோடு, ஆட்டையாம்பட்டி, வேல நத்தம், பாய்ச்சல், கலங்காணி, ஆரகளூர், ஆத்தூர், வெண்ணந்தூர், அலவாய்பட்டி. மல்லசமுத்திரம், கூன வேலம்பட்டி புதூர், காளிப்பட்டி, குருசாமிபாளையம், குமாரபாளையம், தோப்பூர், தொளசம்பட்டி, ராசீபுரம், சீராப்பள்ளி, ஆகிய ஊர்களிலும் தொன்று தொட்டு பெருவாரியாக வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதிகளில் நம்மவர்கள் எப்பொழுது குடியேறினர் எங்கிருந்து வந்தார்கள் என்பதற்கான சான்றுகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

இம் மாவட்டத்தில் நம் செங்குந்தப் பெருமக்களின் பிரதான தொழில் நெசவும் அதைச் சார்ந்த மற்றத் தொழில்களுமாகும். போதுமான வரு வாய் இல்லாத காரணத்தினால் நம் சமூகத்தினரில் பெரும்பாலானவர் களிடையே ஏழ்மை நிரந்தரமாக இருந்து வருகிறது. அதை போக்கப் பாடுபடுவது சமுதாயத்தில் மேல்மட்டத் தில் இருப்பவர்களின் கடமையாகும்.

கடந்த சுமார் 50 ஆண்டுகளுக் குள்ளாகத்தான் நம்மவர்கள் மிகச் சிறிய அளவில் அரசாங்க உத்தியோ கத்திலும், வக்கீல்களாகவும், டாக்டர் களாகவும், இன்ஜினியர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்து வருகின் றனர். ஏனைய பிற தொழில்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள். அறிவிலும், ஆற்றலிலும் செய்முறையிலும் எந்த வகையிலும், மற்றஇனத்தவர்களுக்குத் தாங்கள் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பதையும், சந்தர்ப்பம் அளிக்கப் பட்டால் ஏனைய வகுப்பினரை விட சிறப்பாகச் செயல்பட முடியும் என்பதனை அவர்கள் படிப்பிலும் ஏற்றுக் கொண்ட தொழில்களிலும் திறம்பட செய்து நிரூபித்து வருகிறார்கள்.

கைத்தறிகளில் மட்டும் ஈடுபட்டிருந்த நம் செங்குந்தப் பெருமக்கள் கடந்த சில ஆண்டுகளாக விசைத்தறியிலும் ஈடுபட்டு நம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான விசைத்தறிகளை நடத்தி வருகிருர்கள். சிறப்பாக ஆட்டையாம்பட்டி, வெண்ணந்தூர் கிராமங்களில் மிக அதிகமாக விசைத்தறிகளை நிறுவி திறம்பட தொழில் செய்து வருகிருர்கள். விசைத்தறி சம்பந்தப்பட்ட "வார்ப்பிங்" சைசிங் மில்கள் திருச்செங்கோட்டில் சுமார் 35ம், சேலத்தில் ஒன்றும், ஆட்டையாம்பட்டியில் ஒன்றும், மல்லசமுத்திரத்தில் ஒன்றும் நம்மவர்களால் நிறுவப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

காலம் சென்ற பெருமதிப்பிற்குரிய சேலம் அமரர் A. மாரியப்பன் **Ex. M. L. A.** அவர்களின் பெரு முயற்சியால் விஸ்தரிக்கப்பட்ட சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் அகில இந்தியப் புகழ் பெற்று இந்தியா முழுவதிலும் பல கிளைகளை நிறுவி நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. மேலும் அவரின் முயற்சியால் கைத்தறியாளர்களுக்காக கூட்டுறவு வீட்டு வசதி காலனி ஒன்று ஏற்படுத்தி வீடுகள் கட்டிக் கொடுத்தும், வீடுகளை ரிப்பேர் செய்ய கடன் உதவி செய்தும், செங்குந்தப் பெருமக்களுக்குப் பேருதவி செய்து மேலேகண்ட ஸ்தாபனத்தை வளமுள்ளதாக செய்துள்ளார். இவைகள் தவிர அமரர் A. மாரியப்பன் **Ex. M. L. A.**, அவர்களின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட "சேலம் கோஆபரேடிவ் ஸ்பின்னிங் மில்", "சேலம் டெக்ஸ்டைல்ஸ்", "தம்பி மாடர்ன் ஸ்பின்னிங்" ஆகிய நூற்பாலைகள் நல்லமுறையில் நடைபெற்றுவருகிறது.

நம் மாவட்ட சங்கப் பொருளாளர் திரு. S. P. சம்பந்த முதலியார் அவர்களை மேனேஜிங் டைரக்டராகக் கொண்ட "சம்பந்தம் ஸ்பின்னிங் மில்ஸ்" "சம்பந்தம் டெக்ஸ்டைல்ஸ்" ஆகிய நூற்பாலைகளும், உபதலைவர் திரு. K. R. மாணிக்க முதலியார் அவர்களை மேனேஜிங் டைரக்டராகக் கொண்ட 'கந்தகிரி ஸ்பின்னிங் மில்ஸ்' மாவட்டதலைவர் திருP. ராமசாமி முதலியார் B. A., B. L. அவர்களை மேனேஜிங் டைரக்டராகக் கொண்ட "அருள்மிகு குமரகிரி ஸ்பின்னிங் மில்ஸ்", திரு S. பெருமாள் முதலியாரை மேனேஜிங் டைரக்டராகக் கொண்ட "S. B. காட்டன் மில்லும்" பொம்மிடியில் திரு தங்கவேல் முதலியார் அவர்களை மேனேஜிங் டைரக்டராகக் கொண்ட "தங்கவேல் ஸ்பின்னிங் மில்ஸ்" என்ற நூற்பாலைகளும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இவைகளை தவிர நம் செங்குந்த பிரமுகர்களால் சேலம் தாலுக்காவிலும், திருச்செங்கோட்டிலும் பல நூற்பாலைகள் கட்டப்பட்டு விரைவில் செயல்பட இருக்கின்றன. நம் சமூகத்தவர்கள் பெருமளவில் மேற்கண்ட நூற்பாலைகளில் வேலை வாய்ப்பளித்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் பல பெரிய ஊர்களிலும், சிற்றூர்களிலும் நம்மவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு மிக நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. சேலம் நகரம், திருச்செங்கோடு, ஆத்தூர், மேட்டூர், நாமக்கல், ஈரோடு, குமாரபாளையம் முதலான ஊர்களில் நம்மவர்கள் மொத்த விற்பனை, சில்லரை உற்பத்தி ஜவுளிக் கடைகள் நடத்தி வருகிருர்கள்.

சேலத்தில் உள்ள முக்கிய ஹோட்டல்களான நேஷனல் ஹோட்டல், அப்சரா ஹோட்டல், வேதாலாட்ஜ், ஷண்முகா லாட்ஜ், பிருந்தாவனம் லாட்ஜ், ராஜ் பவன், வெங்கடேஸ்வரா லாட்ஜ், சுந்தர் கபே, சுந்தர் லாட்ஜ் ஆகியவைகள் நம் செங்குந்தப் பிரமுகர்களால் சீரிய முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

நம் மாவட்டத்தைச் சேர்ந்த செங்குந்த பெருமக்கள் வருவாய்த் துறையில் காளிப்பட்டியைச் சேர்ந்த திரு. விஸ்வநாத முதலியார் I. A. S. அவர்கள் பல பெரிய பதவிகள் வகித்து கடைசியாக தமிழ்நாடு அரசாங்க செக்ரடரியாக இருந்து ஒய்வு பெற்றிருக்கிருர். மோகனூர் திரு. M. P. சிங்கார வடிவேல் முதலியார், B.A., B.L., அவர்கள் மாவட்ட நீதிபதியாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றிருக்கிருர். திருச்செங்கோடு திரு. T. N. சிங்காரவேல், B. A., B. L., அவர்கள் நம் சமூகத்திலேயே முதன்முறையாக தமிழக உயர்நீதி மன்ற (ஹை கோர்ட்) நீதிபதியாகப் பதவி வகித்து சீரிய முறையில் பணிபுரிந்து வருகிருர். மல்லசமுத்திரம் திரு. M. A. முருகேசன் B.A., B.L., அவர்கள் மாவட்ட நீதிபதியாக பணியாற்றி வருகிருர். அம்மாப்பேட்டை திரு. S.K. ஆறுமுக முதலியார், B.A., B.L., அவர்கள் சப் ஜட்ஜாக பதவி வகித்து ஓய்வு பெற்றிருக்கிருர்.

நம் மாவட்ட சங்கப் புரவலர் திரு A. சங்கர முதலியார் B. A., B. L., அவர்கள் நம் மாவட்டத்தில் வக்கீல்களின் முன்னேடியாகஇருந்து மாவட்ட பப்ளிக் ப்ராசிக்யூட்டராகவும், கவர்மெண்ட் ப்ளீடராகவும், வக்கீல்கள் சங்கத்தலைவராகவும், 'பார் கவுன்சில் தலைவராகவும், பார் கவுன்சில் ஆப் இந்தியா'வின் மெம்பராகவும் இருந்து பணியாற்றி வருகிருர். இவரிடம் பயிற்சி பெற்றவர்களில் நம்மவரில் திரு. M. A. முருகேசன் B.A. B.L. அவர்கள் மாவட்ட நீதிபதியாகவும், திரு S. K. ஆறுமுகம் , B. A. B. L. சப் ஜட்ஜாகவும், மாவட்ட சங்கத்தலைவர் P. ராமசாமி B. A., B. L., அவர்கள், செயலாளர் திரு. A. துரைசாமி B.A., B.L., அவர்கள் முக்கியமாவார். இவர் குமாரர்களில் திரு S. ஜகதீசம் B.A., B.L., சென்னையிலும், திரு. S. பெருமாள் M Sc., B. L, சேலத்திலும், மருமகன்கள் திரு. A. துரைசாமி B A. B. L. திரு S. கனகராஜ் B. A. B. L. ஆகியவர்கள், சேலத்திலும் வக்கீலாகப் பணியாற்றி வருகிருர்கள். திரு முதலியார் அவர்களின் மூத்த மருமகன் வேலநத்தம் திரு A. நடேசன் B. E., M. Sc., அவர்கள் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் சூப்பரிண்டெண்டிங் இன்ஜினியராய் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிருர். அவர்குமாரத்தியும் திரு சங்கரமுதலியார் அவர்களின் மருமகளுமான திருமதி Dr. ராதாமணி பெருமாள் M. B. B. S. D. C. H. அவர்கள் டாக்டராகப் பணியாற்றி வருகிருர். நம் மாவட்ட சங்க செயலாளர் திரு A. துரைசாமி B. A. B. L. அவர்களின் மூத்தகுமாரன் சிவகுமார் B. com, முடித்து B. L. பட்டப்படிப்பும் இளையகுமாரன் D. சேகர் B. A. முடித்து M. B. A. பட்டப்படிப்பும் படித்து வருகிருர். திரு சங்கரமுதலியார் அவர்களின் இரண்டாவது மகன் திரு. S. எக்கியசாமி அவர்கள் பெட்ரோல் பங்க்களும் நாசில் ரீகண்டிஷனிங் & பம்ப் கேலிபரேடிங் பேக்டரியும் வைத்து நடத்தி வருகிருர்.

நம் சேலம் மாவட்டசங்கத் தலைவர்

திரு P. ராமசாமி முதலியார் B.A. B.L., அவர்கள் வக்கீலாகவும், பப்ளிக்ப்ராசிக் யூட்டராகவும், மாவட்ட வக்கீல்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றி வந்து தற்போது ''அருள்மிகு குமரகிரி ஸ்பின்னிங் மில்ஸ்'' என்ற நூற்பாலை யின் மேனேஜிங் டைரக்டராகவும் இருந்து வருகிறார். அவரின் துணைவி யார் டாக்டர் நீலாம்பாள் ராமசாமி D. M. & S. அவர்கள் நம் சமூகத்திலேயே பெண் டாக்டர்களில் இரண்டாவது டாக்டராக படித்து அரசாங்கத்தில் பணியாற்றி பின்னர் ராஜினமா செய்து பெரிய நர்ஸிங் ஹோம் வைத்து நடத்தி வருகிறார். இவர்களின் மகன் டாக்டர் R. குருசாமி M. B. B. S., M. S., ம் மருமகன் Dr. R. சீதாராமன் M. B. B. S., D. C. H., ம் மருமகள் திருமதி Dr. லலிதா குருசாமி M. B. B. S., ஆகியவர்கள் நர்சிங்ஹோம் வைத்து நடத்தி வருகிறார்கள். மகள் திருமதி வசந்தா சீதாராமன் M. A அவர் கள் சேலம் செல்வலக்ஷ்மி சைசிங் மில் லின் மேனேஜிங் பார்ட்னராக இருந்து பணியாற்றி வருகிறார். Dr. நீலாம்பாள் ராமசாமி அவர்களின் தமக்கை பேத்தியும் காலஞ்சென்ற திரு D. பொன்னம்பலம் B. A B. L அவர்க ளின் துணைவியுமான Dr. பரிமளா பொன்னம்பலம் M B. B S அவர்கள் சேலம் டவுனிலும், ஜங்ஷனிலும் க்ளினிக் வைத்து நல்ல முறையில் தொழில் நடத்தி வருகிறார்.

திரு ராமசாமி முதலியார் அவர்களின் தம்பி திரு P. ஞானசேகரன் B. A. B. L. அவர்கள் வக்கீலாகவும் அவர் மனைவி திருமதி Dr. சகுந்தலா ஞானசேகரன் M. B. B. S., நர்சிங்ஹோம் வைத்தும் பணி புரிந்து வருகிறார் மற்றொரு தம்பி P. சந்திரசேகரன் B. A B. L. வக்கீலாக வும் அவர் மனைவி திருமதி Dr சுசீலா சந்திரசேகரன் M. B. B. S. அவர்கள் சேலம் அரசாங்க தலைமை மருத்துவ மனையில் டாக்டராகவும் பணிபுரிந்து வருகிறார்கள். திரு P. ராமசாமி முதலி யார் அவர்களின் மைத்துனர் சின்னப் பம்பட்டி திரு S. P. நடராஜன் B. E. M E. அவர்கள் ''என்னூர் பவுண்டரில்'' மிக உயர்ந்த பதவியான ஒர்க்ஸ் மேனேஜ ராகவும் அவரின் தம்பி Dr. P. பரமசிவம் B. E. M. Sc. P. H. D. அவர் கள் சிங்கப்பூரில் இன்ஜினியரிங் காலேஜில் புரொபசராகப் பணியாற்றி வருகிறார்

சேலம் மாவட்டத்திலேயே முதல் பட்டதாரியாக கோனேரிபட்டி சிரஸ்தார் K. ராமசாமி முதலியார் B. A. அவர்கள் B. A. பட்டம் பெற்று சிரஸ்தா ராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். அவர் மூத்த குமாரர் திரு R. சுப்ரமணிய முதலியார், B. A. அவர்கள் முனிசிபல் கமிஷனராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். திரு R. சுப்பிரமணிய முதலியாரின் மூத்த மகன் திரு S. விஸ்வநாதன் B. A. போஸ்ட் மாஸ்டராகவும் இரண்டாவது மகன் Dr. S. பாஸ்கரன் B. A M. E., P. H D. பெங்களூரில் BHELல் டெபுடிடைரக் டராகவும், அவர் மனைவி திருமதி Dr. வசந்தாசந்திரா பாஸ்கரன் M. B. B. S D. C H. அவர்கள் பெங்களூர் BHELல் டாக்டராகவும் பணியாற்றி வருகிறார்கள்

திரு சுப்பிரமணிய முதலியாரின் மருமகனும் திரு. P. மாரிமுத்து முதலியாரின் குமாரருமான திரு T. M. ராஜேஸ்வரன் I P. S. அவர்கள் டெல்லி யில் C B I டைரக்டராக போலீஸ் இலாக்காவில் மிக உயர்ந்த பதவியை வகித்து வருகிறார். அவரின் குமார்த்தி

திருமதி சுஜாதா I. P. S, I. A. S. I. F. S பரீட்சைகளில் முதலாவதாகத் தேறி தற்போது I F. S பிரிவில் மேற்கு ஜெர்மனியில் உதவி செக்ரடரியாய் பதவி வகித்து வருகிருர். திரு சுப்ரமணிய முதலியாரின் மூன்ருவது மகன் திரு சந்திரசேகரன் B. E. டிவிஷனல் என்ஜினியராகவும் நான்காவது மகன் Dr S. சுந்தரமூர்த்தி M. B. B. S., D. L. O, ஐந்தாவது மகன் Dr. S. சுகுமார் M.B.B.S, D. C.H. அரசாங்க டாக்டராகப் பணிபுரிந்து வருகிருர்கள்.

சிரஸ்தார் கோனேரிபட்டி திரு K. ராமசாமி முதலியார் B. A. அவர்களின் குமார்த்தி திருமதி மீனும்பாள் அவர்களின் மூத்த மகன் திரு. K. ராஜப்பன் M. A. அவர்கள் சேலம் மத்திய கூட்டுறவு பேங்கில் செக்ரடரியாகவும் இளைய மகன் Dr. K. ஜெகதீசன் M. B. B. S. , M. S அவர்கள் சேலம் அரசாங்க மருத்துவ மனையில் டாக்டராகவும், பேரன் Dr. பன்னீர் செல்வம் M. B. B. S. , M. S. டாக்டராகவும், பேத்தி அமிர்தவள்ளி செல்வராஜன் M. A. சென்னை க்வீன் மேரீஸ் காலேஜில் விரிவுரையாளராகவும், அவர் கணவர் Dr. செல்வராஜன் M. A. Ph. D. சென்னை யூனிவர்சிட்டி ரீடராகவும், திருமதி மீனும்பாள் அவர்கள் பேரன் Dr. A. ஞானசேகரன் M. B. B. S., டாக்டராகவும் பணிபுரிந்து வருகிருர்கள். திரு K. ராமசாமி முதலியார் B. A. அவர்களின் இரண்டாவது குமாரர் திரு R. மாணிக்கம் அவர்களின் முதல் மகள் டாக்டர் திருமதி சகுந்தலா ஞானசேகரன் M. B. B. S. நர்சிங் ஹோம் வைத்து நடத்தி வருகிருர் இரண்டாவது மகள் மங்கையர்க்கரசி B. A. B. T. ஆசிரியையாகவும், மூன்ருவது மகன் திரு. M. செல்வராஜன் B. SC. B. E, ஜூனியர் என்ஜினியர்ாகவும் பணிபுரிகிருர்.

திரு. ராமசாமி முதலியாரின் மூன்ருவது மகன் திரு. R. நடேசன் அவர்களின் மூத்த மகள் Dr. சித்திரா ராஜ்குமார் B. SC., M. B. B. S., அவர்களும், அவர் கணவர் Dr. D. ராஜ்குமார் M. B. B. S. டாக்டராகவும் திருப்பத்தூரில் பணியாற்றி வருகிருர்கள். மூன்ருவது மகள் செல்வி N. பத்மினி B. SC., B. T. (M. A.) ஆசிரியையாகப் பணியாற்றி வருகிருர். திரு. K. ராமசாமி முதலியார் அவர்களின் ஐந்தாவது மகன் திரு. R. வடிவேல் B. A. அவர்கள் டெபுடி கலெக்டராய் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கிருர். அவர் குமார்த்தி கலைவாணி B. SC., மருமகள் Dr. K. M. காவேரி B. E. (Hons.) படிப்பில் டபுள் கோல்டு மெடலிஸ்ட்.

சீராப்பள்ளி, சிவஞான முதலியார் குமாரர் திரு. சி. சுந்தரராசன் B. SC., B. SC. Tech, அவர்கள் தற்போது சென்னை அடையாறு தொழில்நுட்ப பயிலகத்தில் (Textile Technology) நூற்புப்பயிலக கல்லூரிக்கு (Principal) 'பிரின்ஸிபாலாக' சிறப்புடன் பணி புரிந்து வருகிருர்கள்.

நமது ஊர் பிரமுகர் திரு. கந்தசாமி முதலியார் குமாரர், டாக்டர் க. கலைச்செல்வன் M. B. B. S. அவர்களது மாமனர் டாக்டர் ரங்கராஜன் G. M. V. C., B. V. SC. அவர்கள் சென்னையில் கால்நடை இலாகாவில் கூடுதல் இயக்குனராக சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்ருர்கள்.

நமது ஊரின் பிரமுகர் திரு. S. குப்புசாமி முதலியார் குமாரன் Er. K. சண்முகசுந்தரம் B. E. (Electrical)

மின்சார இலாகாவில் இஞ்ஜினீயராக சேலத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றார்.

மேலும் நம் மாவட்டம் முழுவதும் புதிய சமுதாயத்தை உருவாக்கும் பணியில் கல்லூரிகளிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும். தொடக்கப் பள்ளிகளிலும், எண்ணற்ற நம் சமூகத்தவர் ஆசிரியர்களாகப் பதவி வகித்து வருகிறார்கள். நமது மாவட்ட சங்கச் செயலாளர் புலவர் திரு. சிலம்படியான் மாவட்ட சங்கம் தோன்றக் காரணமாயிருந்தவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது

திருமண மண்டபங்கள்

(1) அம்மாப்பேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபம் தமிழ்நாட்டிலேயே மிகச் சிறப்பு வாய்ந்த முறையில் பெரிய அளவில்அமைந்ததாகும் அதன்தலைவர் திரு K. R. மாணிக்க முதலியார் செயலாளர் திரு. N. M. முருகேச முதலியார், பொருளாளர் திரு. S. P. சம்பந்த முதலியார் ஆவர். ஏககாலத்தில் இரண்டு திருமணங்கள் நடைபெறக் கூடிய வசதிகளுடன் அமைந்துள்ளது. மணமக்கள் உறவினர் தங்குவதற்காக 22 அறைகள் கட்டப்பட்டுள்ளன.

(2) ஸ்ரீராஜேஸ்வரி செங்குந்தர் கல்யாண மண்டபம் அம்மாப்பேட்டையில் அமைந்துள்ள மற்றொரு சிறப்புக்குரிய திருமண மண்டபமாகும்.

(3) சேலம் டவுன் பாவடி செங்குந்தர் கல்யாண மண்டபம் சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தலைவர் திரு P. ராமசாமி முதலியார் B. A. B. L., திரு P. S. மாணிக்க முதலியார் EX. M. C. திரு. ப. கந்தசாமி முதலியார், திரு. A. சின்னதம்பி முதலியார், திரு. T. தர்மலிங்கம் முதலியார் முதலியவர்களின் பெருமுயற்சியால் உருவாக்கப்பட்டு கல்யாண மண்டபம் கட்டப்பட்டு நல்ல முறையில் நடந்து வருகிறது.

(4) திருச்செங்கோடு செங்குந்தர் கல்யாண மண்டபம் மிகச் சிறப்பான முறையில் பெரிய அளவில் காசி விஸ்வநாத முதலியார் M. P. R. அர்த்தனாரி முதலியார், T. C. அண்ணாமலை முதலியார் P, நாகப்ப முதலியார், மற்றும் சமுதாய பெருமக்களால் அமைக்கப்பட்டது.

(5) சேலம் அம்மாப் பேட்டையில் சுகவனேஸ்வரா பஸ் உரிமையாளர்களால் சிவகாமியம்மன் திருமண மண்டபம் எல்லா வசதிகளுடன் கூடியதாக அமைந்துள்ளது. உலகப்புகழ் பெற்ற தாஜ்மஹாலை ஷாஜஹான் கட்டினார். அதற்கடுத்து P.S. கந்தசாமி முதலியார் அவர்கள் தன் மனைவிக்குக் கலையழகு நிரம்பிய கோயிலைக் கட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. அது சிவகாமி அம்மன் கோயிலாக வழங்குகிறது.

வாழ்க செங்குந்தர்!

வெல்க செங்குந்தம்!

சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்
தோற்றமும் வளர்ச்சியும்

— புலவர் சிலம்படியான் பொதுச்செயலாளர்

1976 ஆம் ஆண்டு மே மாதம் சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் திரு. M. P. பொன்னுசாமி முதலியார். திரு. காந்தி. P. சுப்பிர மணியன், புலவர் திரு. சிலம்படியான் ஆகியவர்களால் அமைக்கப்பட்டது.

பின்னர் திரு. P. இராமசாமி முதலியார், B.A., B.L., அவர்கள் தலைவ ராகவும், புலவர் திரு. சிலம்படியான் செயலாளராகவும், திரு. M. தங்கவேல் பொருளாளராகவும் கொண்டு சங்கம் வளரத் தலைப்பட்டது

அடுத்து சேலம் மண்டல செங்குந்த மகாஜன சங்கமாக மாற்றப்பட்டது. தலைவர் திரு. P. இராமசாமி முதலியார் B. A, B. L., செயலாளர் புலவர் திரு. சிலம்படியான், பொருளாளர். திரு. K. T. சம்பந்தம் ஆவார்கள். சங்கம் தளிர்த்து நடைபோடத்தொடங்கியது. கீழ்க்கண்ட ஊர்களில் வாழும் நம் செங்குந்தர் பெருமக்களிடையே இன உணர்ச்சி உண்டானது. கிளைச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

நல்லூர், கந்தம்பாளையம், கோனூர் நத்தமேடு, பவானி, குமாரபாளையம் அத்தனூர், குருசாமிபாளையம், ஆட்டையாம்பட்டி, சங்ககிரி அக்கமாப் பேட்டை, ஆத்தூர், இடைப்பாடி, பள்ளி பாளையம், தாரமங்கலம், தோப்பூர், தொளசம்பட்டி சின்னப்பம்பட்டி. சேலம் நகரம் பாவடித்தெரு, அம்மாப்பேட்டை காமராஜ்நகர் நெசவாளர் காலனி செங்குந்தர் சங்கம், சேலம் நகர செங்குந்தர் நற்பணி மன்றம், மேலும் பல ஊர்களில் கிளைச் சங்கங்கள் தோற்றுவிக்க ஆவன செய்து வருகிறோம். மாதந்தோறும் செயற்குழு கூட்டம் கூட்டி, வரவு— செலவு அங்கீகரித்தல், கிளைச்சங்கம் தோற்றுவித்தல் – நிதி நிலைமையை வளர்த்தல், நம் குலத்தவரிடையே ஒற்றுமை உணர்வுண்டாக்குதல் படித்த வர்களுக்கு வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்தல் போன்ற செயல்களில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது.

அத்தனூரில் ஏற்பட்ட சாதிக் கலவரத்தில் சங்கம் பெருமுயற்சி எடுத்துக்கொண்டதன் பயனாக உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ ஏற்படாமல் பிற சாதியாளரிடமிருந்து நம்மவர்களைக் காக்க முடிந்தது.

நம் குலத்துக் கவிச்சக்கரவர்த்தி யாகிய ஒட்டக்கூத்தருக்கு ் சலம்

நகரிலும் கிளைச்சங்கங்கள் உள்ள ஊர்களிலும் மிகச் சிறப்பான முறையில் விழா எடுத்து வந்தோம்.

தலைமைச் சங்கம் நடத்தும் செயற் குழுவில் சங்க செயலாளர் திரு. புலவர் சிலம்பபடியானும், பொருளாளர் திரு. K. T. சம்பந்தமும் அக்கறையோடு கலந்து கொண்டு சமூக முன்னேற்றத் திற்குப் பல ஆலோசனைகளைக் கூறி வந்தனர். அதன் பயனாகவே தலைமைச் சங்க செயற்குழு, 1981 ஜூன் மாத இறுதியில் சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் கல்யாண மண்டபத்தில் கூடி, 'பொன்விழா' சேலம் அம்மாப்பேட்டையில் நடத்த அனுமதி கொடுத்தது.

1981- டிசம்பர் 12, 13 தேதிகளில் பொன்விழாவும், சேலம் மாவட்ட செங்குந்தர் சமூக மாநாடும் நடத்தும் பொறுப்பை சங்கம் பெருமையோடு ஏற்றுக்கொண்டது.

நமது சமூகப் பெருமக்கள்-கொடை வள்ளல்கள் - தொழில்மேதைகள் – பல துறை வாணிகப் பெருமக்கள் - கல்வியாளர்களைச் கொண்டதாக சங்கம் அமைந்திருக்கிறது. தர்மபுரி மாவட்டச் சங்கம் அமைந்து விட்டதால் சேலம் மண்டல செங்குந்த மகாஜன சங்கம் சேலம் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம் என்ற பெயரில் 1981 ஜூன் மாதம் முதற்கொண்டு செயல் படத்தொடங்கியது.

புரவலர் திரு. A. சங்கர முதலியார் B. A. B. L. தலைவர், திரு. P. இராமசாமி முதலியார் B.A., B.L., துணைத்தலைவர்கள் திரு. K. R. மாணிக்க முதலியார் திரு. பிரபாத் J. K. நாராயண முதலியார், திரு. M. P. R. அர்த்தநாரி முதலியார், திரு. அப்ஸரா A. சுப்பிரமணிய முதலியார், திரு. கோல்டன் M. இராமலிங்க முதலியார், திரு. T. K. சுப்ரமணிய முதலியார், பொதுச் செயலாளர்கள் : புலவர் திரு. K. சிலம்படியான், திரு. A. துரைசாமி, B.A., B.L., துணைச் செயலாளர்கள்: திரு. K. T. சம்பந்தம், திரு. P. சந்திரசேகர முதலியார் B. A. B. L. திரு. T. R. முத்துமாணிக்க முதலியார் M. A. B. L., பொருளாளர்: திரு. S. P. சம்பந்த முதலியார், மற்றும் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் பலரும் சங்க வளர்ச்சிக்கும் பொன்விழா மாநாடு சிறப்புற நடக்கப் பெரிதும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர்.

மேலும், நம் சமூகத்தார்க்கென அறிவும், ஆற்றலும் கொண்ட குலப் பெரியோர்கள் பலரது பெருமுயற்சியால் பாலிடெக்னிக் ஒன்று விரைவில் தொடங்கப்பட உள்ளது என்பதையும் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்

திரு T. V. ராஜமாணிக்க முதலியார்
நேஷனல் ஹோட்டல்
சேலம்

சேலம் அம்மாப்பேட்டை
செங்குந்தர் கல்யாண மண்டப கமிட்டி

சேலம் நகர செங்குந்த மகாஜன சங்கம்
சேலம்

நண்பர்கள் குழு
அம்மாப்பேட்டை, சேலம்–3

சேலம் அம்மாப்பேட்டை காமராஜ் நகர் காலனி
செங்குந்த மகாஜன சங்கம், சேலம்

செங்குந்தர் மகாஜன சங்கம்
ஆத்தூர் கிளை, சேலம் மாவட்டம்

செங்குந்தர் சங்கம்
தாரமங்கலம், சேலம் மாவட்டம்

செங்குந்தர் சங்கம்
மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்

செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்
தஞ்சை மாவட்டம்

கோவை மாவட்ட செங்குந்தர் முன்னேற்ற சங்கம்

பொன்பரப்பி செங்குந்த மகாஜன சங்கம்
(திருச்சி மாவட்டம்)

பட்டீஸ்வரன் சோழன் மாளிகை செங்குந்தர் சங்கம்
(தஞ்சை மாவட்டம்)

கும்பகோணம் செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்

செங்குந்த மகாஜன சங்க செயற்குழு
மதுரை மாவட்டம்

செங்குந்த முன்னேற்ற சங்கம்
லோகநாதபுரம், கோவை



செங்குந்தர் முன்னேற்ற சங்கம்
புளியங்குடி, நெல்லை மாவட்டம்

செங்குந்த மகாஜன சங்கம்
துறையூர் கிளை, திருச்சி மாவட்டம்

செங்குந்தர் சங்கம்
காட்டூர், தஞ்சை

செங்குந்தர் மகாஜன சங்கம்
பேட்டை கிளை, திருநெல்வேலி

அண்ணசாகரம் செங்குந்தர்
மகாஜன சங்கம், தர்மபுரி

செங்குந்தர் மகாஜன சங்கம்
குமாரசாமிபேட்டை, தர்மபுரி

திருச்சி மாவட்ட செங்குந்த
மகாஜன சங்கம், ஜெயங்கொண்டம்

செயற்குழு உறுப்பினர்கள்
சென்னை—செங்கை மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம், சென்னை—15

